REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA
www.thinakaran.lk
/ Thinakaran.lk / ThinakaranLK

2022 ஓகஸ்ட் 30 செவ்வாய்க்கிழமை

# தினகரன்

THINAKARAN
1932 - 2022

வரு. 90 இல. 204 | Tuesday 30, August, 2022 | 24 பக்கங்கள் | 40/-




## கல்முனை தமிழ்ப் பிரிவு விவகாரம்; வெள்ளிக்கிழமைக்குள் நல்ல தீர்வு

### பிரதமர் தினேஷ் குணவர்தன TNA எம்.பிக்களிடம் உறுதியளிப்பு



**லோரன்ஸ் செல்வநாயகம்**

கல்முனை வடக்கு (தமிழ்ப்பிரிவு) பிரதேச செயலகத்தின் பிரச்சினைகள் தொடர்பில் எதிர்வரும் வெள்ளிக்கிழமைக்கிடையில் தீர்க்கமானதொரு நல்ல முடிவை வழங்குவதாக பிரதமரும் உள்நாட்டலுவல்கள் அமைச்சருமான தினேஷ் குணவர்தன உறுதியளித்துள்ளார். 10

எத்தகைய பிரேரணை வந்தாலும்;

## ஜெனீவா அமர்வை எதிர்கொள்ள தயார்

### அது ஒரு சவாலே கிடையாது என்கிறார் பிரதமர்

ஜெனீவா அமர்வில் இலங்கைக்கு எதிராக எத்தகைய பிரேரணைகள் வந்தாலும் அது சவாலாக அமையாது என்று பிரதமர் தினேஷ் குணவர்தன தெரிவித்துள்ளார்.

இம்முறை ஜெனீவா அமர்வு இலங்கைக்குச் சவாலாக அமையாது என்று ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தெரிவித்திருந்த நிலையில், பிரதமரும் அதையொத்த கருத்தை வெளியிட்டுள்ளார். மேலும் தெரிவிக்கையில்,"ஜெனீவாவில் அடுத்த மாதம் நடைபெறவுள்ள ஐ.நா. 10

இலாபமீட்டும் நிறுவனமாக மாற்றும் நடவடிக்கையாக

## மின்சார சபை மறுசீரமைப்பு திட்டம் இரண்டு மாதங்களில் பாராளுமன்றுக்கு

### அமைச்சர் கஞ்சன பாராளுமன்றில் நேற்று அறிவிப்பு



மின்சார சபை மறுசீரமைப்புத் திட்டம் இரண்டு மாதங்களில் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும் என மின் சக்தி எரிசக்தி அமைச்சர் கஞ்சன விஜேசேகர பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

நட்டமீட்டும் நிறுவனத்தை லாபமீட்டும் நிறுவனமாக மாற்றும் நடவடிக்கையாக இலங்கை மின்சார சபை மறுசீரமைப்பு செய்யப்படவுள்ளது என தெரிவித்த அமைச்சர், அது தொடர்பில் எட்டுப் பேர் கொண்ட விசேட குழு ஒன்று 10

# அரசாங்கத்தின் இடைக்கால வரவு செலவுத் திட்ட மதிப்பீடு இன்று





### நிதியமைச்சர் ஜனாதிபதி ரணிலினால் பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பு

### மதிப்பீடு தொடர்பான விவாதம் நாளை 31 மற்றும் செப்டெம்பர் 01, 02 ஆம் திகதிகளில்

**லோரன்ஸ் செல்வநாயகம்**

அரசாங்கத்தின் இடைக்கால வரவு செலவுத் திட்ட மதிப்பீடு இன்று ஜனாதிபதியும் நிதியமைச்சருமான ரணில் விக்கிரமசிங்கவினால் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ளது.

இன்று பிற்பகல் 1.00 மணிக்கு ஜனாதிபதி மேற்படி திருத்த சட்ட மூலத்தை சபையில் சமர்ப்பித்து அதன் மீதான உரையை நிகழ்த்தவுள்ளார்.

அது தொடர்பான விவாதம் நாளை 31ஆம் திகதி மற்றும் எதிர்வரும் செப்டெம்பர் 1ஆம் 2ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளன. 2022ஆம் நிதியாண்டின் 10

## ஜனாதிபதி ரணிலின் கடிதம் சவூதி இளவரசரிடம் கையளிப்பு

### விசேட தூதுவராக சென்ற அமைச்சர் நஸீர் அஹமட் வழங்கினார்



ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவினால் சவூதி அரசாங்கத்துக்கு எழுதிய கடிதம், முடிக்குரிய இளவரசரும் பிரதிப்பிரதமரும் மற்றும் பாதுகாப்பு அமைச்சருமான முஹம்மட் பின் சல்மான் பின் அப்துல் அஸீஸிடம் கையளிக்கப்பட்டுள்ளது.

இக்கடிதத்தை, முடிக்குரிய இளவரசர் சார்பாக, சவூதி அரேபியாவின் பிரதி 10

மன்னார், கிளிநொச்சி மாவட்டங்களில்

## இரு மின் உற்பத்தி நிலைய அனுமதி தற்காலிகமானதே

### அதானி நிறுவன செயற்பாடு குறித்து கஞ்சன



மன்னார் மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களில் இரண்டு காற்றாலை மின் உற்பத்தி நிலைய செயற்றிட்டங்களை செயல்படுத்த, அதானி கிறீன் எனர்ஜி நிறுவனத்துக்கு தற்காலிக அனுமதியே வழங்கப்பட்டுள்ளதாக மின்சக்தி, எரிசக்தி அமைச்சர் கஞ்சன விஜேசேகர 10

## நீர் கட்டணத்தை செலுத்தாத எம்.பிமாருக்கு தாமத கட்டணம்

### இரண்டரை சதவீத கட்டணத்தை அறவிட தீர்மானம்



எதிர்காலத்தில் மேற்கொள்ளப்படவுள்ள உடன்படிக்கையின் பிரகாரம், இரண்டு மாதங்களுக்கும் மேலாக நீர் கட்டணத்தை செலுத்த தவறிய பாராளுமன்ற உறுப்பினர்களின் குடியிருப்புகளுக்கான நீர் விநியோகத்தை துண்டிப்பதற்கு பொது நிர்வாக அமைச்சின் செயலாளரினால் பணிப்புரை 10

## திட்டமிட்ட குற்றங்களை தடுக்க விசேட தேடுதல்

### பொலிஸார் அதிரடி நடவடிக்கை ஏற்பாடு

திட்டமிட்ட குற்றங்களைத் தடுப்பதற்காக விசேட தேடுதல் நடவடிக்கைகளை முன்னெடுக்கவுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

திட்டமிட்ட குற்றங்கள் தொடர்பில் புலனாய்வுத் தகவல்களை பெற்றுக்கொள்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

தென் மாகாணத்திற்கு மாத்திரம் 200க்கும் மேற்பட்ட விசேட பொலிஸ் உத்தியோகத்தர்கள் 10

## முட்டைக்கான கட்டுப்பாட்டு விலையில் விரைவில் திருத்தம்

### உணவுப் பாதுகாப்பு அமைச்சு அறிவிப்பு



அடுத்த இரண்டு வாரங்களில் முட்டைக்கான கட்டுப்பாட்டு விலை திருத்தம் செய்யப்படும் என வர்த்தகம் மற்றும் உணவுப் பாதுகாப்பு அமைச்சு அறிவித்துள்ளது.

பல்பொருள் அங்காடிகளில் விற்கப்படும் பொதி செய்யப்பட்ட முட்டைகளுக்கான தற்போதைய கட்டுப்பாட்டு விலை நியாயமற்றது என்பதால், 10

யுனிசெப், உலக உணவுத் திட்டம் உட்பட பல நிறுவனங்கள் ஒத்துழைப்பு;

## பாடசாலை மாணவர்களுக்கு மீண்டும் பகலுணவு செயற்திட்டம்



### பாராளுமன்றில் அமைச்சர் சுசில் நேற்று தெரிவிப்பு

**லோரன்ஸ் செல்வநாயகம்**

பாடசாலை மாணவர்களுக்கு பகல் உணவு மற்றும் திரிபோச போன்ற சத்துணவுகளை வழங்குவதற்கான நடவடிக்கைகளை அரசாங்கம் முன்னெடுத்துள்ளது என சபை முதல்வரும் கல்வி அமைச்சருமான சுசில் பிரேம ஜயந்த 10

நாட்டின் தற்போதைய பொருளாதார அரசியல் நிலைமை;

## இலங்கை வந்துள்ள ஜெனீவாவின் பிரதிநிதிகளுக்கு அலிசப்ரி விளக்கம்



ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 51வது அமர்வுகளுக்கு முன்னதாக, இலங்கை வந்துள்ள ஜெனிவா பிரதிநிதிகள், இலங்கையின் வெளியுறவு அமைச்சர் அலி சப்ரியை சந்தித்துள்ளனர்.

ஜெனிவா பிரதிநிதிகள் குழு தலைவர் ரோரி முன்கோவன் மற்றும் பிற உறுப்பினர்களை சந்தித்த அலி சப்ரி விரிவான விளக்கங்களை வழங்கியுள்ளார். இதன்போது நாட்டின் தற்போதைய பொருளாதார வீழ்ச்சி 10

கேட்டரிங் சேவை மற்றும் விமான நிலைய நடவடிக்கைகள்;

## ஸ்ரீலங்கன் விமானத்தின் 49 சதவீத பங்குகள் முதலீட்டாளர் ஒருவருக்கு

### விலை மனுக்களை கோர தீர்மானம் என்கிறார் அமைச்சர் நிமல்



ஸ்ரீலங்கன் கேட்டரிங் நிறுவனத்தின் 49 சதவீத பங்குகளையும் அதன் நிர்வாகத்தையும், விமான நிலைய நடவடிக்கைகள் மற்றும் அதன் நிர்வாகத்தின் 49 சதவீத 10

## இடது காலால் எழுதி 3A சித்திபெற்று திரும்பிப் பார்க்க வைத்த மாணவி



எஹேலியகொட பிரதேசத்தில் கைகள் மற்றும் ஒரு காலின்றி பிறந்து தன் இடது காலை மட்டும் எழுதுவதற்காக பயன்படுத்திய மாணவி ஒருவர் உயர்தர பரீட்சையில் சிறந்த சித்தியை பெற்றுள்ளார்.

எஹேலியகொட தேசிய பாடசாலையில் கல்வி கற்ற ரஷ்மி நிமேஷா குணவர்தன என்ற மாணவி உயர்தர வர்த்தக பிரிவில் 3 A சித்திகளை பெற்றுள்ளார்.

2002ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 23ஆம் திகதி பிறந்த ரஷ்மி, தெல்ஒழுவ பாடசாலையில் ஆரம்ப கல்வியை தொடர்ந்தார்.

2012ஆம் ஆண்டு 5ஆம் வகுப்பு புலமை பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த பின்னர் எஹேலியகொட தேசிய பாடசாலையில் மேலதிக கற்கை நடவடிக்கைகளை 10

## முன்னாள் ஜனாதிபதி விரைவில் நாடு திரும்புவார்

### SLPP செயலாளர் சாகர தெரிவிப்பு



முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ விரைவில் இலங்கைக்கு திரும்பவுள்ளதாக ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் செயலாளர் நாயகம் சாகர காரியவசம் எம்.பி தெரிவித்துள்ளார்.

நேற்று (29) இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்ட போதே செயலாளர் நாயகம் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

மேலும் கருத்து தெரிவித்த ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் செயலாளர் நாயகம் சாகர காரியவசம், முன்னாள் ஜனாதிபதி இலங்கையை விட்டு வெளியேறிய நிலைமையை நாம் அனைவரும் அறிவோம்.

ஒரு முன்னாள் ஜனாதிபதிக்கு பொருத்தமான பாதுகாப்பு மற்றும் வசதிகள் 10

மாவின் விலை கட்டுப்படாவிட்டால்

## பாணின் விலையை அதிகரிக்க தீர்மானம்

### ரூ. 60ஆல் அதிகரிக்க நேரிடலாம்



நாளாந்தம் அதிகரித்து வரும் கோதுமை மாவின் விலையை மூன்று நாட்களுக்குள் கட்டுப்படுத்தாவிட்டால், ஒரு இறாத்தல் பாணின் விலை 60 ரூபாவினாலும், பனிஸ், கறி பனிஸ் போன்ற சிற்றுண்டிகளின் விலைகளை 30 ரூபாவினாலும் அதிகரிக்க நேரிடும் என அகில இலங்கை பேக்கரி உரிமையாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

டொலர் நெருக்கடி காரணமாக சந்தையில் மாவின் விநியோகம் பாதியளவு குறைந்துள்ளதாக சங்கத்தின் தலைவர் என்.கே.ஜயவர்தன 10

இலங்கைக்கான விரிவான திறன் அபிவிருத்தி;

## இந்திய உள்துறை அமைச்சரை சந்தித்துரையாடிய ஆளுநர் ஜீவன்



இந்திய குஜராத்தில் உள்ள காந்தி தேசிய தடையியல் அறிவியல் பல்கலைக்கழகத்தில் இடம்பெற்ற பட்டமளிப்பு விழாவில் கலந்து கொண்ட வட மாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜா, இந்திய உள்துறை அமைச்சரை சந்தித்து கலந்துரையாடியுள்ளார். இப் பட்டமளிப்பு விழா ஞாயிற்றுக்கிழமை (28) நடைபெற்றுள்ளது. இப் பட்டமளிப்பு விழாவில் முதன்மை விருந்தினராக 10

# போராட்ட களங்கள் கண்ட மாபெரும் தொழிற்சங்க போராளி



# அமரர் சௌமியமூர்த்தி தொண்டமான்

கொள்கையில் தெளிவு!
நெஞ்சிலே துணிவு!
செயலிலே வேகம்!
ஓயாத உழைப்பு!
தளராத நம்பிக்கை!

## தொழிற்சங்க உலகில் உச்சத்தை தொட்டவர்

14வயது தொடங்கி
87 வயது வரை
73 வருட காலம்,
பொது வாழ்வில்
தன்னை ஈடுபடுத்திக்
கொண்ட பிதாமகன்;

## இன்று அவரின் 109வது ஜனன தினம்

மலையக மக்களின் பெரும் சொத்தாகவும், மலையக அரசியல் தொழிற்சங்க பிதாமகனாகவும் விளங்கியவர் அமரர் சௌமியமூர்த்தி தொண்டமான். அடிமட்டம் முதல் உயர்மட்டம் வரை மக்களின் நன்மதிப்பையும், சர்வதேச மட்டத்திலும் ஏற்றுக் கொள்ளப்பட்ட உன்னத தலைவன். இன்று அவரது (30.08.2022) 109வது ஜனன தினம்.

கொள்கையில் தெளிவு, நெஞ்சிலே துணிவு! செயலிலே வேகம்! ஓயாத உழைப்பு, தளராத நம்பிக்கை இத்தகைய ஐந்து அம்சங்களைக் கொண்டு தொழிலாளர்களுக்காக போராடப் புறப்பட்டவர் தொழிற்சங்க மாவீரர் அமரர் சௌமியமூர்த்தி தொண்டமான்.

இலங்கை வாழ் இந்திய வம்சாவளி மக்களது உரிமைகளுக்காகவும் பாதுகாப்பிற்காகவும் 1939 ஆம் ஆண்டு இலங்கை இந்திய காங்கிரஸ் நிறுவப்பட்டது. இதில் தோட்ட தொழிலாளர்கள், பலதுறைகளை சார்ந்த தொழிலாளர்கள், வர்த்தக பெருமக்கள் ஆகியோரும் பங்குவகித்தனர். இலங்கை இந்திய காங்கிரஸ் சார்பில் போட்டியிட்டு வெற்றியீட்டிய 7 உறுப்பினர்களில் அமரர் சௌமியமூர்த்தி தொண்டமானும் ஒருவர்.

இலங்கை வாழ் இந்திய வம்சாவளி மக்களது வாக்குரிமையும் நாட்டுரிமையும் இலங்கையில் அன்றைய அரசாங்கத்தால் அபகரிக்கப்பட்டன. மலையக பெருந்தோட்டத்துறை மக்கள் அன்று அரசாங்கத்தாலும் தோட்ட நிர்வாகங்கள், கம்பனிகளாலும், மனிதாபிமானமற்ற முறையில் நடத்தப்பட்டார்கள். பாகுபாடுகள், பாரபட்சங்கள், ஒடுக்குமுறைகள், பழிவாங்கல்கள் ஆகியவை இவர்களால் கட்டவிழ்க்கப்பட்டன.

ஆங்காங்கே கண்டனக் கூட்டங்களும் விழிப்புணர்ச்சிக் கூட்டங்களும் பரவலாக நடத்தப்பட்டன. இதேவேளை பெருந்தோட்டங்களில் தொழிலாளர்கள் திடீர், திடீர் என வேலையில் இருந்து நீக்கப்படுவது, தோட்டங்களில் இருந்து விரட்டப்படுவது, அடிப்படை உரிமைகள் மறுக்கப்படுவது, தொழிலாளர் சமூகம் நசுக்கப்படுவது போன்றவற்றுக்கு கடும் ஆட்சேபனைகள் தெரிவித்து இந்த காலகட்டங்களில் பல்வேறு வேலை நிறுத்தப் போராட்டங்கள் நடத்தப்பட்டன.

இவற்றில் குறிப்பிடத்தக்கது உருளைவள்ளிப் போராட்டம், மடக்கும்புர போராட்டம், மடுல்கலை கலாபொக்க போராட்டம் ஆகியவை இவற்றில் முக்கியத்துவம் பெறுகின்றன.

### தோட்ட தொழிலாளர்களின் நிர்ணய சம்பள கோட்பாடு

மலையக பெருந்தோட்டங்கள் காலனித்துவ காலத்தில் ஆங்கிலேயரின் நிர்வாகத்தின் கீழும், நிறுவனங்களின் கீழும் செயல்பட்டன. சுதேசிகளுடைய நிர்வாகங்களுக்குக் கீழும் இயங்கி வந்துள்ளன. ஆனால் அக்காலத்தில் தோட்டத் தொழிலாளர்களுக்கு, நிர்ணயிக்கப்படாத நிரந்தரமற்ற சம்பளமே வழங்கப்பட்டு வந்தன.

தோட்டங்கள் அரசுடைமையாக்கப்பட்ட பின்னரும் 'உசவசம, ஜனவசம' ஆகிய அரச நிறுவனங்களுக்கு கீழ் தோட்டங்கள் நிர்வகிக்கப்பட்டன. இக்காலகட்டங்களில் கூட தொழிலாளர்களது மாத சம்பளம் நிர்ணயிக்கப்படவில்லை. எவ்வாறாயினும் தனியார்துறையாக இருந்த போதும், அரசதுறையாக இருந்த போதும் காத்திரமான போராட்டங்கள் நடத்தப்பட்டன. பேச்சுவார்த்தைகளும் இடம்பெற்றுள்ளன. எனினும் காரியம் கைகூடவில்லை.

வரட்சி காலத்திலும், மழை காலத்திலும் சம்பளத்தில் எந்தவித மாற்றமும் ஏற்படுத்தப்படவில்லை. அதேவேளை ஒருநாள் பேருக்கு எடுக்கப்பட வேண்டிய கொழுந்தின் எடையிலும் ஒரு கட்டுப்பாடு விதிக்கப்படவில்லை. ஒருநாள் பேருக்கு 25 தொடக்கம் 30 இறாத்தல் கொழுந்து பறிக்கப்பட வேண்டும் என கொண்டு வந்தார்கள். இதே போன்று பல தோட்டங்களிலும் ஒருநாள் பேருக்கு எடுக்கப்பட வேண்டிய எடையை ஒரேவிதமாக கொண்டிருக்கவில்லை. அவற்றில் சில தோட்டங்களில் ஒருநாள் பேருக்கு கூடுதலான கொழுந்தை பறிக்க வேண்டுமென தோட்ட நிர்வாகம் நிர்ப்பந்தித்தது. குறைவாக பறிக்கப்பட்ட கொழுந்திற்கு 'அரை பேர்' போடப்பட்டது.

இந்த விதமான தோட்ட நிர்வாகங்களின் கெடுபிடிகளின் மத்தியில் அவர்களின் விமோசனம் அளிக்கும் திட்டமாகவும், தொழிலாளர்களுக்கு ஒரு நியாயபூர்வமான ஒரு சம்பளத்தினை கூட்டு ஒப்பந்தத்தின் ஊடாக பெற்றுக் கொடுக்க வேண்டும் என்ற உயரிய நோக்கத்துடன் அமரர் சௌமியமூர்த்தி தொண்டமானின் தலைமையில், சம்பள கூட்டு உடன்படிக்கை ஒன்றை ஏற்படுத்த முதலாவது கூட்டு ஒப்பந்தம் 1967ம் ஆண்டு ஏற்படுத்தப்பட்டது.

இந்த கூட்டு உடன்படிக்கையானது தோட்டத் தொழிலாளர்களின் மத்தியில் ஒரு சக்தி வாய்ந்த ஆயுதம். இதனை இழந்து விட்டால் பல வழிகளிலும் தொழிலாளர்கள் வஞ்சிக்கப்பட்டும், ஏமாற்றப்பட்டும், ஒடுக்கப்பட்டும் விடுவார்கள். இதை தொழிற்சங்கங்களுக்குள் பிரவேசிக்கும் எவரும் மறந்துவிட முடியாது.

கூட்டு ஒப்பந்தத்தின் செயற்பாட்டால் நிர்வாகங்கள் நிர்பந்திக்கப்படுகின்றன. இல்லையேல் தோட்டத் தொழிலாளர்கள் கொத்தடிமைகளாக பழிவாங்கப்பட்டிருப்பார்கள். அமரர் சௌமியமூர்த்தி தொண்டமானின் சாதுரியத்தாலும், அணுகுமுறையாலும் தான் தொழிலாளர்களின் ஒட்டுமொத்தப்பலம் தோட்ட நிர்வாகங்களுக்கும் எடுத்துக் காட்டப்பட்டுள்ளது. இந்தப் பலத்துக்கு அஞ்சியே முதலாளிமார் சம்மேளனம் தோட்டக் கம்பனிகள், நிர்வாகங்கள் சம்பள உயர்வுகளை உயர்த்துவதற்கு முன்வருகின்றன. இது தொழிலாளர்களுக்கு ஒரு பிடிமானமாகும்.

இதற்குப் பின்னதாக இந்த நாட்டில் அரசியல் ரீதியாக பல மாற்றங்கள் ஏற்பட்டன. காலத்தின் நிர்ப்பந்தத்தாலும் ஏற்பட்ட இந்த மாற்றங்களின் விளைவாக அமரர் சௌமியமூர்;த்தி தொண்டமான் நியமன அங்கத்தவராக பதவிப்பிரமாணம் செய்து கொண்டார்.

ஸ்ரீமா சாஸ்திரி ஒப்பந்தத்தின் அடிப்படையில் மலையக தமிழர்களின் ஒரு பகுதியினருக்கு இலங்கை பிரஜாவுரிமையும் மற்றொரு பகுதியினருக்கு இந்திய பிரஜாவுரிமையும் வழங்கப்பட்டன. இந்த காலகட்டத்தில் இலங்கை வாக்குரிமை பெற்ற மக்களின் சார்பில் இ.தொ.கா அரசியல் பிரிவு தேர்தல் களத்தில் குதித்து பல வெற்றிகளை பெற்றுவந்துள்ளது.

இன்று மலையக தமிழர், அமைச்சர்களாகவும், பிரதி அமைச்சர்களாகவும், மாகாணசபை அமைச்சர்களாவும், மாகாணசபை, பிரதேச சபை, உறுப்பினர்களாகவும் தேர்ந்தெடுக்கப்படுவதற்கு முன் உதாரணம் மலையகத்தைப் பொறுத்தமட்டில் அமரர் சௌமியமூர்த்தி தொண்டமானே என்பதில் எவ்வித மாற்றுக் கருத்துகளும் இருக்காது. இலங்கையில் முதன் முறையாக மலையகத்தில் அமைச்சராக நியமிக்கப்பட்டவர் அமரர் சௌமியமூர்த்தி தொண்டமான். இ.தொ.கா தலைவராக இருந்த போதும் உலகத் தலைவர்கள், சர்வதேச தொழிற்சங்க பிரமுகர்கள் ஆகியோரை சந்தித்து பெருந்தோட்டத்துறை மக்களின் கஷ்டங்களையும், அவலங்களையும் வெளிப்படுத்தி இவர்களது மேம்பாட்டிற்காக சர்வதேச மட்டத்தில் குரல் எழுப்பி வந்துள்ளார்.

இன்று தமிழர்கள் தலைநிமிர்ந்து வாழக்கூடிய ஒரு நல்ல சூழலை ஏற்படுத்தியவர் அவரே,











தேவதாஸ் சவரிமுத்து
சிரேஷ்ட ஊடக இணைப்பாளர்

























தினகரன் விளம்பரம் 0112429367
விற்பனை பிரிவு 0112429444, 0112429378
ஆசிரியபீடம் editor.tkn@lakehouse.lk

# தினகரன்
THINAKARAN
திනකරන්

2022 ஒகஸ்ட் 30 செவ்வாய்க்கிழமை



**தொழுகை நேரம்**

10 முதல் 13 வரை

| | |
|---|---|
| சுபஹ் | 05.04 |
| லுஹர் | 12.22 |
| அஸர் | 03.38 |
| மஃரிப் | 06.22 |
| இஷா | 07.32 |

**இன்றைய சுபதினம்**

சுபகிருது வருடம் சித்திரை 5

ராகுகாலம் : பகல் : 1.30 - 3.00வரை
சுபநேரம் : காலை : 10.30 - 12.00வரை

யோகம்: சித்தயோகம்

திதி: சஷ்டி

**இராசி பலன்கள்**

| | |
|---|---|
| மேஷம் | செலவு |
| ரிஷபம் | பாராட்டு |
| மிதுனம் | தனம் |
| கடகம் | போட்டி |
| சிம்மம் | கோபம் |
| கன்னி | முயற்சி |
| துலாம் | நன்மை |
| விருச்சிகம் | நிறைவு |
| தனுசு | வெற்றி |
| மகரம் | பொறுமை |
| கும்பம் | மறதி |
| மீனம் | சுகம் |

கலாநிதி இராமச்சந்திரகுருக்கள் (பாபு சர்மா)

# வேலையற்ற பட்டதாரிகளுக்கு விரைவில் அரச நியமனம்

*பிரதமர் தினேஷ் குணவர்தன*



பல்வேறு காரணங்களால் நியமனம் கிடைக்காத பட்டதாரிகளுக்கு விரைவில் நியமனம் வழங்கப்படும் என பிரதமர் தினேஷ் குணவர்தன தெரிவித்துள்ளார்.

நேற்று பாராளுமன்றத்தில் உரையாற்றிய பிரதமர், பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர் என்ற ரீதியில் வேலையற்ற பட்டதாரிகளுக்கு நியமனம் வழங்குவதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என கூறியுள்ளார்.

தற்போது வேலையில்லாமல் இருக்கும் 461 பேருக்கு வேலை வாய்ப்பை வழங்குவதற்கு அமைச்சின் செயலாளர் ஏற்கனவே கலந்துரையாடலை ஆரம்பித்துள்ளதாக பிரதமர் தினேஷ் குணவர்தன தெரிவித்துள்ளார்.

பொது நிர்வாக அமைச்சின் கீழ் உள்ள திணைக்களங்களில் தற்போது பணிபுரியும் அனைத்து தகுதி வாய்ந்த நபர்களுக்கும் நிரந்தர வேலை வழங்குவது குறித்து அமைச்சின் செயலாளர் ஆராய்ந்து வருவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# இரத்மலானை ரயில்வே தொழில் தளத்தை பாதுகாப்பதற்கு விசேட செயற்றிட்டம்

இயந்திரங்களை பழுதுபார்க்கும் இரத்மலானை பொது ரயில்வே பாரிய வேலைத்தளத்தை திருடர்களிடமிருந்து பாதுகாப்பதற்கு விஷேட பாதுகாப்பு நடவடிக்கைகள் தயாரிக்கப்படவுள்ளன.

பிரித்தானியர் காலத்தில் 34 ஏக்கரில் ஆரம்பிக்கப்பட்ட இந்த தொழிற்சாலை, ஆசியாவின் பாரிய வளம் எனக்கருதப்படுகிறது. இங்கு இயந்திரங்களை பழுதுபார்க்கும் சுமார் 34 தொழிற்சாலைகள் இயங்கிவருகின்றன.இங்குள்ள இயந்திரங்கள், உள்ளிட்ட சொத்துகளுக்கு கள்வர்களால் பெரும் அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது.

10



## புகைப்பட கலைஞர் டொனால்ட் காலமானார்



முன்னாள் புகைப்பட கலைஞர் டொனால்ட் கருணாரத்ன காலமானார். அவர் தனது 77 ஆவது வயதில் அமெரிக்காவின் லாஸ் ஏஞ்சல்ஸ் நகரில் காலமாகியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

**மின்சார கட்டண அதிகரிப்பு**

# அடிமட்ட மக்களுக்கு நிவாரணம் வழங்க அரசு முன்வர வேண்டும்

*முன்னாள் அமைச்சர் மஹிந்தானந்த அலுத்கமகே*

**லோரன்ஸ் செல்வநாயகம்**



மின்சார கட்டணம் அதிகரிக்கப்பட்டுள்ள நிலையில் அடிமட்ட மக்களுக்கு நிவாரணம் வழங்குவது உறுதிப்படுத்தப்பட வேண்டும் என முன்னாள் அமைச்சர் மஹிந்தானந்த அலுத்கமகே எம்.பி பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

உற்பத்தி செலவு மற்றும் விற்பனை மூலமான வருமானத்திற்கு இடையில் ஏற்பட்டுள்ள பாரிய வித்தியாசம் காரணமாக மின் கட்டண அதிகரிப்பு தவிர்க்க முடியாதது என தெரிவித்துள்ள அவர், கீழ்மட்ட மக்களுக்கு நிவாரணம் வழங்கப்படுவது அவசியம் என்றும் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று இடம்பெற்ற மின்சார கட்டணம் தொடர்பான சபை ஒத்திவைப்பு வேளை விவாதத்தில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அது தொடர்பில் தொடர்ந்தும் உரையாற்றிய அவர்:

10 வருடங்களின் பின்னரே தற்போது மின்சார கட்டணம் அதிகரிக்கப்படுகிறது.

இதனால் கீழ்மட்ட மக்கள் பெரும் பாதிப்பை எதிர்நோக்குவதுடன் அது தொடர்பில் சமூக வலைத்தளங்களில் விமர்சனங்களும் முன்வைக்கப்பட்டு வருகின்றன. வேறு மாற்று வழி கிடையாது என்பதால் கட்டண அதிகரிப்பு மேற்கொள்ளப்படுகிறது.

10

# மத்திய வங்கி ஆளுநர் தலைமையிலான கலந்துரையாடல் ஒத்திவைப்பு

**லோரன்ஸ் செல்வநாயகம்**



நாட்டின் பொருளாதார நிலை மற்றும் முன்னோக்கிய வழி எனும் தலைப்பில் மத்திய வங்கி ஆளுநர் நந்தலால் வீரசிங்க தலைமையில் இன்று 30 ஆம் திகதி பிற்பகல் 2.00மணிக்கு பாராளுமன்ற கட்டத்தொகுதியில் இடம்பெறவிருந்த கலந்துரையாடல் தவிர்க்க முடியாத காரணங்களால் ஒத்திப்போடப்பட்டுள்ளதாக பிரதி சபாநாயகர் அஜித் ராஜபக்ச சபையில் தெரிவித்தார்.

இந்த கலந்துரையாடல் நாளை 31 ஆம் திகதி புதன்கிழமை முதல் மாலை 4.30 மணி வரை பாராளுமன்ற குழு அறை இலக்கம் 1 இல் நடைபெறும் எனவும் பிரதி சபாநாயகர் மேலும் தெரிவித்தார்.

நிதி விடயங்கள் தொடர்பான எதிர்கால பாராளுமன்ற விவாதங்களில் பாராளுமன்ற உறுப்பினர்கள் வினைத்திறனாக பங்குபற்றுவதற்கு பயனுள்ள வகையில், நாட்டின் தற்போதைய பொருளாதார நிலை

மற்றும் முன்னோக்கிய வழி பற்றிய உரையாடலுக்கான சந்தர்ப்பத்தை ஏற்படுத்தும் நோக்கில் நடத்தப்படும் இந்தக் கலந்துரையாடலை மத்திய வங்கி ஆளுநர் நந்தலால் வீரசிங்க நடத்தவுள்ளார்.

இலங்கைக்கு கடத்தப்படவிருந்த

## பெருந்தொகை பீடி இலைகள் சிக்கின

**தூத்துக்குடி பொலிஸார் அதிரடி**



தமிழக தூத்துக்குடியிலிருந்து இலங்கைக்கு கடத்தப்படவிருந்த சுமார் 28 இலட்சம் ரூபா பெறுமதியான பீடி இலைகள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளதாக இந்திய ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

தூத்துக்குடி தருவைக்குளம் பொலிஸாரினால் மேற்கொள்ளப்பட்ட கண்காணிப்பு நடவடிக்கையின்போது, தெற்கு

10

# சபை குழுவில் பணியாற்றுவதற்காக பாராளுமன்ற உறுப்பினர்கள் நியமனம்

**லோரன்ஸ் செல்வநாயகம்**

117 ஆம் இலக்க நிலையியற் கட்டளை ஏற்பாடுகள் மற்றும் 2022 ஆகஸ்ட் மாதம் 10 ஆம் திகதி பாராளுமன்றத்தினால் நிறைவேற்றப்பட்ட பிரேரணை என்பனவற்றிற்கு அமைவாக சபைக் குழுவில் பணியாற்றுவதற்காக சபாநாயகரை தவிசாளராக கொண்ட குழுவில் பணியாற்றுவதற்கு

உறுப்பினர்கள் தெரிவுக் குழுவினால் பெயர்குறித்து நியமிக்கப்பட்டுள்ளதாக பிரதி சபாநாயகர் அஜித் ராஜபக்ஷ பாராளுமன்றத்தில் அறிவித்தார். அதற்கிணங்க பாராளுமன்ற உறுப்பினர்களான, ஏ. எல். எம். அதாஉல்லா, சந்திம வீரக்கொடி, பிரேமலால் ஜயசேகர, வீ. இராதாகிருஷ்ணன், சுதர்ஷினி

பெர்னாண்டோபுள்ளே, ஜே.சீ. அலவத்துவல, நிமல் லான்சா, பியல் நிசாந்த டி சில்வா, ஜயந்த கெட்டகொட, சார்ள்ஸ் நிர்மலநாதன், ஜகத் குமார சுமித்ராரச்சி, கிங்ஸ் நெல்சன், முதிதா பிரிசாந்தி, மர்ஜான் பளீல் ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர்.

# காரைதீவு விபுலானந்தாவில் 04 மருத்துவம் 01 பொறியியல்

**(காரைதீவு குறூப் நிருபர்)**







நேற்று முன்தினம் வெளியான க.பொ.த. உயர்தரப் பரீட்சை முடிவுகளின்படி காரைதீவு விபுலானந்தா தேசிய பாடசாலையில் 4 மாணவிகள் மருத்துவ துறைக்கும், ஒரு மாணவி பொறியியல் துறைக்கும் தெரிவு செய்யப்பட்டுள்ளதாக அதிபர் ம.சுந்தரராஜன் தெரிவித்தார்.

மாணவிகளான லோகநாதன் புவித்ரா, சகாதேவராஜா டிவானுஜா, தங்கவடி

10

# முன்னாள் அமைச்சர் அஸ்வரின் 5 ஆவது நினைவு தினம்

**(எம்.எஸ்.எம்.ஸாகிர்)**



முன்னாள் அமைச்சர் மர்ஹூம் ஏ.எச்.எம். அஸ்வரின் 5 ஆவது நினைவு தினம் நாளை புதன்கிழமை (31) மாலை 4.00 மணிக்கு கொழும்பு 08, நாரஹேன்பிட்டி எல்விடிகல அகில இலங்கை முஸ்லிம் லீக் வாலிப முன்னணிகளின் சம்மேளனத்தின் தலைமையகத்தில் இடம்பெறும்.

இந்நிகழ்வில் பலஸ்தீனின் இலங்கைத் தூதுவர் சுஹைர் முஹம்மட் ஹம்தல்லாஹ் ஸெய்ட் பிரதம அதிதியாகவும் கொழும்பு மாநகர பிரதிமேயர் எம்.ரீ.எம். இக்பால் கௌரவ அதிதியாகவும் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

நினைவுப் பேருரையை இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் தலைவர் ஹட்சன் சமரசிங்க நிகழ்த்தவிருப்பதாக அகில இலங்கை வாலிப முன்னணிகளின் சம்மேளனத்தின் பொதுச் செயலாளர் அஹ்மத் முனவ்வர் தெரிவித்தார்.

# பாராளுமன்ற நுழைவாயில் பகுதியில் எதிர்க்கட்சியினர் ஆர்ப்பாட்டம்

**லோரன்ஸ் செல்வநாயகம்**

மின் கட்டண அதிகரிப்பு மற்றும் அத்தியாவசிய உணவுப் பொருட்களின் விலைகள் அதிகரிப்புக்கு எதிர்ப்புத் தெரிவித்து பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி நேற்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டது.

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச உள்ளிட்ட ஐக்கிய மக்கள் சக்தியின் உறுப்பினர்கள் இணைந்து இந்த ஆர்ப்பாட்டத்தினை பாராளுமன்ற நுழைவாயில் பகுதியான ஜயந்திபுர சந்தியில் நேற்று திங்கட்கிழமை காலை முன்னெடுத்தனர்.

மின் கட்டண அதிகரிப்பு மற்றும் அத்தியாவசிய உணவுப் பொருட்களின் விலை அதிகரிப்பு உள்ளிட்டவற்றிற்கு எதிர்ப்பு தெரிவித்தும், அவற்றின் விலைகளை குறைக்குமாறு கோரியும் இந்த ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது.

பதாகைகளை ஏந்தியவாறும் கோஷங்களை எழுப்பியவாறும் எதிர்க்கட்சியினர் சிறிது நேரம் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட பின்னர் பாராளுமன்ற அமர்வில் பங்கேற்றனர். எதிர்க்கட்சியினர் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டதால் பாராளுமன்ற நுழைவாயில் பகுதியில் பொலிஸார் பாதுகாப்பு நடவடிக்கைகளை பலப்படுத்தியிருந்தனர்.

**22 ஆவது திருத்த சட்ட மூலம்**

# சவாலுக்கு உட்படுத்தும் 9 மனுக்கள் மீதான நீதிமன்ற வியாக்கியானம் சபாநாயகருக்கு

*பிரதி சபாநாயகர் சபையில் அறிவிப்பு*

**லோரன்ஸ் செல்வநாயகம்**

அரசியலமைப்பின் 22 ஆவது திருத்தச் சட்டமூலத்தை சவாலுக்கு உட்படுத்தி தாக்கல் செய்யப்பட்டிருந்த 9 மனுக்கள் தொடர்பான உயர் நீதிமன்றின் வியாக்கியானம் சபாநாயகருக்கு கிடைக்கப்பெற்றுள்ளதாக பிரதி சபாநாயகர் அஜித் ராஜபக்ச நேற்று சபையில் அறிவித்தார்.

பாராளுமன்றம் நேற்று பிரதி சபாநாயகர் அஜித் ராஜபக்சவின் தலைமையில் கூடிய போது சபாநாயகர் அறிவிப்பின்போதே அவர் இந்த அறிவிப்பை மேற்கொண்டார்.

அரசியலமைப்பின் 22ஆவது திருத்தச் சட்டமூலத்தை சவாலுக்கு உட்படுத்தி உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட 9 மனுக்கள் மீதான பரிசீலனை அண்மையில் நிறைவடைந்திருந்தது.

22 ஆவது திருத்தச் சட்டமூலத்தின் சில சரத்துகள், அரசியலமைப்புக்கு முரணானது என அறிவிக்குமாறு கோரி சட்டத்தரணி நாகானந்த கொடித்துவக்கு,

10

# பொது மனுக்கள் குழுவிற்கு உறுப்பினர்கள் நியமனம்

*பிரதி சபாநாயகர் சபையில் அறிவிப்பு*

**லோரன்ஸ் செல்வநாயகம்**

122 ஆம் இலக்க நிலையியற் கட்டளை ஏற்பாடுகள் மற்றும் 2022 ஆகஸ்ட் மாதம் 10 ஆம் திகதி பாராளுமன்றத்தினால் நிறைவேற்றப்பட்ட பிரேரணை என்பனவற்றிற்கு அமைவாக பொது மனுக்கள் பற்றிய குழுவில் பணியாற்றுவதற்காக உறுப்பினர்கள் தெரிவுக் குழுவினால் பெயர் குறித்து நியமிக்கப்பட்டிருப்பதாக பிரதி சபாநாயகர் அஜித் ராஜபக்ஷ பாராளுமன்றத்தில் அறிவித்தார்.

அதற்கமைய, பாராளுமன்ற உறுப்பினர்களான இம்தியாஸ் பாக்கிர் மாக்கார், ஜகத் புஷ்பகுமார, பியங்கர ஜயரத்ன, திலிப் வெதஆரச்சி, வடிவேல் சுரேஷ், ச. வியாழேந்திரன், அசோக்க பிரியந்த, அ. அரவிந்தகுமார், திருமதி கீதா சமன்மலீ குமாரசிங்ஹ, பீ.வை.ஜீ. ரத்னசேகர, சாரதீ துஷ்மந்த, கோவிந்தன் கருணாகரம், ஜயந்த கெட்டகொட, வேலுகுமார், வருண லியனகே, யூ.கே. சுமித் உடுகும்புர, மாயாதுன்ன சிந்தக அமல், நிபுண ரணவக, காமினி

வலேபொட, திருமதி ராஜிகா விக்கிரமசிங்ஹ, எம். டப்ளியு. டீ. சஹன் பிரதீப் விதான ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர்.

# அண்ணன் இறந்து 14 நாட்கள்: காட்டு யானை தாக்கி தங்கை மரணம்

குடும்பத்தின் மூத்த மகன் திடீர் விபத்தொன்றில் உயிரிழந்து 14 நாட்கள் செல்லும் முன்னர் குடும்பத்தின் ஒரே பெண் பிள்ளை காட்டு யானை தாக்கி மரணமடைந்த சம்பவம் ஒன்று கண்டி மாவட்டம் ஹசலக யாய பஹா என்ற பிரதேசத்தில் நேற்று நடந்துள்ளது.

17 வயதான அனுத்தரா இந்துனில் என்ற யுவதியே காட்டு யானை தாக்கியதில் உயிரிழந்துள்ளார்.

விபத்தில் உயிரிழந்த தனது ஒரே சகோதரனின் 14 வது நினைவு நாள் தானத்தை விகாரைக்கு கொண்டு செல்லும் வழியில் யுவதியின் வீட்டுக்கு எதிரில் இந்த சம்பவம் நடந்துள்ளது.

யானை தாக்கிய பின்னர் யுவதி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட போதிலும் அவர் ஏற்கனவே இறந்து விட்டதாக ஹசலக வைத்தியசாலையின் மருத்துவர்கள் கூறியுள்ளனர். யுவதியின் மரணம் தொடர்பில் அவரது உறவினரான பெண்ணொருவர் ஊடகங்களிடம் கருத்து வெளியிட்டுள்ளார்.

“அண்ணன் இறந்து 14 நாட்கள். 27 ஆம் திகதி இரவில் இருந்து காட்டு யானைகள் கிராமத்திற்குள் வந்திருந்தன. விடிய விடிய யானை வெடிகளை கொளுத்திய போதிலும் யானைகள் திரும்பிச் செல்லவில்லை.

நாங்கள் உறங்கவுமில்லை. வீட்டுக்கு எதிரிலேயே யானை தங்கையை தாக்கியது என்று அத்தை சத்தமிட்டார். எங்களால் வெளியிலும் வர முடியவில்லை. யானை விரட்டுவதே இதற்கு காரணம்.

யானை, யானை என்று மக்களுக்கு சத்தமிட மட்டுமே முடியும்” எனக் கூறியுள்ளார். தாயாருக்கு எதிரிலேயே யுவதியை யானை தாக்கியதாக கிராமவாசிகள் தெரிவிக்கின்றனர்.

யுவதியின் மரணம் காரணமாக தாய் கடும் அதிர்ச்சிக்கு உள்ளாகியுள்ளார்.

**நாணய மாற்று**

| நாணயம் | வாங்கும் விலை | விற்பனை விலை |
|---|---|---|
| அவுஸ்திரேலியா டொலர் | 238.54 | 249.41 |
| கனடியன் டொலர் | 256.80 | 267.07 |
| யூரோ | 340.83 | 352.42 |
| ஜப்பான் யென் | 2.5659 | 2.6696 |
| சிங்கப்பூர் டொலர் | 239.52 | 248.06 |
| ஸ்டேலிங் பவுன்ஸ் | 423.68 | 438.67 |
| சுவிஸ் பிராங்க் | 344.01 | 357.45 |
| அமெரிக்க டொலர் | 322.72 | 334.99 |

| மத்திய கிழக்கு | குறித்த விலை | | குறித்த விலை |
|---|---|---|---|
| பஹ்ரின் டினார் | 831.93 | கட்டார் ரியால் | 85.92 |
| குவைத் டினார் | 1,028.76 | சவூதி ரியால் | 83.64 |
| ஓமான் ரியால் | 814.75 | ஐ.அ. இராச்சியம் டிர்ஹாம் | 85.39 |

# தர்கா நகர் நஜீப் ஹாஜியார் கல்வி நிலையத்தினால் தரம் ஐந்து மாணவர்களுக்கு இலவச கருத்தரங்கு



**பேருவளை விசேட நிருபர்**

தர்கா நகர் நஜீப் ஹாஜியார் கல்வி நிலையத்தின் அனுசரனையுடன் தர்கா நகர் ஸாஹிரா ஆரம்ப பாடசாலை, அல் ஹம்ரா மகா வித்தியாலயம் மற்றும் அளுத்கம வீதிய முஸ்லிம் மகளிர் தேசிய பாடசாலை ஆகிய பாடசாலைகளில் இருந்து இம்முறை தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சைக்கு தோற்றவுள்ள சுமார் 135க்கு மேற்பட்ட மாணவர்களுக்கு இலவச கருத்தரங்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இது தொடர்பான விஷேட கலந்துரையாடல் நேற்று மாலை மேற்படி கல்விநிலையத்தில் அதன் ஸ்தாபகர் நஜீப் ஹாஜியார் பின் அமீர் ஆலிம் தலைமையில் நடைபெற்றது.

மேற்படி கருத்தரங்கு எதிர்வரும் செப்டம்பர் 2 ஆம் 3 ஆம் திகதிகளில் ஆரம்பமாகும். தலைசிறந்த ஆசிரியர் ஒருவரினால் கருத்தரங்கு நடாத்தப்படும்.

இக்கலந்துரையாடலில் பாடசாலை அதிபர்கள் மற்றும் தரம் 5 பொறுப்பாசிரியர்கள், சமூக சேவையாளரும், களுத்துறை மாவட்ட இளம் எழுத்தார் சங்க செயலாளருமான எம். பாஸி ஸுபைர் உட்பட மற்றும் பலரும் இக்கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

நஜீப் ஹாஜியார் கல்வி நிலையம் தர்கா நகரில் கல்வி மறுமலர்ச்சிக்கு ஆற்றிவரும் பாரிய சேவைகளை இதன் போது அதிபர்கள் ஆசிரியர்கள் பெரிதும் பாராட்டிப் பேசினர்.



# பேராதனைப் பல்கலை குறிஞ்சிக்குமரன் கோயில் மகா கும்பாபிஷேகம்

**கண்டி தினகரன் சுழற்சி நிருபர்**

பேராதனைப் பல்கலைக்கழக குறிஞ்சிக்குமரன் கோயிலில் மகா கும்பாபிஷேகம் எதிர்வரும் 05.09.2022 நடைபெறவுள்ளது. பேராதனைப் பல்கலைக்கழகத்தின் 6ஆவது ஜீரணோர்த்தாரண அஷ்டபந்தன நவ குண்ட பசஷ மகா கும்பாபிஷேகம் நிகழ்வுகள் 01.09.2022 முதல் ஆரம்பமாகவுள்ளது.

பேராதனைப் பல்கலைக்கழக பொறுப்பாண்மைக்குழு, இந்து மாணவர் சங்கம் மற்றும் இந்து பட்டதாரிகள் சங்கத்தின் ஏற்பாட்டில் நடைபெறவுள்ள இக்கும்பாபிஷேக நிகழ்வுகளில் கிரியாரம்பம் 01.09.2022 ஆம் திகதி வியாழக்கிழமை காலை 8.00 மணிக்கு விநாயகர் வழிபாடு, பிராமண அனுக்ஞை, திரவிய பூசை, கிராம சாந்தி, வாஸ்து சாந்தியுடன் ஆரம்பமாகி 02.09.2022 வெள்ளிக்கிழமை காலை 8.00 மணிக்கு புண்ணியாகவாசனம், கங்கா பூசை, தீர்த்தமெடுத்தல், அபிஷேகம், ஹோமம் வளர்த்தலுடன், 03.09.2022 சனிக்கிழமை காலை 8.00 மணிக்கு புண்ணியாக ஜெபம், யாகப்பிரவேசம், மாலை 1.00 மணி முதல் எண்ணெய் காப்பும் 04.09.2022 ஞாயிற்றுக்கிழமை காலை 8.00 மணிக்கு விசேட பஞ்சகௌவிய,பஞ்சாமிர்த பூசை, கும்ப பூசை, விம்பசுத்தி அபிஷேகம், யாகபூசைகளைத் தொடந்து 05.09.2022 திங்கட்கிழமை காலை 5 மணிக்கு விநாயகர் வழிபாடுடன் யாகபூசை, மகாபூர்ணாகுதி, அந்தர்பலி, பகிர்பலி, தீபாராதனை, தூபி அபிஷேகத்தினைத் தொடர்ந்து மங்கள இசையுடன் கும்ப மூலாலய பிரவேசம் இடம்பெற்று காலை 6.45 மணி முதல் 7.31 மணி வரையுள்ள கன்னி லக்கிண சுபவேளையில் முருகப் பெருமானுக்கும் ஏனைய பரிவார மூர்த்திகளுக்கும் மஹா கும்பாபிஷேகம் நடைபெறவுள்ளது. அதனைத் தொடர்ந்து தேவதா பூசை, தசமங்கள தரிசனம், ஆசியுரை, பிரசாதம் வழங்களுடன் இவ்விழா இனிதே நிறைவுபெறும். மாலை வசந்த மண்டப பூசை நடைபெற்று தொடர்ந்தும் 48 நாட்களும் மண்டலாபிஷேகம் நடைபெறும்.



# UNION BANK

# 2022 ஜூன் 30இல் முடிவடைந்த காலப்பகுதிக்கான நிதிக்கூற்றுக்கள்

## நிதி நிலைமைக்கூற்று ரூ.('000)

| திகதியில் உள்ளபடி | வங்கி 30.06.2022 | வங்கி 31.12.2021 (கணக்காய்வு செய்யப்பட்டது) | மாற்றம் % | குழு 30.06.2022 | குழு 31.12.2021 (கணக்காய்வு செய்யப்பட்டது) | மாற்றம் % |
|---|---|---|---|---|---|---|
| **சொத்துக்கள்** | | | | | | |
| காசு மற்றும் காசுக்குச் சமமானவைகள் | 4,600,573 | 2,322,357 | 98 | 4,941,601 | 2,470,657 | 100 |
| இலங்கை மத்திய வங்கியிலுள்ள மீதிகள் | 1,973,838 | 1,492,713 | 32 | 2,420,791 | 1,492,713 | 62 |
| வங்கிகளிலுள்ள வைப்புக்கள் | 164,004 | 118,969 | 38 | 163,543 | 118,969 | 37 |
| நேர்மாற்று மீள்கொள்வனவு ஒப்பந்தங்கள் | 603,802 | 1,000,505 | (40) | 723,193 | 1,144,628 | (37) |
| பெறுதி நிதியியல் சாதனங்கள் | - | 26,402 | (100) | - | 26,402 | (100) |
| இலாபம் அல்லது நட்டம் ஊடான நியாய பெறுமதியில் நிதி சொத்துக்கள் | 1,334,750 | 2,575,616 | (48) | 1,380,517 | 2,584,312 | (47) |
| இலாபம் அல்லது நட்டம் ஊடான நியாய பெறுமதியில் குறுத்துறைக்கப்பட்ட நிதி சொத்துக்கள் | - | - | - | - | - | - |
| மதிப்பீடு செய்யப்பட்ட நிதியியல் சொத்துக்கள் - வாடிக்கையாளர்களுக்கான கடன்கள் மற்றும் முற்பணங்கள் | 74,796,483 | 67,835,059 | 10 | 83,573,894 | 75,303,620 | 11 |
| மதிப்பீடு செய்யப்பட்ட நிதியியல் சொத்துக்கள் - கடன்கள் மற்றும் ஏனைய உபகரணங்கள் | 38,391,564 | 17,157,602 | 124 | 38,256,917 | 16,991,208 | 125 |
| ஏனைய அனைத்துமுள்ளடங்கிய வருமானம் ஊடாக நியாயப்பெறுமதியில் குறித்துரைக்கப்பட்ட நிதியியல் முதலீடுகள் | 1,720,049 | 18,249,861 | (91) | 1,749,918 | 18,276,759 | (90) |
| நடப்பு வரிச் சொத்து | - | - | - | - | - | - |
| காணி ஆதனத்தில் முதலீடு | - | - | - | 78,149 | 89,110 | (12) |
| உப நிறுவனங்களிலான முதலீடுகள் | 2,878,005 | 2,905,051 | (1) | - | - | - |
| நன்மதிப்பு மற்றும் அருவச் சொத்துக்கள் | 1,252,056 | 1,318,660 | (5) | 1,588,126 | 1,657,051 | (4) |
| ஆதனம் மற்றும் இயந்திர உபகரணங்கள் | 1,806,128 | 1,763,340 | 2 | 2,018,220 | 1,948,758 | 4 |
| ஒத்திவைக்கப்பட்ட வரிச் சொத்துக்கள் | 397,635 | 351,256 | 13 | 609,361 | 614,876 | (1) |
| ஏனைய சொத்துக்கள் | 1,825,508 | 1,288,710 | 42 | 1,923,503 | 1,373,862 | 40 |
| **மொத்தச் சொத்துக்கள்** | **131,744,395** | **118,406,101** | **11** | **139,427,733** | **124,092,925** | **12** |
| **பொறுப்புக்கள்** | | | | | | |
| வங்கிகளுக்குச் செலுத்த வேண்டியவை | 4,339,935 | 6,056,855 | (28) | 4,543,669 | 5,824,570 | (22) |
| பெறுதி நிதியியல் பத்திரங்கள் | 8,372 | 22,327 | (63) | 8,372 | 22,327 | (63) |
| இலாபம் அல்லது நட்டம் ஊடான நியாய பெறுமதியில் குறுத்துறைக்கப்பட்ட நிதி பொறுப்புக்கள் | - | - | - | - | - | - |
| மீள்கொள்வனவு ஒப்பந்தங்கள் | 9,399,180 | 8,662,744 | 9 | 9,349,165 | 8,282,700 | 13 |
| வைப்பாளர்களுக்கு செலுத்த வேண்டியவை | 96,647,581 | 83,416,119 | 16 | 102,858,318 | 87,618,235 | 17 |
| ஏனைய கடன்படு நிதிகள் | - | - | - | 784,922 | 1,636,362 | (52) |
| பெறுதி நிதியியல் சாதனங்கள் | - | - | - | - | - | - |
| துணை கால கடன்கள் | - | - | - | - | - | - |
| நடப்பு வரிப் பொறுப்புக்கள் | 497,027 | 365,844 | 36 | 510,623 | 388,738 | 31 |
| ஒத்திவைக்கப்பட்ட வரிப் பொறுப்புக்கள் | - | - | - | 193 | 193 | - |
| ஏனைய ஏற்பாடுகள் | - | - | - | - | - | - |
| ஏனைய பொறுப்புக்கள் | 2,163,018 | 1,956,993 | 11 | 2,536,089 | 2,298,948 | 10 |
| **மொத்தப் பொறுப்புக்கள்** | **113,055,113** | **100,480,882** | **13** | **120,591,351** | **106,072,073** | **14** |
| **பங்கு மூலதனம்** | | | | | | |
| அறிக்கையிடப்பட்ட மூலதனம் | 16,334,782 | 16,334,782 | - | 16,334,782 | 16,334,782 | - |
| பங்கு உத்தரவாதங்கள் | 65,484 | 65,484 | - | 65,484 | 65,484 | - |
| நியதிச்சட்ட ஒதுக்க நிதியம் | 250,090 | 242,473 | 3 | 274,710 | 267,093 | 3 |
| பணியாளர் பங்குரிமை திட்ட ஒதுக்கம் | 23,500 | 23,500 | - | 23,500 | 23,500 | - |
| விற்பனைக்குள்ள ஒதுக்கம் | (10,925) | (620,022) | 98 | 1,311 | (607,786) | 100 |
| நிறுத்திவைக்கப்பட்ட வருமானங்கள் | 2,026,351 | 1,879,002 | 8 | 1,859,146 | 1,654,441 | 12 |
| **வங்கியின் பங்குதாரர்களுக்குச் சாட்டத்தக்க மொத்தப் பங்குரிமை** | **18,689,281** | **17,925,219** | **4** | **18,558,933** | **17,737,514** | **5** |
| கட்டுப்படுத்தாத உரிமைகள் | - | - | - | 277,449 | 283,338 | (2) |
| **மொத்தப் பங்கு மூலதனம்** | **18,689,281** | **17,925,219** | **4** | **18,836,382** | **18,020,852** | **5** |
| **மொத்தப் பங்கு மூலதனம் மற்றும் பொறுப்புக்கள்** | **131,744,395** | **118,406,101** | **11** | **139,427,733** | **124,092,925** | **12** |
| **எதிர்பாராத பொறுப்புக்கள் மற்றும் கடன்படுகைகள்** | 34,157,927 | 35,615,022 | (4) | 34,274,034 | 35,613,440 | (4) |
| **சாதாரண பங்கொன்றின் நிகர சொத்துப் பெறுமதி (ரூபா)** | 17.25 | 16.54 | | 17.13 | 16.37 | |
| **விஞ்ஞாபனத் தகவல்கள்** | | | | | | |
| ஊழியர்களின் எண்ணிக்கை | 1,315 | 1,227 | | | | |
| கிளைகளின் எண்ணிக்கை | 67 | 67 | | | | |

## தெரிவு செய்யப்பட்ட செயல்திறன் குறிகாட்டிகள்
(ஒழுங்கு முறை அறிக்கையின் படி)

| கூறு | வங்கி 30.06.2022 | வங்கி 31.12.2021 | குழு 30.06.2022 | குழு 31.12.2021 |
|---|---|---|---|---|
| **ஒழுங்குபடுத்தல் மூலதன போதுமை (Rs.'000)** | | | | |
| பொது பங்கு பிரிவு 1 (பாசெல் III) | 13,541,164 | 13,292,787 | 15,558,903 | 15,267,994 |
| அடுக்கு 1 மூலதனம் (பாசெல் III) | 13,541,164 | 13,292,787 | 15,558,903 | 15,267,994 |
| மொத்த மூலதனம் (பாசெல் III) | 14,320,081 | 14,115,858 | 16,566,723 | 16,210,789 |
| **ஒழுங்குபடுத்தல் மூலதன விகிதம் (%)** | | | | |
| பொது பங்கு பிரிவு 1 மூலதன விகிதம் (ஆகக்குறைந்த தேவைப்பாடு 2022 - 7%, 2021 - 6.5%) | 15.45% | 15.51% | 16.41% | 16.58% |
| பிரிவு 1 மூலதன விகிதம் பாசெல் III (ஆகக்குறைந்த தேவைப்பாடு 2022- 8.5%, 2021 - 8%) | 15.45% | 15.51% | 16.41% | 16.58% |
| மொத்த மூலதன விகிதம் பாசெல் III (ஆகக்குறைந்த தேவைப்பாடு - 2022 - 12.5%, 2021 - 12%) | 16.34% | 16.47% | 17.47% | 17.60% |
| கடன் மூலதன விகிதம் (ஆகக்குறைந்த தேவைப்பாடு - 3%) | 9.19% | 9.94% | 9.90% | 10.81% |
| **ஒழுங்குபடுத்தல் திரவத்தன்மை** | | | | |
| நிதிச்சட்ட திரவச் சொத்துக்கள் | | | | |
| உள்நாட்டு வங்கியியல் பிரிவு ரூ. '000 | 25,614,925 | 21,766,108 | | |
| வெளிநாட்டு நாணய வங்கிப்பிரிவு , USD '000 | 13,631 | 20,715 | | |
| சட்டப்படியான திரவச்சொத்துக்கள் விகிதம் % (ஆகக்குறைந்த தேவைப்பாடு – 20%) | | | | |
| உள்நாட்டு வங்கியியல் பிரிவு | 27.54% | 23.50% | | |
| வெளிநாட்டு நாணய வங்கியியல் பிரிவு | 25.64% | 23.56% | | |
| பணப்புழக்க பாதுகாப்பு விகிதம், ரூபாய்க்கு(%) (ஆகக்குறைந்த தேவைப்பாடு - 2022 - 90%, 2021 - 100%) | 209.97% | 348.21% | | |
| பணப்புழக்க பாதுகாப்பு விகிதம், சகல நாணயங்களுக்கு(%) (ஆகக்குறைந்த தேவைப்பாடு - 2022 - 90%, 2021 - 100%) | 162.05% | 252.85% | | |
| நிகர நிலையான நிதி விகிதம்(%) (ஆகக்குறைந்த தேவைப்பாடு - 2022 - 90%, 2021 - 100%) | 120.59% | 124.56% | | |
| **சொத்துக்கள் தரம் (கடன்கள் மற்றும் வருமதிகளின் தரம்)** | | | | |
| குறைபாட்டுக்குட்பட்ட கடன்களின் (நிறை 3) விகிதம் (%) | 6.89% | 4.46% | | |
| குறைபாட்டுக்கான எற்பாட்டின் (நிலை 3) மீதான நிலை 3 கடன்களின் விகிதம் (%) | 29.19% | 31.86% | | |
| **இலாபத்தன்மை** | | | | |
| வட்டி இலாபம் % | 4.01% | 3.53% | | |
| சொத்துக்கள் மீதான வருமதி (வரிக்கு முன்) % | 0.49% | 0.81% | | |
| சொத்துக்கள் மீதான வருமதி (வரிக்குப் பின்) % | 0.24% | 0.63% | | |
| உரிமைப் பங்கிலிருந்து வருமானம (வரிக்குப் பின்) % | 1.66% | 4.25% | | |

**உறுதியுரை:**
கீழே கையொப்பமிட்டுள்ள, யூனியன் பாங்க் ஒப் கொழும்பு பி.எல்.சி.யின் உப தலைவர், இயக்குனர்/பிரதம நிறைவேற்று அதிகாரி மற்றும் நிதி கட்டுப்பாட்டாளர் ஆகிய நாம், பின்வருவனவற்றைக் கூட்டாக உறுதிப்படுத்துகிறோம்:

(அ) மேலுள்ள கூற்றுக்கள், இலங்கை மத்திய வங்கியினால் குறித்துரைக்கப்பட்ட வடிவமைப்பு மற்றும் வரைவிலக்கணங்களுக்கு அமையாகவே தயாரிக்கப்பட்டுள்ளன.

(ஆ) இக்கூற்றுக்களில், அடங்கியுள்ள வங்கி மற்றும் குழுவினுடைய தகவல்கள் கணக்காய்வு செய்யப்பட்டவை என குறிப்பிடப்பட்டவை தவிர, ஏனையவை கணக்காய்வு செய்யப்படாத ரீதியில் கூற்றுக்களில் இருந்து பிரித்தெடுக்கப்பட்டவையாகும்.

(கையொப்பம்)
காண்டீபன் இஹ்சான்
தலைமை நிதி அதிகாரி

(கையொப்பம்)
இந்திரஜித் விக்கிரமசிங்க
இயக்குனர்/பிரதம நிறைவேற்று அதிகாரி

(கையொப்பம்)
சரத் விக்ரமநாயக்க
நிறைவேற்று அதிகாரமற்ற பணிப்பாளர்

திகதி - 29 ஜீலை 2022

## உரிமை மாற்றங்களின் கூற்று (ரூ.'000)

| வங்கி | அறிக்கையிடப்பட்ட மூலதனம் | பங்கு உத்தரவாதங்கள் | நியதிச்சட்ட ஒதுக்க நிதியம் | பணியாளர் பங்குரிமை திட்ட ஒதுக்கம் | விற்பனைக்குள்ள /FVOCI ஒதுக்கம் | நிறுத்திவைக்கப்பட்ட வருமானங்கள் | மொத்தப் பங்கு மூலதனம் |
|---|---|---|---|---|---|---|---|
| **2021 ஜனவரி 1இல் இருந்த மீதி** | **16,334,782** | **65,484** | **204,227** | **23,500** | **217,840** | **1,244,184** | **18,090,017** |
| **மொத்த அனைத்துமுள்ளடங்கிய வருமானம்** | | | | | | | |
| காலப்பகுதிக்கான நிகர இலாபம் | - | - | - | - | - | 454,875 | 454,875 |
| ஏனைய அனைத்துமுள்ளடங்கிய வருமானம் | - | - | - | - | (198,011) | 8,623 | (189,388) |
| **மொத்த அனைத்துமுள்ளடங்கிய வருமானம்** | - | - | - | - | **(198,011)** | **463,497** | **265,487** |
| **பங்குதாரர்களுடனான கொடுக்கல் வாங்கல்கள், பங்குரிமையில் நேரடியாகக் காட்டப்பட்டது** | | | | | | | |
| காலப்பகுதியிலான பரிமாற்றங்கள் | - | - | 22,744 | - | - | (22,744) | - |
| பங்குதாரர்களுக்கான பங்கு இலாபம் | - | - | - | - | - | (140,863) | (140,863) |
| **2021 ஜூன் 30இல் இருந்த மீதி** | **16,334,782** | **65,484** | **226,971** | **23,500** | **19,829** | **1,544,075** | **18,214,641** |
| **2022 ஜனவரி 1இல் இருந்த மீதி** | **16,334,782** | **65,484** | **242,473** | **23,500** | **(620,022)** | **1,879,002** | **17,925,219** |
| **மொத்த அனைத்துமுள்ளடங்கிய வருமானம்** | | | | | | | |
| காலப்பகுதிக்கான நிகர இலாபம் | - | - | - | - | - | 152,340 | 152,340 |
| ஏனைய அனைத்துமுள்ளடங்கிய வருமானம் | - | - | - | - | (18,924) | 2,625 | (16,299) |
| **மொத்த அனைத்துமுள்ளடங்கிய வருமானம்** | - | - | - | - | **(18,924)** | **154,965** | **136,041** |
| **பங்குதாரர்களுடனான கொடுக்கல் வாங்கல்கள், பங்குரிமையில் நேரடியாகக் காட்டப்பட்டது** | | | | | | | |
| காலப்பகுதியிலான பரிமாற்றங்கள் | - | - | 7,617 | - | - | (7,617) | - |
| குறைக்கப்பட்ட செலவுக்கு மாற்றப்பட்ட முதலீட்டு கருவிகள் | | | - | - | 628,021 | - | 628,021 |
| **2022 ஜூன் 30இல் இருந்த மீதி** | **16,334,782** | **65,484** | **250,090** | **23,500** | **(10,925)** | **2,026,351** | **18,689,281** |

## உரிமை மாற்றங்களின் கூற்று (ரூ.'000)

| குழு | அறிக்கையிடப்பட்ட மூலதனம் | பங்கு உத்தரவாதங்கள் | நியதிச்சட்ட ஒதுக்க நிதியம் | பணியாளர் பங்குரிமை திட்ட ஒதுக்கம் | விற்பனைக்குள்ள ஒதுக்கம் | நிறுத்தி வைக்கப்பட்ட வருமானங்கள் | பங்குதாரர்களின் மொத்தப்பங்கு மூலதனம் | கட்டுப்படுத்தாத உரிமைகள் | மொத்தப் பங்கு மூலதனம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| **2021 ஜனவரி 1இல் இருந்த மீதி** | **16,334,782** | **65,484** | **228,847** | **23,500** | **230,076** | **951,674** | **17,834,363** | **230,593** | **18,064,956** |
| **மொத்த அனைத்துமுள்ளடங்கிய வருமானம்** | | | | | | | | | |
| காலப்பகுதிக்கான நிகர இலாபம் | - | - | - | - | - | 483,734 | 483,734 | (1,828) | 481,906 |
| ஏனைய அனைத்துமுள்ளடங்கிய வருமானம் | - | - | - | - | (197,983) | 8,595 | (189,388) | 3,156 | (186,232) |
| **மொத்த அனைத்துமுள்ளடங்கிய வருமானம்** | - | - | - | - | **(197,983)** | **492,329** | **294,346** | **1,328** | **295,674** |
| **பங்குதாரர்களுடனான கொடுக்கல் வாங்கல்கள், பங்குரிமையில் நேரடியாகக் காட்டப்பட்டது** | | | | | | | | | |
| காலப்பகுதியிலான பரிமாற்றங்கள் | - | - | 22,744 | - | - | (22,744) | - | - | - |
| பங்குதாரர்களுக்கான பங்கு இலாபம் | - | - | - | - | - | (140,863) | (140,863) | - | (140,863) |
| **2021 ஜூன் 30இல் இருந்த மீதி** | **16,334,782** | **65,484** | **251,591** | **23,500** | **32,093** | **1,280,396** | **17,987,846** | **231,921** | **18,219,767** |
| **2022 ஜனவரி 1இல் இருந்த மீதி** | **16,334,782** | **65,484** | **267,093** | **23,500** | **(607,786)** | **1,654,441** | **17,737,514** | **283,338** | **18,020,852** |
| **மொத்த அனைத்துமுள்ளடங்கிய வருமானம்** | | | | | | | | | |
| காலப்பகுதிக்கான நிகர இலாபம் | - | - | - | - | - | 209,697 | 209,697 | (4,701) | 204,996 |
| ஏனைய அனைத்துமுள்ளடங்கிய வருமானம் | - | - | - | - | (18,924) | 2,625 | (16,299) | (1,188) | (17,487) |
| **மொத்த அனைத்துமுள்ளடங்கிய வருமானம்** | - | - | - | - | **(18,924)** | **212,322** | **193,398** | **(5,889)** | **187,509** |
| **பங்குதாரர்களுடனான கொடுக்கல் வாங்கல்கள், பங்குரிமையில் நேரடியாகக் காட்டப்பட்டது** | | | | | | | | | |
| காலப்பகுதியிலான பரிமாற்றங்கள் | - | - | 7,617 | - | - | (7,617) | - | - | - |
| குறைக்கப்பட்ட செலவுக்கு மாற்றப்பட்ட முதலீட்டு கருவிகள் | | | | | 628,021 | - | 628,021 | - | 628,021 |
| **2022 ஜூன் 30இல் இருந்த மீதி** | **16,334,782** | **65,484** | **274,710** | **23,500** | **1,311** | **1,859,146** | **18,558,933** | **277,449** | **18,836,382** |

## அனைத்துமுள்ளடங்கிய வருமானத்தின் கூற்று ரூ. ('000)

| முடிவடைந்த காலப்பகுதிக்கான | வங்கி 30.06.2022 | வங்கி 30.06.2021 | மாற்றம் % | குழு 30.06.2022 | குழு 30.06.2021 | மாற்றம் % |
|---|---|---|---|---|---|---|
| காலப்பகுதிக்கான இலாபம் | **152,340** | **454,875** | **(67)** | **204,996** | **481,906** | **(57)** |
| **அடுத்துவரும் காலப்பகுதிகளில் இலாபம் அல்லது நட்டத்திற்கு மீள்வகைப்படுத்த வேண்டிய ஏனைய அனைத்துமுள்ளடங்கிய வருமானம்:** | | | | | | |
| **ஏனைய அனைத்துமுள்ளடங்கிய வருமானம் ஊடான நியாயப் பெறுமதியில் கடன் சாதனங்கள்** | | | | | | |
| காலப்பகுதிக்கான நியாயப் பெறுமதியில் தேறிய மாற்றம் | (24,900) | (274,416) | 91 | (24,900) | (274,360) | 91 |
| எதிர்பார்த்த கடன் இழப்புக்கான ஏற்பாடுகளில் மாற்றம் | - | - | - | - | - | - |
| கழி: மேற்குறிப்பிடப்பட்டதற்கான வருமான வரி விளைவு | 5,976 | 76,405 | (92) | 5,976 | 76,405 | (92) |
| ஏனைய அனைத்துமுள்ளடங்கிய வருமானம் ஊடான நியாயப் பெறுமதியில் நிதி முதலீடுகளின் தேறிய இலாபம் அல்லது நட்டம் | - | - | - | - | - | - |
| **இலாப நட்டக்கணக்கிற்கு மீள் வகைப்படுத்தப்படாத மொத்த உருப்படிகள்** | **(18,924)** | **(198,011)** | **90** | **(18,924)** | **(197,955)** | **90** |
| **அடுத்துவரும் காலப்பகுதிகளில் இலாபம் அல்லது நட்டத்திற்கு மீள்வகைப்படுத்த வேண்டிய ஏனைய அனைத்துமுள்ளடங்கிய வருமானம்:** | | | | | | |
| வரையறுக்கப்பட்ட பயன் ஓய்வூதிய திட்டத்தின் உண்மையான இலாபம் / (நட்டம்) | - | - | - | - | - | - |
| ஏனைய அனைத்துமுள்ளடங்கிய வருமானம் ஊடான நியாயப்பெறுமதியில் மூலதன உபகரணங்களிலான மீள் மதிப்பீடு இலாபம் / (நட்டம்) | - | - | - | **2,903** | **15,425** | **(81)** |
| கழி: மேற்குறிப்பிடப்பட்டதற்கான வருமான வரி விளைவு | - | - | - | **(1,466)** | **(3,702)** | **(60)** |
| பங்குரிமை முதலீட்டாளர்களின் இலாபப் பங்கு, வரி நீங்கலாக | 2,625 | 8,623 | (70) | - | - | - |
| **இலாப நட்டக்கணக்கிற்கு மீள் வகைப்படுத்தப்படாத மொத்த உருப்படிகள்** | **2,625** | **8,623** | **(70)** | **1,437** | **11,723** | **(88)** |
| **வரிகள் நீங்கலாக காலப்பகுதியின் ஏனைய அனைத்துமுள்ளடங்கிய வருமானம்** | **(16,299)** | **(189,388)** | **91** | **(17,487)** | **(186,232)** | **91** |
| **காலப்பகுதிக்கான மொத்த அனைத்துமுள்ளடங்கிய வருமானம்** | **136,041** | **265,487** | **(49)** | **187,509** | **295,674** | **(37)** |
| **பகிர்ந்தளிக்கத்தக்கது:** | | | | | | |
| தலைமைக்கம்பனியின் உரிமையாளர்களுக்கு | 136,041 | 265,487 | (49) | 193,398 | 294,346 | (34) |
| கட்டுப்படுத்தாத உரிமையாளர்களுக்கு | - | - | - | (5,889) | 1,328 | (543) |
| **காலப்பகுதிக்கான மொத்த அனைத்துமுள்ளடங்கிய வருமானம், வரி நீங்கலாக.** | **136,041** | **265,487** | **(49)** | **187,509** | **295,674** | **(37)** |

## வருமானக்கூற்று ரூ.('000)

| முடிவடைந்த காலப்பகுதிக்கான | வங்கி 30.06.2022 | வங்கி 30.06.2021 | மாற்றம் % | குழு 30.06.2022 | குழு 30.06.2021 | மாற்றம் % |
|---|---|---|---|---|---|---|
| மொத்த வருமானம் | **7,426,170** | **5,673,460** | **31** | **8,418,481** | **6,515,821** | **29** |
| வட்டி வருமானங்கள் | 6,235,707 | 4,629,759 | 35 | 7,130,074 | 5,366,792 | 33 |
| கழி : வட்டிச் செலவினங்கள் | 3,726,256 | 2,526,839 | 47 | 4,073,693 | 2,856,830 | 43 |
| **தேறிய வட்டி வருமானம்** | **2,509,451** | **2,102,920** | **19** | **3,056,381** | **2,509,962** | **22** |
| கட்டணம் மற்றும் தரகு வருமானம் | 629,004 | 516,991 | 22 | 678,000 | 584,356 | **16** |
| கழி : கட்டணம் மற்றும் தரகுச் செலவினங்கள் | 125,033 | 110,374 | 13 | 143,155 | 120,544 | **19** |
| **தேறிய கட்டணம் மற்றும் தரகு வருமானம்** | **503,971** | **406,617** | **24** | **534,845** | **463,812** | **15** |
| இலாபம் அல்லது நட்டம் ஊடான நியாயப் பெறுமதியில் குறித்துரைக்கப்பட்ட நிதிபத்திரங்களிலிருந்து நிகர ஆதாயம்/இழப்பு | 38,695 | 156,516 | (75) | 40,868 | 157,841 | (74) |
| நிதியியல் முதலீடுகள் மூலமான இலாபம் / நட்டம் | 258 | 153,341 | (100) | 1,370 | 153,978 | (99) |
| இலாபம் அல்லது நட்டம் ஊடான நியாயப் பெறுமதியில் குறித்துரைக்கப்பட்ட நிதிபத்திரங்களிலிருந்து நிகர ஆதாயம்/இழப்பு | - | - | - | - | - | - |
| ஏனைய தொழிற்பாட்டு வருமானம் (தேறிய) | 522,506 | 216,853 | 141 | 568,169 | 252,854 | 125 |
| **மொத்த தொழிற்பாட்டு வருமானம்** | **3,574,881** | **3,036,247** | **18** | **4,201,633** | **3,538,447** | **19** |
| **கழிக்குக: கடன்கள் மற்றும் ஏனைய கடன்படுகைகளுக்கான சீரிழப்பு** | **961,148** | **436,245** | **120** | **1,202,712** | **548,347** | **119** |
| **தேறிய தொழிற்பாட்டு வருமானம்** | **2,613,733** | **2,600,002** | **1** | **2,998,921** | **2,990,100** | **-** |
| கழி : ஊழியர்சார் செலவினங்கள் | 969,003 | 907,904 | 7 | 1,135,510 | 1,041,062 | 9 |
| தேய்மானம் மற்றும் கடன்தீர்ப்பு | 357,707 | 323,326 | 11 | 386,598 | 353,096 | 9 |
| ஏனைய செலவினங்கள் | 732,213 | 577,699 | 27 | 832,784 | 657,693 | 27 |
| **மொத்த தொழிற்பாட்டு செலவீனங்கள்** | **2,058,923** | **1,808,929** | **14** | **2,354,892** | **2,051,851** | **15** |
| **தேறிய தொழிற்பாட்டு இலாபம்** | **554,810** | **791,073** | **(30)** | **644,029** | **938,249** | **(31)** |
| பங்குரிமை முதலீட்டாளர்களின் இலாபப் பங்கு, வரி நீங்கலாக | (28,265) | (9,483) | 198 | - | - | |
| **நிதியியல் சேவைகள் மீதான பெறுமதி கூட்டு வரிக்கு (பெ. கூ. வ) முன் இலாபம்** | **526,545** | **781,590** | **(33)** | **644,029** | **938,249** | **(31)** |
| கழி : நிதியியல் சேவைகள் மீதான பெ.கூ.வ | 223,019 | 213,536 | 4 | 248,668 | 236,758 | 5 |
| **வரிக்கு முன் இலாபம்** | **303,526** | **568,054** | **(47)** | **395,361** | **701,491** | **(44)** |
| கழி : வரிச் செலவினங்கள் | 151,186 | 113,179 | 34 | 190,365 | 219,585 | (13) |
| **வரிக்கு பின்னரான இலாபம்** | **152,340** | **454,875** | **(67)** | **204,996** | **481,906** | **(57)** |
| **பகிர்ந்தளிக்கத்தக்க இலாபம்:** | | | | | | |
| தலைமைக்கம்பனியின் உரிமையாளர்களுக்கு | 152,340 | 454,875 | (67) | 209,697 | 483,734 | (57) |
| கட்டுப்படுத்தாத உரிமையாளர்களுக்கு | - | - | - | (4,701) | (1,828) | (157) |
| **காலப்பகுதிக்கான இலாபம்** | **152,340** | **454,875** | **(67)** | **204,996** | **481,906** | **(57)** |
| **இலாபத்தில் பங்கொன்றின் சம்பாத்தியம்** | | | | | | |
| பங்கொன்றின் அடிப்படை சம்பாத்தியம் | 0.14 | 0.42 | (67) | 0.19 | 0.45 | (57) |
| பங்கொன்றின் நீர்த்த சம்பாத்தியம் | 0.14 | 0.42 | (67) | 0.19 | 0.45 | (57) |

## காசுப்பாய்ச்சல்கள் கூற்று ரூ. ('000)

| | வங்கி 30.06.2022 | வங்கி 30.06.2021 | குழு 30.06.2022 | குழு 30.06.2021 |
|---|---|---|---|---|
| **தொழிற்பாட்டு நடவடிக்கைகளின் மூலமான காசுப்பாய்ச்சல்கள்** | | | | |
| வட்டி வருமதிகள் | 5,560,086 | 3,899,488 | 6,363,041 | 4,414,345 |
| பெறப்பட்ட கட்டணங்கள் மற்றும் தரகுப்பணம் | 503,970 | 406,616 | 534,845 | 463,812 |
| வட்டிக் கொடுப்பனவுகள் | (3,800,574) | (2,952,270) | (4,221,860) | (3,299,242) |
| ஏனைய தொழிற்பாட்டு நடவடிக்கையிலான பெறுவனவுகள் | 556,048 | 478,348 | 604,995 | 516,312 |
| ஏனைய தொழிற்பாட்டு நடவடிக்கைகளுக்கான கொடுப்பனவுகள் | (1,891,713) | (1,837,722) | (2,182,490) | (2,118,395) |
| **தொழிற்பாட்டுச் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களுக்கு முன் தொழிற்பாட்டு இலாபம் / (நட்டம்)** | **927,817** | **(5,540)** | **1,098,531** | **(23,168)** |
| **தொழிற்பாட்டுச் சொத்துக்களில் அதிகரிப்பு / (குறைவு)** | | | | |
| இலங்கை மத்திய வங்கியிலுள்ள மீதி | (481,124) | (241,632) | (928,078) | (241,632) |
| வாடிக்கையாளர்களுக்கு வழங்கிய கடன்கள், முற்பணங்கள் | (7,135,082) | (2,833,651) | (8,785,169) | (2,628,545) |
| ஏனையவை | (510,401) | (405,417) | (523,237) | (374,766) |
| | **(8,126,607)** | **(3,480,700)** | **(10,236,484)** | **(3,244,943)** |
| **தொழிற்பாட்டுப் பொறுப்புக்களில் அதிகரிப்பு / (குறைவு)** | | | | |
| வைப்பாளர்களுக்கு செலுத்தவேண்டியவை | 13,198,244 | 3,104,824 | 15,284,122 | 2,990,467 |
| மீள்கொள்வனவு ஒப்பந்தங்கள் | 749,940 | (2,201,426) | 1,079,969 | (2,136,419) |
| ஏனையவை | 191,451 | 10,610 | 47,105 | 58,374 |
| | **14,139,635** | **914,008** | **16,411,196** | **912,424** |
| வருமான வரிக்கு முன் தொழிற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்து /(அவற்றில் பயன்படுத்திய) தேறிய காசு | 6,940,845 | (2,572,232) | 7,273,243 | (2,355,687) |
| செலுத்தப்பட்ட ஓய்வுகால அனுகூலக் கொடுப்பனவுகள் | 18,917 | (3,141) | 18,127 | (3,897) |
| செலுத்திய வருமான வரி | (258,728) | (155,559) | (294,018) | (333,014) |
| **தொழிற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்து / (அவற்றில் பயன்படுத்திய) தேறிய காசு** | **6,701,034** | **(2,730,933)** | **6,997,352** | **(2,692,599)** |
| **முதலீட்டு நடவடிக்கைகளின் மூலமான காசுப்பாய்ச்சல்கள்** | | | | |
| இலாபம் மற்றும் நட்டம் ஊடான நியாயமான மதிப்பில் நிகர நிதி முதலீடு | 1,232,310 | 2,045,576 | 1,190,311 | 2,013,843 |
| இலாபம் அல்லது நட்டம் ஊடான நியாயப் பெறுமதியில் தேறிய நிதியிய முதலீடுகள் | (2,661,516) | 2,672,982 | (2,305,548) | 2,661,162 |
| மதிப்பீடு செய்யப்பட்ட தேறிய நிதியியல் சொத்துக்கள் - கடன்கள் மற்றும் ஏனைய உபகரணங்கள் | (1,411,168) | 526,093 | (1,730,521) | 510,668 |
| நிதியியல் முதலீடுகள் வர்த்தகத்திற்காக வைக்கப்பட்டவை | - | - | 10,961 | 6,514 |
| சொத்துக்கள் மற்றும் உபகரணங்களின் கொள்வனவு | (206,655) | (95,106) | (50,038) | (50,886) |
| அருவச் சொத்து கொள்வனவு | (48,114) | (80,120) | (48,457) | (81,597) |
| சொத்து மற்றும் உபகரணங்களின் விற்பனை மூலமான தேறிய காசு | 6 | - | 6 | - |
| **முதலீட்டு நடவடிக்கைகளில் இருந்து / (பயன்படுத்திய) நிகர காசு** | **(3,095,137)** | **5,069,425** | **(2,933,286)** | **5,059,704** |
| **நிதியியல் நடவடிக்கைகளின் மூலமான காசுப்பாய்ச்சல்கள்** | | | | |
| கடன்படுகைகளின் அதிகரிப்பு | (3,376,974) | (2,107,440) | (3,740,990) | (2,276,469) |
| செலுத்திய பங்கிலாபம் | - | (140,863) | - | (140,863) |
| **நிதி நடவடிக்கைகளில் இருந்து / (பயன்படுத்திய) நிகர காசு** | **(3,376,974)** | **(2,248,303)** | **(3,740,990)** | **(2,417,332)** |
| காசு மற்றும் காசுக்குச் சமமானவைகளின் தேறிய அதிகரிப்பு / (வீழ்ச்சி) | 228,923 | 90,189 | 323,076 | (50,226) |
| காலப்பகுதியின் ஆரம்பத்தில் காசு மற்றும் காசுக்குச் சமமானவைகள் | 3,324,765 | 2,414,598 | 3,619,664 | 2,850,142 |
| **காலப்பகுதியின் முடிவில் காசு மற்றும் காசுக்குச் சமமானவைகள்** | **3,553,688** | **2,504,787** | **3,942,740** | **2,799,916** |
| **காசு மற்றும் காசுக்குச் சமமானவைகளின் இணக்கம்** | | | | |
| காசு மற்றும் காசுக்குச் சமமானவைகள் | 4,600,573 | 2,306,098 | 4,941,601 | 2,467,060 |
| நேர்மாற்று மீள் கொள்வனவு ஒப்பந்தங்கள் | 603,000 | 140,000 | 722,392 | 383,522 |
| வங்கிகளிலுள்ள வைப்புக்கள் | 164,004 | 96,945 | 163,542 | 97,235 |
| வங்கிகளுக்குச் செலுத்த வேண்டியவை | (1,813,889) | (38,256) | (1,884,795) | (147,902) |
| **காலப்பகுதியின் முடிவில் காசு மற்றும் காசுக்குச் சமமானவைகள்** | **3,553,688** | **2,504,787** | **3,942,740** | **2,799,916** |

ICRA (SL) BBB. Fitch BBB- (lka) யூனியன் பாங்க் ஒப் கொழும்பு பி.எல்.சி. இலங்கை மத்திய வங்கியினால் உரிமம் அளிக்கப்பட்டு மேற்பார்வை செய்யப்படும் வர்த்தக வங்கியாகும்.

யூனியன் பாங்க் ஒப் கொழும்பு பி.எல்.சி. | தலைமை அலுவலகம்: 64, காலி வீதி, கொழும்பு 03. | தொ: 011 2 374 100 | www.unionb.com | கம்பனி பதிவு இலக்கம் PB676PQ

# கத்தோலிக்க திருச்சபைக்கு மேலும் 20 புதிய கர்தினால்கள்

## வத்திக்கான் சிறப்பு வழிபாட்டில் பரிசுத்த பாப்பரசரால் நியமனம்

பரிசுத்த பாப்பரசர் முதலாம் பிரான்சிஸ் கடந்த 27ஆம் திகதி சனிக்கிழமை வத்திக்கான் புனித பேதுரு பெசிலிக்கா பேராலயத்தில் நடைபெற்ற சிறப்பு திருவழிபாட்டில் 20 ஆயர்கள் மற்றும் துறவிகளை கருதினால்களாக உயர்த்தினார்.

கடந்த சனிக்கிழமை இரவு 7:30 மணிக்கு 20 ஆயர்களை கருதினால்களாக உயர்த்தும் இந்த சிறப்பு வழிபாடு பரிசுத்த பாப்பரசரின் தலைமையில் நடைபெற்றது.



திருச்சபையில் கர்தினால்களின் எண்ணிக்கை 226 ஆக உயர்வு



### உலகளாவிய 196 கர்தினால்கள் பங்கேற்கும் கூட்டுத் திருப்பலி இன்று

இந்த வழிபாட்டில் கருதினால்களாக திருநிலைப் படுத்தப்படும் 20 பேருக்கும் பரிசுத்த பாப்பரசர் அவர்களுக்கான சிவப்பு நிற தொப்பி, தலையை ஒட்டியதாக அணியும் சிறுவட்டத்தொப்பி மற்றும் சிறப்பு மோதிரத்தையும் அணிவித்தார்.

இந்த திருவழிபாட்டிற்கு முன்பதாக இலங்கை உட்பட நிகழ்வில் கலந்து கொள்ள வருகை தந்திருந்த நாடுகளின் பிரதிநிதிகளை திருத்தந்தை சந்தித்தார். அதனையடுத்து திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களும் புதிய கர்தினால்களும் முன்னாள் திருத்தந்தை 16ஆம் பெனடிக்ட் அவர்களை சந்தித்தனர். கர்தினால் நிலைக்கு உயர்த்தப்பட்டுள்ள இருபது புதிய கர்தினால்களில் நான்கு பேர் நான்கு நாடுகளுக்கு முதல்முறையாக நியமிக்கப்படும் கர்தினால்கள் ஆவர். இவர்களில் 16 பேர் புதிய பாப்பரசரை தேர்ந்தெடுக்கும் தகுதியுடையவர்கள்.

20 புதிய கர்தினால்களோடு கத்தோலிக்க திருச்சபையில் மொத்தமாக 226 கர்தினால்கள் உள்ளனர்.அவர்களின் புதிய பாப்பரசரை தேர்ந்தெடுக்கும் தகுதியுடைய 80 வயதுக்குட்பட்டோரின் எண்ணிக்கை 132 ஆகும்.

குறிப்பாக ஆசியாவில் உள்ள 30 கர்தினால்களில் 20 பேர் புதிய பாப்பரசரைத் தேர்ந்தெடுக்கும் தகுதி யுள்ளவர்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது.

***உலகளாவிய 197 கர்தினால்கள் பங்கேற்ற கூட்டம் மற்றும் கூட்டுத் திருப்பலி:***

அதே வேளை,நேற்றைய தினம் 29ஆம் திகதி மற்றும் இன்றைய தினம் 30 ஆம் திகதிகளில் உலகளாவிய 197 கர்தினால்கள் பங்கு கொண்ட நற்செய்தி அறிவிப்புக் கூட்டம் திருத்தந்தையின் தலைமையில் நடைபெறுகிறது.இந்த கூட்டத்தின் இறுதியில் அனைத்து கர்தினால்கள் பங்கேற்கும் சிறப்புத் திருப்பலி புனித பேதுரு பெசிலிக்கா பேராலயத்தில் கூட்டுத்திருப்பலியாக நிறைவேற்றப்படுகிறது.




## நீதிமான் திருமுழுக்கு யோவானின் பாடுகளின் திருநாள்

திருமுழுக்கு யோவான் சிறந்த நீதிமான். உண்மை நேர்மை சத்தியத்திற்காக தமது உயிரையும் தியாகம் செய்யத் துணிந்தவர்.

எல்லா காலத்திலும் இத்தகையோர் சிலரது கருவிகளாக பாவிக்கப்பட்டு பாதிக்கப்பட்டும் தம் உயிர்களையே தியாகம் செய்தும் வந்துள்ளனர்.

அந்த வகையில் ஏரோது அரசன் தன்னை மறந்து வழங்கிய வாக்குறுதி ஒன்று நிறைவேற்றப்படுவதற்காக திருமுழுக்கு யோவான் தலை வெட்டப்பட்டு தம் உயிரை தியாகம் செய்ய வேண்டிய நிலை ஏற்பட்டது



திருமுழுக்கு யோவானின் பாடுகள் திருநாளை நேற்று கத்தோலிக்கத் திருச்சபை நினைவு கூர்ந்தது.

பரிசுத்த வேதாகமம் அந்த சம்பவத்தை இவ்வாறு விபரிக்கின்றது.

"அக்காலத்தில் ஏரோது சகோதரரான பிலிப்பின் மனைவி ஏரோதியாவை மனைவியாக்கிக் கொண்டிருந்தான்; அவள் பொருட்டு ஆள் அனுப்பி யோவானை பிடித்துக் கட்டி சிறையில் அடைத்திருந்தான். ஏனெனில் யோவான் ஏரோதிடம் உன் சகோதரன் மனைவியை நீ வைத்திருப்பது முறையல்ல என சொல்லி வந்தார்.

அப்போது ஏரோதியா அவர் மீது காழ்ப்புணர்வு கொண்டு அவரை கொலை செய்ய விரும்பினால். ஆனால் அவளால் அது இயலவில்லை. ஏனெனில் யோவான் நேர்மையும் தூய்மையும் உள்ளவர் என்பதை ஏரோது அறிந்து அஞ்சி அவருக்கு பாதுகாப்பு அளித்து வந்தான்.

அவர் சொல்லைக் கேட்டு மிக குழப்பமுற்ற போதிலும் அவருக்கு மனமுவந்து செவிசாய்த்தான். ஏரோதியாவுக்கு நல்ல வாய்ப்பு ஒன்று கிடைத்தது.

ஏரோது தன் பிறந்த நாளில் அரசவையினருக்கும் கலிலேய முதன்மை குடிமக்களுக்கும் ஒரு விருந்து படைத்தான். அப்போது ஏரோதியாவின் மகள் உள்ளே வந்து நடனமாடி ஏரோதையும் விருந்தினரையும் அகமகிழச் செய்தாள். அப்போது அரசன் சிறுமியிடம் என்ன வேண்டுமானாலும் கேள் தருகிறேன் என்றான். நீ என்னிடம் எதைக் கேட்டாலும், ஏன் என் அரசில் பாதியைக் கேட்டாலும் உனக்கு தருகிறேன் என்றும் ஆணையிட்டுக் கூறினான்.

அவள் வெளியே சென்று நான் என்ன கேட்கலாம் என்று தன் தாயை வினவினாள். திருமுழுக்கு யோவானின் தலையை கேள் என்றாள் சிறுமியின் தாய். உடனே சிறுமி அரசனிடம் விரைந்து வந்து திருமுழுக்கு யோவானின் தலையை ஒரு தட்டில் வைத்து இப்போதே எனக்குக் கொடும் என்று கேட்டாள்.

இதைக் கேட்ட அரசன் மிக வருந்தினான். ஆனாலும் விருந்தினர் முன் தானாக ஆணையிட்டதால் அவளுக்கு அதை மறுக்க விரும்பவில்லை. உடனே அரசன் ஒரு காவலனை அனுப்பி யோவானுடைய தலையை கொண்டு வருமாறு பணித்தான்.

அவன் சென்று சிறையில் அவருடைய தலையை வெட்டி அதை ஒரு தட்டில் கொண்டு வந்து அச்சிறுமியிடம் கொடுக்க அவளும் அதை தன் தாயிடம் கொடுத்தாள். இதை கேள்வியுற்ற யோவானுடைய சீடர்கள் வந்து அவருடைய உடலை எடுத்துச் சென்று கல்லறையில் அடக்கம் செய்தார்கள்.

கிறிஸ்தவ வரலாற்றில் திருமுழுக்கு யோவானுக்கு உள்ள இடம் எத்தகைய முக்கியத்துவம் வாய்ந்தது என்பதை நாம் அறிவோம். அவரைப் போன்று நேர்மையாக உண்மைக்காக தியாகங்கள் செய்ய நமது வாழ்க்கையிலும் முடிவுகளை எடுக்க வேண்டும் என்பதையே இந்த திருநாள் எமக்கு வலியுறுத்துகிறது.

எல்.மிலியன் ஜேம்ஸ்...

## வாகரை புனித பேதுரு ஆலய திருவிழா









மட்டக்களப்பு மறை மாவட்டத்தின் வரலாற்று சிறப்புமிக்க கத்தோலிக்க ஆலயங்களுள் ஒன்றான வாகரை புனித பேதுரு ஆலயத்தின் வருடாந்த திருவிழா மறைமாவட்ட ஆயர் பேரருட்திரு ஜோசப் பொன்னையா ஆண்டகையின் தலைமையில் கடந்த 21 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பக்திபூர்வமாக கொண்டாடப்பட்டது. கடந்த 17 ஆம் திகதி பங்குத்தந்தை ஜென்சன்லோய்ட் தலைமையில் கொடியேற்றத்துடன் ஆரம்பிக்கப்பட்ட ஆலய வருடாந்த திருவிழாவில் நவநாள் ஆராதனைகள் இடம்பெற்று. கடந்த 21ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 7.30 மணிக்கு மறைமாவட்ட ஆயர் பேரருட்திரு ஜோசப் பொன்னையா ஆண்டகையின் தலைமையில் திருவிழா கூட்டுத்திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டது. (படங்கள்: கல்லடி குறூப் நிருபர்)

## தல்கஸ்வலை புனித அன்னை தெரேசா ஆலய திருவிழா

காலி மறை மாவட்டத்தில் தல்கஸ்வலை புனித கல்கத்தா தெரேசா ஆலய வருடாந்த திருவிழா எதிர்வரும் செப்டம்பர் 4ஆம் திகதி பக்தி பூர்வமாக கொண்டாடப்பட வுள்ளது.

எதிர்வரும் செப்டம்பர் முதலாம் திகதி கொடியேற்றத்துடன் திருவிழா நிகழ்வுகள் ஆரம்பமாகி தினமும் நவ நாட்கள் இடம்பெற உள்ளன. அதனைத் தொடர்ந்து 4ஆம் திகதி காலி மறை மாவட்ட ஆயர் பேரருட்திரு ரேமண்ட் விக்ரமசிங்க ஆண்டகையின் தலைமையில் திருவிழா திருப்பலி கூட்டுத் திருப்பலியாக ஒப்புக் கொடுக்கப்பட உள்ளது. திருவிழா திருப்பலியைத் தொடர்ந்து புனித கல்கத்தா அன்னை தெரேசாவின் திருச்சுரூப பவனி இடம் பெறவுள்ளது.

தமிழகத்தின் கார்மேல் சபை தலைவரான அருட்தந்தை நேசமணி அடிகளார் இம்முறை திருவிழா நிகழ்வுகளில் கலந்து சிறப்பிக்கவுள்ளார்.

புனித கல்கத்தா தெரேசா அன்னைக்கு இலங்கையில் முதல் ஆலயம் காலி மறை மாவட்டத்தில் உள்ள தல்கஸ்வலை தோட்டத்தில் 2012 ஆம் ஆண்டு திறக்கப்பட்டது. இந்த ஆலயம் நிர்மாணிக்கப்படுவதற்கு முன்பதாக இந்த ஊரில் திருப்பலி ஒப்புக் கொடுப்பதற்கென்று ஆலயம் ஒன்று இருக்கவில்லை. வீடுகளிலும் மர நிழல்களிலுமே திருப்பலி பூசைகள் ஒப்புக் கொடுக்கப்பட்டன.

அந்த குறையை நிவர்த்தி செய்யும் வகையிலேயே புனித கல்கத்தா தெரேசா அன்னை ஆலயம் தல்கஸ்வலை தோட்டத்தில் ஆரம்பிக்கப் பட்டது.







10 ஆண்டுகள் நிறைவில் இந்த ஆலயம் பல்வேறு வகையிலும் வளர்ச்சி கண்டு இம்முறை திருவிழா சிறப்பாக கொண்டாடப்படவுள்ளது. புனித அன்னை தெரேசாவின் புனித பண்டம் மக்களின் வணக்கத்திற்காக வைக்கப்பட்டுள்ளமை இந்த ஆலயத்தின் சிறப்பம்சமாகும்.

அண்டி வந்தோருக்கு அடைக்கலமாகவும் அவர்கள் குறைகள்,நோய்கள் எல்லாவற்றையும் தீர்க்கும் அருட் தலமாகவும் இவ்வாலயம் விளங்குகின்றமை குறிப்பிடத்தக்கது.

ஆலய திருவிழாவுக்கு கொழும்பு உள்ளிட்ட பிற பகுதிகளில் இருந்து செல்லும் யாத்திரிகர்கள் பயண ஏற்பாடுகளுக்காக ஆலயத்தின் பங்குத்தந்தை அருட்பணி அருண் ரெக்ஸ்( 0750473011)அருட்பணி ஏசு ராஜன்(0754609843) ஆகியோரை தொடர்பு கொள்ள முடியும் என பங்குத் தந்தை கேட்டுக் கொண்டுள்ளார்.

எல்.செல்வா...

தினகரன்
THINAKARAN

35, டி.ஆர்.விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10
தபால் பெட்டி இலக்கம்: 834
தொலைபேசி இலக்கம்: 2429429, 2429272, 2429279
பெக்ஸ் : 2429270, 2429329, விளம்பர முகாமையாளர் : 2429321

சுபகிருது வருடம் ஆவணி மாதம் 15ஆம் நாள் செவ்வாய்க்கிழமை
ஹிஜ்ரி வருடம் 1444 ஸபர் பிறை 01

**குறள் தரும் சிந்தனை**

நுண்ணியம் என்பார் அளக்குங்கோல் காணுங்கால்
கண்ணல்லது இல்லை பிற

நாங்கள் நுண் அறிவை உடையவர்கள் என்று கூறிக்கொள்பவர், பிறர் மனக்கருத்தை அளந்து அறியப் பயன்படுத்தும் அளவு கருவி எது என்று ஆய்ந்து பார்த்தால் அது கண்ணே அன்றி வேறு இல்லை.

## புலம்பெயர் அமைப்புகளுடனான பேச்சு ஆக்கபூர்வமான ஆரம்பம்!

இலங்கையில் இருந்து புலம்பெயர்ந்து மேற்கு நாடுகளில் வாழும் புலம்பெயர் தமிழர் அமைப்புகளின் பிரதிநிதிகளுடன் பேச்சுவார்த்தைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதாக நீதியமைச்சர் விஜேதாச ராஜபக்ஷ தெரிவித்திருக்கின்றார்.

இப்பேச்சுவார்த்தைகளின் போது புலம்பெயர் தமிழர் அமைப்புகளின் பிரதிநிதிகள் தெரிவித்த விடயங்கள் மற்றும் அவர்கள் முன்வைத்த கரிசனைகள் குறித்து ஆராய்ந்து தீர்வு காணவென மூவரடங்கிய குழுவொன்றை நீதியமைச்சர் நியமித்திருக்கின்றார். அதனை அவரே உறுதிப்படுத்தியும் உள்ளார்.

நீதியமைச்சரின் இந்த அறிவிப்பும் நடவடிக்கையும் நல்லதொரு நம்பிக்கை தரும் ஆரம்பம் என்பதே நாட்டை உண்மையாக நேசிப்பவர்களின் கருத்தாகும்.

புலம்பெயர் தமிழர்கள் என்றாலும் அவர்களும் இந்த மண்ணைத் தாயகமாகக் கொண்டவர்கள்தான். இது மறுக்க முடியாத உண்மையாகும். இந்நாட்டில் கடந்த காலத்தில் நிலவிய யுத்த சூழ்நிலையின் காரணமாக, அவர்கள் தாயகத்தை விட்டு வெளியேறி மேற்கு நாடுகளில் வாழ்கின்றனர். அவர்கள் பல தசாப்தங்களாக அந்நாடுகளில் வாழ்ந்து வருகின்றனர். அவர்களில் பலர் பொருளாதார ரீதியில் வளமானவர்களாகவும் அந்தந்த நாடுகளின் அரசியலில் செல்வாக்கு மிக்கவர்களாகவும் இருக்கின்றனர். சிலர் அந்தந்த நாடுகளின் நிர்வாகக் கட்டமைப்புகளிலும் மக்கள் பிரதிநிதிகளாக இருந்து கொண்டிருக்கின்றனர்.

தம் தாயகத்தின் முன்னேற்றத்திலும் மேம்பாட்டிலும் அக்கறையும் கரிசனையும் கொண்ட பலர் புலம்பெயர் தமிழர்கள் மத்தியில் நிறைய இருக்கவே செய்கின்றனர். அவர்கள் இந்நாட்டுக்கு உதவி, ஒத்துழைப்புகளை நல்குவதிலும் அக்கறை கொண்டுள்ளனர்.

அதேநேரம், இலங்கையின் முன்னேற்றத்திற்கும் அபிவிருத்திக்கும் புலம்பெயர் அமைப்புகளின் ஆதரவையும் ஒத்துழைப்பையும் பெற்றுக் கொள்வது தொடர்பிலும் கவனம் செலுத்தப்படுகின்றது. இது தொடர்பான கருத்து பரிமாறல்கள் அவ்வப்போது இடம்பெற்றும் உள்ளன.

இதேவேளை, இந்நாடு பொருளாதார ரீதியில் பாரிய நெருக்கடிக்கு முகம் கொடுத்திருக்கிறது. இந்நெருக்கடியில் இருந்து மீட்சி பெறுவதற்கு சர்வதேசத்தின் உதவி ஒத்துழைப்புகளை எதிர்பார்த்துள்ள இலங்கைக்கு இந்தியா, சீனா உள்ளிட்ட பல நாடுகளும் சர்வதேச அமைப்புகளும் உதவி ஒத்துழைப்புகளை நல்கியுள்ளன.

இந்த நிலையில் புலம்பெயர் தமிழ் அமைப்புகளின் உதவி ஒத்துழைப்புகளையும் பெற்றுக் கொள்வது பொருளாதார நெருக்கடியிலிருந்து விரைவாகவும் வேகமாகவும் மீட்சி பெறப் பக்கத்துணையாக அமைய முடியும் என்பதில் ஐயமில்லை.

இந்தப் பின்னணியில்தான் நீதியமைச்சர் விஜேதாச ராஜபக்ஷ, கனடாவில் செயற்படும் நீதி மற்றும் சமத்துவத்திற்கான கனடா அமைப்பு, அவுஸ்திரேலியா, பிரான்ஸ் நாடுகளில் செயற்படும் புலம்பெயர் அமைப்புக்கள் என்பவற்றுடன் பேச்சுவார்த்தைகளை மேற்கொண்டுள்ளார்.

'டெலி கொன்பிரன்சிங்' மூலம் இடம்பெற்றுள்ள இப்பேச்சுவார்த்தைகளின் போது புலம் பெயர் தமிழ் அமைப்புகளின் பிரதிநிதிகள் சில கரிசனைகளையும் கோரிக்கைகளையும் வெளிப்படுத்தியுள்ளனர். அவற்றில், 'தமிழ் அரசியல் கைதிகளை விரைவில் விடுதலை செய்ய வேண்டும், வடக்கு கிழக்கில் தமிழ் மக்கள் எதிர்கொள்ளும் நெருக்கடிகள் முடிவுக்குக் கொண்டு வரப்பட வேண்டும், சமூகங்களுக்கு இடையிலான நல்லுறவை வலுப்படுத்த வேண்டும்' என்பன அவர்களது குறிப்பிடத்தக்க கரிசனைகளாக அமைந்துள்ளன.

இவை தொடர்பில் கவனம் செலுத்தி ஆராய்ந்து, அவற்றுக்குத் தீர்வு காணும் நோக்கில்தான் முன்னாள் பிரதம நீதியரசர் அசோக டி சில்வா தலைமையில் மூவர் கொண்ட குழுவினர் நியமிக்கப்பட்டுள்ளனர். இக்குழுவை நியமித்திருக்கும் நீதியமைச்சர், அவர்களை சந்தித்து இது தொடர்பில் கலந்துரையாடல்களையும் மேற்கொண்டுள்ளார்.

உண்மையில் இது நல்லதொரு தொடக்கம் என்பதில் மாற்றுக்கருத்துக்கு இடமில்லை. பொருளாதார நெருக்கடிக்கு உள்ளாகியுள்ள தற்போதைய சூழலில் அதிலிருந்து மீட்சி பெறுவதற்கு புலம்பெயர் தமிழ் அமைப்புகளின் உதவி, ஒத்துழைப்புகளைப் பெற்றுக் கொள்ள இந்த முயற்சி பெரிதும் பங்களிக்கக் கூடியதாக அமையும்.

அமைச்சர் விஜேதாச ராஜபக்ஷ தொடக்கி வைத்திருக்கும் இந்த முயற்சி வெற்றிகரமாகவும் நாட்டுக்கு நன்மை பயக்கக் கூடிய வகையிலும் அமைய வேண்டும் என்பதுதான் மக்களின் எதிர்பார்ப்பாகும்.

ஆகவே கட்சி, அரசியல், இன, மத பிரதேச வேறுபாடுகளுக்கு அப்பால் சகலரும் ஒன்றுபட்டு இந்நாட்டை கட்டியெழுப்ப வேண்டும்.

அதற்கான பொறுப்பும் கடமையும் இம்மண்ணில் பிறந்த ஒவ்வொருவருக்கும் முன்பாக உள்ளது. அதனை உணர்ந்து செயற்படுவதே இன்றைய தேவையாகும்.

editor.tkn@lakehouse.lk

# அரசியலிலும் மருத்துவத்துறையிலும் பெரும் பணியாற்றியவர் பேராசிரியர் திஸ்ஸ விதாரண

பேராசிரியர் திஸ்ஸ விதாரண கொழும்பு பல்கலைக்கழகத்தில் பட்டம் பெற்றவர். 5 விளையாட்டு கழகங்களில் சிறந்த கிரிக்கெட் கப்டனாக செயற்பட்டார். பேராசிரியர் திஸ்ஸ விதாரண மருத்துவ அதிகாரியாக (1959_57) பணியாற்றினார். 1963_64 இல் கொழும்பு பொதுமருத்துவமனையில் மருத்துவப் பதிவாளராக இருந்தார். அவர் 1965 இல் இலங்கை பல்கலைக்கழகத்தில் மருத்துவத்தில் MD பட்டம் பெற்றார். பின்னர் அவர் லண்டனுக்கு கல்விகற்க சென்றார், 1968 இல் லண்டன் ஸ்கூல் ஒஃப் ஹைஜீன் ரூ ட்ராபிகல் மெடிசினில் பக்டீரியாவியல் டிப்ளோமா மற்றும் 1971 இல் லண்டன் பல்கலைக்கழகத்தில் Phd in Virology பட்டம் பெற்றார்.

1965 இல் கொழும்பில் மருத்துவம், விஞ்ஞானம் மற்றும் தொழிநுட்ப பணிப்பாளராக பேராசிரியர் திஸ்ஸ விதாரண மருத்துவ ஆராய்ச்சி நிறுவனத்தில் 1983 முதல் 1994 வரை சேவையாற்றினார். அவர் ஐஊயு இன் உதவியுடன் சர்வதேச தரத்திற்கு ஆசுஐ ஐ நவீனப்படுத்த முடிந்தது. இலங்கையில் முதன்முறையாக ஹெபடைடிஸ் பி நோய் கண்டறிதல் பரிசோதனைகளை நிறுவி, ஜப்பானிய மூளைக்காய்ச்சலின் முதல் வெடிப்பை இங்கு கண்டறிந்து, 4 வகையான டெங்குவை கட்டுப்படுத்த பங்களித்தார். நாட்டில் தேசிய போலியோ ஒழிப்புக் குழுவில் உறுப்பினராக இருந்தது சிறப்புரிமை பெற்றவர்.

அவர் பெரியம்மை மற்றும் போலியோ ஒழிப்புக்கும் டெங்குவைக் கட்டுப்படுத்துவதற்கும் பங்களித்தார். அவர் இலங்கை அறிவியல் முன்னேற்ற சங்கத்தின் யு பிரிவின் தலைவராகவும், நுண்ணுயிரியலாளர்கள் கல்லூரியின் தலைவராகவும் மற்றும் இலங்கை ஒவ்வாமை மற்றும் நோயெதிர்ப்பு சங்கத்தின் ஸ்தாபக தலைவராகவும் இருந்துள்ளார்.

அவர் தேசிய அறிவியல் அகாடமியின் உறுப்பினராக உள்ளார். அவர் 80 க்கும் மேற்பட்ட சக மதிப்பாய்வு செய்யப்பட்ட ஆராய்ச்சி வெளியீடுகளைக் கொண்டுள்ளார். அவர் இங்கும் வெளிநாடுகளிலும் பல மதிப்புமிக்க சொற்பொழிவுகளை வழங்கியுள்ளார். பேராசிரியர் விதாரண 1980 களில் எடின் பேர்க் நகர மருத்துவமனையின் பிராந்திய வைரஸ் ஆய்வகத்தில் வைராலஜிஸ்ட் ஆலோசகராக இருந்தார், இயக்குநராக செயல்பட்டார். அவர் 1991 முதல் 1993 வரை ஆஸ்திரேலியாவின் மெல்போர்னில் உள்ள விக்டோரியா தொற்று நோய்களுக்கான குறிப்பு ஆய்வகத்தின் துணை இயக்குநராக இருந்தார். அவர் 1981 முதல் 2005 வரை வைரஸ் நோய்களுக்கானநிபுணர் குழு மற்றும் சுகாதார ஆராய்ச்சிக்கான உலகளாவிய மன்றத்தில் உறுப்பினராக இருந்தார்.



இன்று பிறந்த தினம்

அவர் 20 தடவைகளுக்கு மேல் உலக சுகாதார அமைப்பின் ஆலோசகராகவும் பணியாற்றினார், டெங்கு செயலணியின் உறுப்பினராகவும் இருந்தார். 1994 இல் சுகாதார அமைச்சிலிருந்து ஓய்வு பெற்ற திஸ்ஸ விதாரண ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தில் மருத்துவ நுண்ணுயிரியல் துறையின் நிறுவனர் பேராசிரியரானார்.

அவர் பாராளுமன்றத்தில் தீவிர பங்கு வகித்தார், பல்வேறு பாடங்களில் ஆய்வு செய்யப்பட்ட உரைகளை ஆற்றினார். அவர் பல சிறப்புக் குழுக்களில் உறுப்பினராக இருந்தார்.

அரசியல் மற்றும் மருத்துவத் துறைகளில் தனது பணியைத் தொடர்ந்தபோது, அவர் 2019 இல் இலங்கையின் தானியக் களஞ்சியமான வட மத்திய மாகாண ஆளுநராக நியமிக்கப்பட்டார். அறிவியல் கருத்தரங்குகள் நடத்தி உள்ளூர் விளைச்சலை எப்படி அதிகரிக்கலாம் என்று அறிக்கை தயாரித்தார்.

மத்திய வங்கி மூலம் விவசாயிகளுக்கு கடன் பொறியில் இருந்து தப்பிக்க வழிகளை கண்டுபிடித்தார். ஓகஸ்ட் 2020 இல் அவர் பாராளுமன்றத்தில் எம். பி ஆனார் மற்றும் பொது கணக்குகளுக்கான குழு தலைவராக நியமிக்கப்பட்டார்.

**செ. நித்தியானந்தன்**

# ஹஜ் முகவர் சங்கத்தின் 34 ஆவது வருடாந்த பொதுக் கூட்டம்

ஹஜ் முகவர் சங்கத்தின் 34 ஆவது வருடாந்த பொதுக் கூட்டம் அதன் தலைவர் இஸாம் கெளஸ் தலைமையில் ஹம்பாந்தோட்டை ஷங்கிரிலா ஹோட்டலில் நடைபெற்றது. இதில் பெருமளவு உறுப்பினர்கள் கலந்து கொண்டிருந்தனர். கடந்த சில வருடங்களாக கொவிட் 19 காரணமாக உலகளாவிய ரீதியில் தடைப்பட்டிருந்த ஹஜ் மற்றும் உம்ரா செயற்பாடுகளை ஆரம்பிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்ற இச்சந்தர்பத்தில் இம்முறை அங்கத்தவர்கள் ஆர்வமாக பொதுக்கூட்டத்தில் கலந்து கொண்டிருந்தனர்.

கிறாத்துடன் நிகழ்வு ஆரம்பிக்கப்பட்டது. நடப்பு வருட புதிய நிர்வாக உறுப்பினர் தெரிவு இடம்பெற்றது. யாப்பின் பிரகாரம் தலைவர் இரண்டு வருடகாலத்திற்கு நியமிக்கப்படுவதனால் தலைவரை தவிர ஏனையோர் அங்கத்தவர்களினால் தெரிவு செய்யப்பட்டனர். உதவித் தலைவர்களாக எம், ஆர், எம், பாருக், அஹமட் நிஜார், செயலாளர் எம். ஓ. எப். ஜெஸீம், உதவிச் செயலாளர் சப்ராஸ் சாதியா, பொருளாளர் எம். ஜே. எ. குவாப்டீன், உதவி பொருளாளர் எம்.எப். என். எம். உஸாமா





நிர்வாக கமிட்டி உறுப்பினர்களாக பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்.

எ. சீ. எம். கரீம், எம். ஐ. எம். நெளபர், சலீம் இப்ராஹிம், ஏ. அமானுல்லா, எம். எ. எம். அஸ்கர், எம். எப். எம். பஸீம், அவ்ன் அவ்ப், எ. பீ. நுஹ்மான்.

ஹஜ் முகவர் சங்கத்தின் தலைவர் இஸாம் கெளஸ் இங்கு உரையாற்றும் போது "கடந்த சில வருடங்களாக தடைப்பட்டிருந்த எமது சேவைகள் தற்பொழுது முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. இம்முறை புனித ஹஜ் கடமைக்காக சவூதி அரேபிய அரசாங்கம் 1580 யாத்திரிகர்களை அழைத்துச் செல்வதற்கு அனுமதி வழங்கி இருந்தும் இம்முறை 980 பேர் மாத்திரமே புனித யாத்திரையில் கலந்து கொண்டனர்.

இவர்களை அனுப்புவதற்கு எமக்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, புத்தசாசன, சமய மற்றும் கலாசார அமைச்சர் விதுர விக்கிரமநாயக்க, முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் பணிப்பாளர் அன்ஸார் இப்ராஹிம் மற்றும் அதிகாரிகளும் ஒத்துழைப்பினை வழங்கியிருந்தனர்.

இதனால் இவர்களுக்கும் இந்த நிகழ்வில் கலந்து கொண்ட சகல உறுப்பினர்களுக்கும் நன்றியினை தெரிவித்துக் கொள்கிறோம்" எனக் குறிப்பிட்டார்.

**எம். இர்பான் ஸகரியா**
ஹம்பாந்தோட்டை குறூப் நிருபர்

# கிழக்கு மாகாண கலாசார பணிப்பாளராக நியமிக்கப்பட்ட திருமதி சரண்யா சுதர்சன்

திருகோணமலை மாவட்டம், தம்பலகமம் பிரதேசத்தை பிறப்பிடமாகக் கொண்ட திருமதி சரண்யா சுதர்சன் கிழக்கு மாகாண கலாசாரத் திணைக்களத்தின் பணிப்பாளராக நியமிக்கப்பட்டுள்ளார். கணபதிப்பிள்ளை அரியநாயகம்_ பத்மலோஜினி அரியநாயகம் தம்பதியருக்கு இரண்டாவது பிள்ளையாகப் பிறந்த சரண்யா, திருகோணமலை ஸ்ரீ சண்முக இந்து மகளிர் கல்லூரியில் ஆரம்பக்கல்வி தொடக்கம் க.பொ.த உயர்தரம் வரை கற்றார்.

உயர்தரப் பரீட்சையில் சித்தி பெற்று கிழக்குப் பல்கலைக்கழக முகாமைத்துவ பீடத்திற்கு தெரிவானார். இவர், தனது 4 வருட பல்கலைக்கழக காலப்பகுதியில் வியாபார நிருவாகமாணிப் பட்டம் மற்றும் சந்தைப்படுத்தல் சிறப்பு பட்டங்களைப் பெற்று முதல்நிலை மாணவியாகத் திகழ்ந்தார். சிறந்த மாணவருக்கான விருது பெற்றவர் இவர்.



கற்றல் செயற்பாடுகளில் மட்டும் நின்றுவிடாமல் விளையாட்டு நிகழ்ச்சிகள், கலை கலாசார நிகழ்ச்சிகள், தொழிநுட்ப அறிவுப் போட்டிகள் மற்றும் மேடை நிகழ்ச்சிகள் போன்றவற்றில் பங்குபற்றி அகில இலங்கை ரீதியில் முதலாம் இடம்பெற்ற ஒரு முன்னணி மாணவியாகவும் திகழ்ந்தார். இலங்கை நிருவாக சேவை உத்தியோகத்தர் பதவியில் பயிலுநராக இருந்தபோது, பட்டபின் படிப்பு பொது நிருவாகப் பரீட்சையில் மிகச் சிறந்த தேர்ச்சி சித்தி பெற்றதனால், அவருக்கு தங்க விருது கிடைக்கப் பெற்றமை குறிப்பிடத்தக்கது.

2014 ஆம் ஆண்டு அபிவிருத்தி உத்தியோகத்தராக அரச சேவைக்குள் உள்வாங்கப்பட்டு, அதேயாண்டில் முகாமைத்துவ பயிலுனராக இலங்கை வங்கியில் கடமையாற்றி வந்தார். பின்னர் 2015 ஆம் ஆண்டு இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவனத்தில் இலங்கை நிருவாக சேவை உத்தியோகத்தர் பயிலுனராக இணைக்கப்பட்டார்.

2015 ஆம் ஆண்டு இறுதிக் காலப்பகுதியில் கிழக்கு மாகாண சிறுவர் நன்னடத்தை மற்றும் பராமரிப்பு சேவைகள் திணைக்களத்தின் உதவி ஆணையாளராக நியமிக்கப்பட்டு 7 வருடங்கள் கடமையாற்றி வந்த நிலைமையில், 2022 ஆம் ஆண்டு சிறிது காலப்பகுதியில் கிழக்கு மாகாண சமூக சேவைகள் திணைக்களத்தின் பதில் உதவிப் பணிப்பாளராகவும் கடமையாற்றினார்.

இந்நிலைமையிலேயே, கிழக்கு மாகாண கலாசாரத் திணைக்களத்தின் பணிப்பாளராக கிழக்கு மாகாண ஆளுநர் அனுராதா யஹம்பத்தினால் அண்மையில் இவர் நியமிக்கப்பட்டார்.

திருகோணமலை பிரதி நீர்ப்பாசனப் பணிப்பாளர் அலுவலகத்தில் கடமையாற்றும் பொறியியலாளர் இராஜயோகம் சுதர்ஸன் என்பவரை 2014 ஆம் ஆண்டு திருமணம் செய்திருந்தார்.

**எம்.எஸ்.எம்.றிஸ்வான்**
(அக்கரைப்பற்று வடக்கு தினகரன் நிருபர்)

# அயோத்தி இராமர் கோயிலில் அடுத்த ஆண்டு பக்தர் தரிசனம்

இந்தியாவின் உத்தரபிரதேச மாநிலம் அயோத்தியில் இராமர் பெருமானுக்கு பிரமாண்ட கோவில் கட்டுவதற்கு கடந்த 2019 ஆம் ஆண்டு நவம்பர் 9 ஆம் திகதி உச்சநீதிமன்றம் அனுமதி அளித்தது. கட்டுமான பணிகளை கவனிக்க ராம ஜென்ம பூமி அறக்கட்டளை அமைக்கப்பட்டது. கடந்த 2020 ஆம் ஆண்டு ஓகஸ்ட் 5 ஆம் திகதி பிரதமர் நரேந்திர மோடி இராமர் கோவில் கட்டுமானப் பணிக்கு அடிக்கல் நாட்டினார்.

2 ஆண்டுகளுக்கு மேலாக கட்டுமான பணி நடந்து வரும் நிலையில், ராமஜென்ம பூமி அறக்கட்டளை பொதுச்செயலாளர் சம்பத் ராய் ஒரு செய்தி நிறுவனத்துக்கு பேட்டி அளித்தார். அயோத்தியில் முகாமிட்டுள்ள அவர், கரசேவக புரத்தில் தங்கி இருக்கிறார். தினந்தோறும் கட்டுமான பணிகளை மேற்பார்வையிடுவதுடன், அதன் முன்னேற்றம் குறித்து கூட்டங்கள் நடத்தி ஆய்வு செய்து வருகிறார்.

கோவில் கட்டுமானப் பணி மற்றும் கோவிலை சுற்றி உள்ள வீதிகளை மேம்படுத்தும் பணி முழுவீச்சில் நடந்து வருகிறது.

40 சதவீத கட்டுமான பணி முடிந்துள்ளது. 80 சதவீத பீட பணி முடிந்துள்ளது. அடுத்த ஆண்டு டிசம்பர் மாதம் முதல் உலகம் முழுவதும் இருந்து பக்தர்கள் தரிசனத்துக்கு அனுமதிக்கப்படுவார்கள். இது கடவுள் காரியம் என்பதால், பணத்துக்கு தட்டுப்பாடு இல்லை.

இவ்வாறு அவர் கூறினார்.

கோவில் கட்டுமானத்துக்கான கற்களை செதுக்கும் பணியில் ஆண், பெண் தொழிலாளர்கள் ஈடுபட்டுள்ளனர். தற்காலிக இராமர் கோவிலில் சுவாமி கும்பிட வருபவர்கள், அந்த இடத்துக்கும் சென்று பார்ப்பது வழக்கமாக உள்ளது. கற்களை தொட்டு கும்பிடுவதுடன், புகைப்படமும் எடுத்துக் கொள்கிறார்கள்.

கோயிலின் கருவறைக்குள் பயன்படுத்த ராஜஸ்தான் மாநிலம் மக்ரானா மலையில் இருந்து வெட்டி எடுக்கப்பட்ட மார்பிள்கள் பயன்படுத்தப்படும். மார்பிள்கள் செதுக்கும் பணி தீவிரமாக நடந்து வருகிறது. செதுக்கப்பட்ட மார்பிள் கற்கள் ஏற்கனவே அயோத்திக்கு வந்து விட்டன.

இராமர் கோயிலை சுற்றி உள்ள 70 ஏக்கர் நிலத்தில், சீதை, லட்சுமணன், விநாயகர், சபரி, ஜடாயு, வால்மீகி ஆகியோருக்கும் கோவில்கள் கட்ட திட்டமிடப்பட்டுள்ளது.

மேலும், புகழ்பெற்ற அனுமன்காரி கோவிலுக்கு செல்லும் வீதி அகலப்படுத்தப்படுகிறது. அதற்காக வழியில் உள்ள கடைகள், வீடுகள் இடிக்கப்பட்டு வருகின்றன.

முதலில், இதற்கு எதிர்ப்பு எழுந்த போதிலும், தற்போது உள்ளூர் மக்கள் தாங்களாகவே முன்வந்து தங்கள் கடைகளையும், வீடுகளையும் இடிக்கிறார்கள்.

# ஓயாத உழைப்புக்கு ஒப்பற்ற உதாரணம் கல்விமான் சட்டத்தரணி கா.மாரிமுத்து

## அமரர் சௌமியமூர்த்தி தொண்டமானின் 109ஆவது பிறந்த தினமான இன்று, மலையக கலாசார ஒன்றியத்தின் ஏற்பாட்டில் 'வாழும் போதே வாழ்த்துவோம்' பாராட்டு வைபவம்

நாடறிந்த கல்விமான் சட்டத்தரணி கா.மாரிமுத்து தொழில் நேர்மை, தொழிற்சங்க ஈடுபாடு, வாதாடும் வல்லமை, பெருந்தோட்ட மக்கள் நலம் நாடும் அயராத உழைப்பு கொண்டவராவார்.

சட்டத்தரணி மாரிமுத்து ஸ்ரீ ஜயவர்த்தனபுர பல்கலைக்கழகத்தில் பொது நிருவாகத்திலும், திறந்த பல்கலைகழகத்தில் சட்டத்துறையிலும் பட்டம் பெற்றவராவார். இலங்கை நிர்வாக சேவையில் 1971ஆம் ஆண்டு இணைந்து அரச சேவையில் பல்வேறு உயர் பதவிகளை வகித்துள்ளார்.

ஆரம்பத்தில் மட்டகளப்பு கோறளைப்பற்று, வாழைச்சேனை பிரதேச செயலாளராக பணியாற்றிய அவர், அதன் பின்னர் மட்டக்களப்பு, அம்பாறை, பதுளை மாவட்டங்களில் உதவி தொழில் ஆணையாளராகவும், சிரேஷ்ட உதவித் தொழில் ஆணையாளராகவும் பணியாற்றிருந்தார். இதனைத் தொடர்ந்து தொழில் திணைக்களத்தின் தலைமைக் காரியலயத்தில் பிரதி தொழில் ஆணையாளராக கடமையாற்றியுள்ளார்.

அமரர் சௌமியமூர்த்தி தொண்டமான் புடவைக் கைத்தொழில் மற்றும் உல்லாசத் துறை அமைச்சராக இருந்த காலத்தில், இந்த அமைச்சில் சிரேஷ்ட உதவிச் செயலாளராக மாரிமுத்து கடமையாற்றினார். அமரர் சௌமியமூர்த்தி தொண்டமானோடு நெருங்கிப் பழகி தோட்டப்புற பகுதிகளுக்கும், குறிப்பாக இளைஞர்களுக்கும் பல முன்னேற்றகரமான திட்டங்களை வகுத்து அமுல்படுத்த அவர் காரணமாக இருந்தார். 1994 ஆம் ஆண்டு அப்போதைய ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் அரசாங்கத்தால் தோட்டப்புற மக்களின் சமூக கலாசார பிரச்சினைகளை ஆராய்வதற்காக நியமிக்கப்பட்ட குழுவில் மாரிமுத்து பிரதானமாக இடம்பெற்றிருந்தார். இந்தக் குழுவானது தோட்டப்புற மக்களின் அபிலாஷைகளுக்கும், விருப்பங்களுக்கும் தனியான அமைச்சை அமைக்க வேண்டுமென சிபாரிசு செய்திருந்தது.

இந்த அடிப்படையிலேயேதான் 1994 ஆம் ஆண்டு முதன் முதலாக தோட்ட உட்கட்டமைப்பு அமைச்சு அமைக்கப்பட்டு பெருந்தோட்டங்களில் பல்வேறு அபிவிருத்திப் பணிகளையும் குறிப்பாக பெருந்தோட்டங்களுக்கு மின்சார வசதிகளையும் ஏற்படுத்தி கொடுப்பதில் தீவிர கவனம் செலுத்தப்பட்டது.

இவர் இலங்கை நிர்வாக சேவையில் உல்லாசத்துறை அமைச்சின் மேலதிக செயலாளராக பதவி வகித்தார். 2000 ஆம் ஆண்டு அரச சேவையிலிருந்து ஓய்வு பெற்ற பின்னர் இலங்கை தொழிலாளர் காங்கிரசின் நியமன பாராளுமன்ற உறுப்பினராக நியமிக்கப்பட்டார்.



2001 ஆம் ஆண்டு கட்சியின் வேண்டுகோளுக்கிணங்க பாராளுமன்ற உறுப்பினர் பதவியில் இருந்து இராஜினாமா செய்து, ஜோர்தான் நாட்டுக்கான தூதுவராக பதவியேற்றிருந்தார். இவரது பதவிக் காலத்தில் சுமார் இருபத்தையாயிரம் இலங்கை பணியாளர்களின் நலன் கருதி சேமநல திட்டங்களை அமுல்படுத்தினார். இதுவே இலங்கை வெளிநாட்டு வேலை வாய்ப்பு பணியகத்திற்கு முதல் ஒப்பந்தமாக அமைந்தது.

2006ஆம் ஆண்டு ஜோர்தான் நாட்டு மன்னர் அப்துல்லா உஷைன் அவர்களால் இலங்கைக்கும் ஜோர்தானுக்குமிடையில் இருதரப்பு நட்புறவை திறம்பட செயற்படுத்தியதற்காக 'அலஸ்டிகலால்' என்ற சிறப்பு பட்டம் அவருக்கு வழங்கப்பட்டது. அதே ஆண்டு தனது தூதுவர் பதவிக்காலம் முடிவடைந்து இலங்கை திரும்பிய பின்னர் சமூக இளைஞர் விவகார மற்றும், சமூக அபிவிருத்தி அமைச்சினதும், பின்னதாக அமரர் ஆறுமுகன் தொண்டமானின் ஆலோசனைக்கமைவாக கால்நடை அபிவிருத்தி அமைச்சினதும் ஆலோசகராக அமைச்சரவையினால் நியமிக்கப்பட்டார்.

மாரிமுத்து இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் தொழிற்சங்க மற்றும் அரசியல் நடவடிக்கைகளில் பங்காற்றினார்.

2007ஆம் ஆண்டு நிர்வாகம் மற்றும் சட்டத்துறை நிர்வாக உபதலைவராக பணியாற்றினார். இதனோடு 2009ஆம் ஆண்டு தொடக்கம் 2020ஆம் ஆண்டு வரை பெருந்தோட்ட சேவையாளர் காங்கிரஸின் பொதுச் செயலாளராகவிருந்து திறம்பட சேவையாற்றினார். 2015ஆம் ஆண்டு பொதுத் தேர்தலில் இ.தொ.கா சார்பில் பதுளை மாவட்டத்தில் முதன்மை வேட்பாளராக போட்டியிட்டார். 2022 ஆம் ஆண்டு தோட்ட வீடமைப்பு மற்றும் சமுதாய உட்கட்டமைப்பு இராஜாங்க அமைச்சர் ஜீவன் தொண்டமானின் பொதுஜன தொடர்பு உத்தியோகத்தராக நியமிக்கப்பட்டார்.

தோட்டத் தொழிலாளர்களின் நாளாந்த அடிப்படைச் சம்பளத்தை 1000 ரூபாவாக நிர்ணயம் செய்து 2021ஆம் ஆண்டு மேன்முறையீட்டு நீதிமன்றில் தாக்கல் செய்திருந்த வழக்கினை தொழிலாளர்களுக்கு சாதகப்படுத்தி 1000ரூபா சம்பளத்தை பெற்றுக் கொடுக்க அர்ப்பணிப்பான முயற்சி மேற்கொண்டார்.

அவரது உயரிய சேவையை கருத்திற் கொண்டு மலையக கலாசார ஒன்றியத்தின் ஏற்பாட்டில் 'வாழும் போதே வாழ்த்துவோம்' எனும் தொனிப் பொருளில் அவரை கௌரவித்து பாராட்ட ஏற்பாடாகி உள்ளது. அமரர் சௌமியமூர்ததி தொண்டமானின் 109 ஆவது பிறந்த தினமான இன்று சட்டத்தரணி கா.மாரிமுத்துவை பாராட்டுவதில் இ.தொ.கா பெருமிதமடைகின்றது.



**தேவதாஸ் சவரிமுத்து ...**
*சிரேஷ்ட ஊடக இணைப்பாளர்*
*இலங்கை தொழிலாளர் காங்கிரஸ்*

# விடிய விடிய கண்விழித்து உடலை வருத்தி பாடங்களை கற்பதனால் பயன் கிடைக்காது!

## மாணவர்கள் பாடங்களை எவ்வாறு கற்க வேண்டும் என்பது பற்றி தனது அனுபவத்தின் வாயிலாக ஆலோசனை கூறுகின்றார் அகில இலங்கை ரீதியில் உயிரியல் துறையில் முதலிடம் பெற்ற காரைதீவு மாணவன் துவாரகேஷ்

க.பொ.த. உயர்தரப் பரீட்சையில் அகில இலங்கை ரீதியில் உயிரியல் துறையில் காரைதீவைச் சேர்ந்த தமிழ்வண்ணன் துவாரகேஷ் முதலிடம் பெற்று சாதனை படைத்துள்ளார். கிழக்கின் வரலாற்றில் இது முதற் தடவையாக ஏற்படுத்திய அகில இலங்கை சாதனையாகும்.

தோல்வைத்திய நிபுணர் டொக்டர் தமிழ்வண்ணன் மற்றும் வைத்திய அதிகாரி பகீரதி தம்பதிகளின் சிரேஷ்ட புதல்வன் துவாரகேஷ் ஆவார். பெற்றோர் இருவரும் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் பணியாற்றுவதால் தற்சமயம் அவர்கள் மட்டக்களப்பில் வசித்து வருகின்றார்கள்.



கிழக்கு மாகாண வரலாற்றில் முதல் தடவையாக அகில இலங்கை ரீதியில் சாதனை படைத்து மருத்துவத் துறையில் முதலிடம் பெற்ற துவாரகேஷ் முத்தமிழ் வித்தகர் சுவாமி விபுலானந்த அடிகளார் பிறந்த காரைதீவு மண்ணைச் சேர்ந்தவராவார்.

சாதனை நிகழ்த்திய மாணவனை பலரும் பாராட்டி வருகிறார்கள். கிழக்கு மாகாண கல்விப் பணிப்பாளர் திருமதி நகுலேஸ்வரி புள்ளநாயகம், மட்டக்களப்பு மாநகர சபை மேயர் தியாகராஜா சரவணபவன் உள்ளிட்ட பலர் வீடுதேடிச் சென்று பாராட்டியுள்ளனர். "மருத்துவத்துறை விஞ்ஞானியாக வரவேண்டும் என்பதே எனது இலட்சியம்" என்கிறார் மாணவன் துவாரகேஷ். அதாவது சர்வதேச பல்கலைக்கழகத்தில் பயின்று மருத்துவத் துறை விஞ்ஞானியாக வரவேண்டும் என்பது எனது இலட்சியம் என்றும் கூறினார் அவர். மாணவன் துவாரகேஷ் மட்டக்களப்பு புனிதமிக்கேல் கல்லூரியில் பயின்றவராவார். அவரது தந்தையார் வைத்திய நிபுணர் தமிழ்வண்ணன் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் பணியாற்றுகிறார். அவரது தாயார் டொக்டர் பகீரதியும் அங்கு பணியாற்றுகின்றார்.



மட்டக்களப்பு மாநகர மேயர் நேரில் வந்து பாராட்டு

துவாரகேஷுக்கு இரண்டு சகோதரிகள். ஒருவர் உயர்தரம் பயில்கின்றார். மற்றையவர் தரம் பத்தில் பயில்கிறார். இருவரும் மட்டக்களப்பு சிசிலியா மகளிர் கல்லூரியில் பயில்கின்றனர். கிழக்கின் பிரபல பண்டிதர் நல்லரத்தினம் அவர்களின் பேரன் துவாரகேஷ் ஆவார் .

மாணவன் தமிழ்வண்ணன் துவாரகேஷுடனான சந்திப்பின் போது அவர் பின்வருமாறு தெரிவித்தார்.

**கேள்வி: அகில இலங்கை ரீதியில் நீங்கள் முதலிடம் வருவீர்கள் என்று எதிர்பார்த்திருந்தீர்களா?**

**பதில்:** தேசிய மட்டத்தில் வருவேன் என்று தெரியும். இருந்தாலும் அகில இலங்கை ரீதியில் முதலிடம் என்பது நான் எதிர்பார்க்கவில்லை. முதன் முதலில் பரீட்சை முடிவை பார்த்தவுடன் மிகவும் சந்தோஷமாக இருந்தது. அதிர்ச்சியாகவும் இருந்தது. முதலில் அம்மாவிடம் கூறினேன்.



நேரில் வந்து பாராட்டிய மட்டக்களப்பு பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் டொக்டர் சுகுணன்

**கேள்வி: தங்களின் ஆரம்பக்கல்வி பற்றி கூறுங்கள்**

**பதில்:** நான் ஆரம்பக் கல்வியை கல்முனை கார்மேல் பாத்திமா கல்லூரியில் இரண்டு வருடங்கள் கற்றேன். அதன் பின்னர் மட்டக்களப்பு புனித மைக்கேல் கல்லூரிக்கு வந்து விட்டேன். தந்தையும் தாயும் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் வைத்தியர்கள் என்பதால் மட்டக்களப்புக்கு வர வேண்டிய சூழல்.

**கேள்வி: நீங்கள் பெரும் சாதனை படைத்திருக்கின்றீர்கள். புலமைப் பரிசில் பரீட்சையில் 192 புள்ளிகள் பெற்று மாவட்டத்திலே அன்று சாதனை படைத்தீர்கள்.இன்று மருத்துவத்துறையில் முதல் மாணவராக தேர்வாகி உள்ளீர்கள். இந்த சந்தோஷமான நேரத்தில் யாருக்காவது நன்றி செலுத்த விரும்புகிறீர்களா?**

**பதில்:** ஆம் முதலிலேயே என்னைப் படைத்த இறைவனுக்கும் அடுத்து அன்பையும் ஆதரவையும் தந்த பெற்றோருக்கும் சகோதரர்களுக்கும் அடுத்து பாடசாலை அதிபர், ஆசிரியர்கள், நண்பர்கள் அனைவருக்கும் எனது நன்றிகளை தெரிவித்துக் கொள்கின்றேன்.



### கிழக்கில் முதல் தடவையாக ஈட்டப்பட்டுள்ள வரலாற்று சாதனை; விபுலானந்த அடிகளாரின் மண்ணுக்கு கிடைத்த மற்றொரு பெருமை

**கேள்வி: கொரோனா கால கட்டத்தில் சிரமத்தின் மத்தியில் கல்வியை மேற்கொண்டு இருக்கின்றீர்கள். அது எப்படி இருந்தது?**

**பதில்:** கொரோனா காலத்தில் முதலாம் வருடத்தில் ஒரு தவணையும் இரண்டாம் பருவத்திலே ஒரு தவணையும்தான் பாடசாலைக்கு செல்ல முடிந்தது .ஏனைய நேரங்களில் நிகழ்நிலை வகுப்புகளிலும் கலந்து கொள்ளக் கூடியதாக இருந்தது. அப்போது நான் பாடசாலைக்கு 95 வீத வரவை பதிவு செய்தேன்.

**கேள்வி: உங்களுக்கு அடுத்ததாக வருகின்ற மாணவர் சமுதாயத்திற்கு சொல்லக் கூடிய ஆலோசனை ஏதாவது இருக்கின்றதா ?**

**பதில்:** ஆம் கஷ்டப்பட்டு படிக்க வேண்டாம். கண் மூடித்தனமாக விடிய விடிய படிக்க வேண்டாம். ஆழமாக திட்டமிட்டு 'ஸ்மார்ட்' முறையில் படிக்க வேண்டும். கஷ்டப்பட்டு படிக்க வேண்டும் என்பதற்காக உடலை வருத்த வேண்டும் என்பது இல்லை. உரிய முறையில் தேவையான பயிற்சி செய்து கேள்விகளை அதிகம் செய்து படிப்பை மேற்கொள்ள வேண்டும் .

**கேள்வி: டியூசனை மட்டும் நம்பி உங்களது படிப்பு இருந்ததா ?**

**பதில்:** அப்படி இல்லை. ரியூசனை மட்டும் நம்ப முடியாது. நான் பாடசாலையிலும், நிகழ்நிலை வகுப்புகளிலும் கூடுதலான நேரத்தை செலவிட்டேன். எனது படிப்பு இரவு 10:30 மணி வரைக்கும் இருக்கும். காலையிலே நான்கு முப்பது முதல் ஐந்து மணிக்கிடையில் எழுந்து கொள்வேன்.

**கேள்வி: படிப்பு நேரத்தில் கைபேசி மற்றும் தொலைக்காட்சி பாவனை எவ்வாறு இருந்தது?**

**பதில்:** கைபேசி எமது படிப்புக்கு அத்தியாவசியமாக இருந்தது .அதற்கு மாத்திரம் அதனை பயன்படுத்தினேன். தொலைக்காட்சி நிகழ்ச்சிகளை பெரிதாக பார்ப்பதில்லை .

**கேள்வி: நீங்கள் பொது விவேக பரீட்சையிலே 90 புள்ளிகளைப் பெற்றுக் கொண்டுள்ளீர்கள்.**

**பதில்:** ஆம் பொது விடயங்களில் எனக்கு பொதுவாக நாட்டம் இருந்தது. கல்வி ஒன்றுதான் எம்மை கௌரவத்தோடு வாழவைக்கும்.



**வி.ரி.சகாதேவராஜா ...**
*(காரைதீவு குறூப் நிருபர்)*

# 31வீத வளர்ச்சியை பதிவு செய்த HNB அஷ்யூரன்ஸ் குழுமம்

HNB அஷ்யூரன்ஸ் பீ.எல்.சீ. (HNBA) மற்றும் அதன் முழுச் சொந்தமான ஒரு துணை நிறுவனமான HNB ஜெனரல் இன்சூரன்ஸ் லிமிடெட் (HNBGI) ரூ. 7.4 பில்லியன்கள் மொத்த காப்புறுதிக் கட்டுப்பணத்தைப் (GWP) பதிவு செய்துள்ளது. இது 2022 இன் முதல் பாதியில் 31% நிலையான வளர்ச்சியைக் காட்டுகிறது.

HNBA மற்றும் HNBGI தலைவர் திருமதி ரோஸ் குரே, குழுமத்தின் நிதிச் செயல்பாடுகள் குறித்து தனது கருத்துக்களைத் தெரிவிக்கையில், "HNB அஷ்யூரன்ஸ் குழுமம் முந்தைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மொத்த காப்புறுதிக் கட்டுப்பணத்தில் (GWP) 31% வளர்ச்சியைப் பெற்றுள்ளது என்பதை அறிவிப்பதில் மிகவும் மகிழ்ச்சி அடைகிறேன்" எனக் குறிப்பிட்டார்.



**லசித விமலரத்ன,**
HNB அஷ்யூரன்ஸ் பீ.எல்.சீ. இன் பிரதம நிறைவேற்று அதிகாரி



**சித்துமின ஜெயசுந்தர,**
HNB பொதுக் காப்புறுதி லிமிடட் பிரதம நிறைவேற்று அதிகாரி

HNB அஷ்யூரன்ஸ் பீ.எல்.சீ பிரதம நிறைவேற்று அதிகாரி லசித விமலரத்ன கருத்து வெளிப்படுத்துகையில், "சவாலான சந்தை நிலைமைகள் மற்றும் பொருளாதாரக் தளம்பல்கள் இருந்தபோதிலும் நாங்கள் அடைந்துள்ள அற்புதமான வளர்ச்சியைப் பகிர்ந்து கொள்வதில் மகிழ்ச்சியடைகிறேன். 2022 இன் முதல் பாதியில் HNBA 37% வளர்ச்சியைப் பெற்றது, இலங்கையின் சிறந்த 10 ஆயுள் காப்புறுதி நிறுவனங்களுக்கு மத்தியில் அதிகூடிய வளர்ச்சி வீதத்தை எமது கம்பனி பதிவு செய்தது" என்றார்.

HNB ஜெனரல் இன்சூரன்ஸ் லிமிடெட்டின் பிரதம நிறைவேற்று அதிகாரி சித்துமின ஜயசுந்தர முன்னேற்றகரமான வளர்ச்சி குறித்து பின்வருமாரு கருத்துத் தெரிவித்தார். "நாம் ஒரு நாடாகவும், ஒட்டுமொத்த தொழில்துறையாகவும் எதிர்கொள்ளும் இந்த சவாலான காலகட்டத்தில், HNBGI ஆனது அதன் சேவை மற்றும் செயல்பாட்டு சிறப்பை பயன்படுத்தி ஒரு நிலையான நிதி வளர்ச்சியை பராமரிக்க முடிந்தது. HNBGI 23% வளர்ச்சியுடன் ரூ. 3.3 பில்லியன் மொத்த காப்புறுதிக் கட்டுப்பணத்தைப் (GWP) பதிவு செய்தது. இந்தக் காலப்பகுதியில் நிறுவனம் எமது பெறுமதிமிக்க வாடிக்கையாளர்களுக்கு நிலையான அர்ப்பணிப்பை வெளிப்படுத்தும் வகையில் ரூ. 1.6 பில்லியனுக்கும் அதிகமான காப்புறுதி அனுகூலங்கள் மற்றும் உரிமைகோரிக்கைகளைச் செலுத்தியுள்ளது".

HNB அஷ்யூரன்ஸ் பீ.எல்.சீ. (HNBA) 64 கிளை வலையமைப்பைக் கொண்ட இலங்கையின் முன்னணி ஆயுள் காப்புறுதி நிறுவனமாகும். ஃபிட்ச் ரேட்டிங்ஸ் லங்காவினால் 'தேசிய காப்புறுதியாளர் நிதி வலிமை மதிப்பீட்டிற்காக' HNBA க்கு 'A+' (lka) மதிப்பீடு வழங்கப்பட்டுள்ளது.

காப்புறுதிக் கட்டுப்பாட்டாளரால் கம்பனிகளைப் பிரிக்கும் விதி அறிமுகப்படுத்தியதைத் தொடர்ந்து, HNB ஜெனரல் இன்சூரன்ஸ் லிமிடெட் (HNBGI) 2015 ஜனவரியில் உருவாக்கப்பட்டு அதன் செயல்பாடுகளைத் தொடர்ந்து வருகின்றது. HNBGI மோட்டார் காப்புறுதி, மோட்டார் அல்லாத மற்றும் தகாஃபுல் காப்புறுதித் தீர்வுகளில் தொடர்ந்து நிபுணத்துவம் பெற்றுள்ளதுடன், இது HNB அஷ்யூரன்ஸ் பீ.எல்.சீ. இன் முழுச் சொந்தமான ஒரு துணை நிறுவனமாகும்.

மட்டக்களப்பு மேற்கு கல்வி வலயத்தில்

# ஆசிரியர்கள், மேற்பார்வை ஆளணியினருக்கு செயலமர்வு

மட்டக்களப்பு மேற்கு கல்வி வலயத்திற்குட்பட்ட 14 பாடசாலைகளுக்கு அனைத்துலக மருத்துவ நல அமைப்பு (IMHOUSA) மற்றும் இரட்ணம் பவுண்டேசன்(Ratnam FoundationUK) இணைந்து திறன் பலகைகளை வழங்கியது. அத்துடன் அப்பாடசாலை ஆசிரியர்களையும் அக்கல்வி வலய மேற்பார்வை ஆளணியினரையும் பயிற்றுவிக்கும் செயலமர்வு இம்மாதம் 27, 28 ஆம் திகதிகளில் சிறப்பாக நடைபெற்றது. மட்/மமே/ முனைக்காடு விவேகானந்த தேசிய பாடசாலை மற்றும் ம/மமே/முதலிக்குடா மகாவித்தியாலயம் ஆகிய இரு பாடசாலைகளிலும் இருபிரிவுகளாக நடைபெற்ற இச்செயலமர்வில் 48 பேர் கலந்து கொண்டிருந்தனர்.





கல்விஅமைச்சின் ஈதக்சலாவ கல்விப் பிரிவு மற்றும் வடமராட்சி கணனி வள நிலைய வளவாளர்களினால் நடத்தப்பட்ட இச்செயலமர்வு ஆரம்பம் முதல் இறுதி வரை ஒவ்வொரு பங்குபற்றுநரும் செயற்பட்டு, அனுபவத்தை பெற்றுக்கொண்ட வகையில் அமைந்திருந்தது. மட்டக்களப்பு மேற்கு வலயக் கல்வி பணிப்பாளர் அகிலா கனகசூரியம், வடக்கு மற்றும் வடக்கு கிழக்கு மாகாணங்களின் முன்னாள் பிரதிமாகாணக் கல்வி செயலாளரும்,சிரேஷ்ட உதவிக்கல்வி செயலாளருமாகிய ஓய்வுபெற்ற திசவீரசிங்கம் பொன்னம்பலம், IMHOUSA அமைப்பின் இலங்கைக்கான வதிவிட பணிப்பாளரும் ஓய்வுபெற்ற வலயக்கல்விப் பணிப்பாளருமாகிய சு.கிருஷ்ணகுமார் ஆகியோரின் பங்குபற்றுதலுடன் இச்செயலமர்வு ஆரம்பித்து வைக்கப்பட்டது.ஆசிரியர்களுக்கான விரலிகளும் பாடசாலைக்குரிய பெயர்ப் பலகைகளும் விருந்தினர்களால் வழங்கி வைக்கப்பட்டன.

தினகரன்
வடக்கின் உதயம்
Vadakkin Uthayam
2022 ஓகஸ்ட் 30
செவ்வாய்க்கிழமை



# மன்னார் மாவட்ட மக்களின் காணி பிரச்சினைக்கு விரைவில் தீர்வு

**காதர் மஸ்தான் எம்.பி**



பல தசாப்தங்களாக காணி அனுமதிப்பத்திரங்களின்றி அரச காணிகளில் வசித்து வரும் மக்களுக்கு விரைவில் காணி அனுமதிப்பத்திரங்களை பெற்றுக் கொடுப்பதற்கு உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக வன்னிமாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் காதர் மஸ்தான் தெரிவித்தார்.

இது தொடர்பாக கருத்து தெரிவித்த அவர்,

தலைமன்னார் பியர், செல்வேரி, பெரியகமம், பாவிழுப்பட்டாங் கட்டி குடியிருப்பு ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த மக்களுக்கான காணி அனுமதிப்பத்திரங்களை பெற்றுக் கொடுப்பதற்கு உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

நீண்ட காலமாக அப்பகுதியில் வசித்து வந்த மக்களுக்கு யுத்தத்திற்கு பின்னர் மீளக் குடியேறிய போதிலும் காணி அனுமதிப்பத்திரங்கள் இன்மையால் பல்வேறு அசௌகரியங்களை எதிர்நோக்கி வருகின்றனர். இதனடிப்படையில் எமது அழைப்பின் பேரில் உரிய இடத்திற்கு விஜயமொன்றை மேற்கொண்ட காணி அமைச்சின் செயலாளர், காணி சீர்திருத்த ஆணைக்குழுவின் தலைவர்(LRC), வட மாகாண காணி சீர்திருத்த ஆணைக்குழுவின் பணிப்பாளர், மாவட்ட அரசாங்க அதிபர், பிரதேச செயலகங்களின் பிரதேச செயலாளர்கள் உள்ளிட்ட குழுவினர் நிலைமைகளை நேரில் சென்று ஆராய்ந்ததுடன் அப்பகுதி மக்களுக்கான அனுமதிப்பத்திரங்களை வழங்குவதற்கான முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

மக்களின் சொல்லொனாத் துயரங்களுக்கு முற்றுப்புள்ளி என்பது அவசியமானவொன்று. மக்கள் பிரதிநிதி என்ற வகையில் பேதங்கள் கடந்து அப்பகுதி மக்களுக்கான காணி அனுமதிப்பத்திரங்கள் வெகுவிரைவில் வழங்கப்படும் எனவும் அவர் தெரிவித்தார்.

# சைவப்புலவர், இளஞ்சைவப்புலவர் பரீட்சை பெறுபேறுகள் வெளியீடு

அகில இலங்கை சைவப்புலவர் சங்கத்தினால் நடாத்தப்பட்ட 2022ஆம் ஆண்டுக்கான சைவப்புலவர் மற்றும் இளஞ்சைவப்புலவர் பரீட்சைகளில் பின்வரும் பரீட்சார்த்திகள் சித்தியடைந்துள்ளதாக அகில இலங்கை சைவப்புலவர் சங்கச் செயலாளர் சைவப்புலவர் செ.த.குமரன் அறிவித்துள்ளார்.

இளஞ்சைவப்புலவர் பரீட்சையில் சர்மினி கிருஸ்ணபிள்ளை (பொலனறுவை), ஜெயாளினி கந்தசாமி (பொலனறுவை) சிவப்பிரியா ராஜ்குமார் (இணுவில்), மகேஸ்வரன் பவிதரன் (செங்கலடி), யதுஷா முருகேசு (பொலனறுவை), செல்வி பிரன்ஜா கேதீஸ்வரன் (கிளிநொச்சி), தர்மராஜா சுதர்சன் (அராலி), மாரிமுத்து ஸ்ரீகாந்தன் (பதுளை), துர்க்கா சுப்பிரமணியம் (கொழும்பு), புலந்திரன் தினேஸ்காந் (மட்டக்களப்பு), கீர்த்தனா குருநாதபிள்ளை (அக்கரைப்பற்று), சந்திரவதனி தவராசா (வட்டுக்கோட்டை) ஆகியோர் சித்தியடைந்துள்ளனர்.

சைவப்புலவர் பரீட்சையில் உதயகௌரி செல்வராஜ் (கொழும்பு), இரத்தினேஸ்வரி சந்திரலிங்கம் (மட்டக்களப்பு), பொன்னம்பலவாணர் கனகரத்தினம் (யாழ்ப்பாணம்), புவனராணி இரகுநாதன் (யாழ்ப்பாணம்), நியோமிதா தவநேசன் (மகிழூர்), துரைசிங்கம் பிரபாசன் (மானிப்பாய்), சிவதர்சினி அகிநாத் (கொழும்பு), சுந்தரமதி வேதநாயகம் (மட்டக்களப்பு), சாம்பசிவம் நவீந்திரதாஸ் (திருகோணமலை), மகேந்திரன் விமலகாந்தன் (பொலனறுவை), மகிபா வசீகரன் (வட்டுக்கோட்டை), மல்லிகா சிவராசா (கொழும்பு) ஆகியோர் சித்தியடைந்துள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

# வாள்வெட்டுச் சம்பவத்தில் ஒருவர் படுகாயம்

**சாவகச்சேரி விஷேட நிருபர்**

சாவகச்சேரிப் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட தனங்கிளப்பு பகுதியில் சனிக்கிழமை இரவு இடம்பெற்ற வாள்வெட்டுச் சம்பவத்தில் நபரொருவர் படுகாயமடைந்துள்ளார்.

தனங்கிளப்பு பகுதியிலுள்ள வீடொன்றிற்குள் புகுந்து வாள்வெட்டு குழு நடத்திய தாக்குதலில் 33 வயதான நபரொருவர் தலை மற்றும் முகப்பகுதிகளில் படுகாயமடைந்த நிலையில் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு பின்னர் மேலதிக சிகிச்சைக்காக யாழ் போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளார். வன்முறைச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை சாவகச்சேரிப் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.



நல்லூர் கந்தசுவாமி ஆலய வருடாந்த திருவிழாவின் வைரவர் சாந்தி உற்சவம் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை பக்தி பூர்வமாக இடம்பெற்றது. வைரவ சாந்தி உற்சவத்தின் போது புதிதாக ஸ்தாபிக்கப்பட்ட எழுந்தருளி வைரவப் பெருமான் புதிய நாய் வாகனத்தில் எழுந்தருளி அடியார்களுக்கு அருட்காட்சியளித்து அருள்பாலித்தார்.

(படம்: யாழ்.விசேட நிருபர்)

# பௌதிக விஞ்ஞான, உயிர்முறை தொழில்நுட்ப பிரிவுகளில் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி மாணவர்கள் முதலிடம்

**யாழ். விசேட நிருபர்**



கல்விப் பொதுத்தராதர உயர்தரப் பரீட்சையின் பெறுபேறுகளின்படி பௌதீக விஞ்ஞானப் பிரிவிலும் உயிர்முறை தொழில்நுட்ப பிரிவிலும் யாழ்.மத்திய கல்லூரியைச் சேர்ந்த இரண்டு மாணவர்கள் யாழ்ப்பாண மாவட்டத்தில் முதலிடத்தைப் பெற்றுள்ளனர்.

பௌதீக விஞ்ஞானப்பிரிவில் ஞானமூர்த்தி சூர்யா என்ற மாணவனும் உயிர்முறை தொழில்நுட்ப பிரிவில் கிருபாகரன் ஹரிகரன் என்ற மாணவனும் 3 ஏ சித்திகளைப் பெற்று மாவட்ட மட்டத்தில் முதலிடம் பெற்றுள்ளனர். யாழ்ப்பாண மத்திய கல்லூரியில் எட்டு மாணவர்கள் 3 ஏ சித்திகளை பெற்றுள்ளதுடன் மேலும் பல மாணவர்கள் சிறந்த பெறுபேறுகளை பெற்றுள்ளனர். நீண்டகாலத்துக்கு பின்னர் மாவட்டமட்டத்தில் முதல் நிலை இடங்களை பெற்றுள்ளமை பாடசாலைக்கு பிரகாசமான காலம் என பாடசாலை அதிபர் எழில்வேந்தன் தெரிவித்தார்.

# இந்திய மீனவர்களின் விளக்கமறியல் நீடிப்பு

**(மன்னார் குறூப் நிருபர்)**

இலங்கை கடற்பரப்பில் அத்துமீறி நுழைந்து மீன்பிடியில் ஈடுபட்டு கைது செய்யப்பட்ட 6 இந்திய மீனவர்களையும் எதிர்வரும் 12ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு மன்னார் நீதவான் நேற்று திங்கட்கிழமை (29) உத்தரவிட்டார்.

இலங்கை கடற்பரப்பில் அத்துமீறி நுழைந்து மீன்பிடியில் ஈடுபட்ட 6 இந்திய மீனவர்களை கடந்த சனிக்கிழமை (27) இரவு தலைமன்னார் கடற்பரப்பில் கடற்படை கைது செய்துள்ளனர்.

தலைமன்னார் கடற்பரப்பில் சர்வதேச கடல் எல்லைக்கோடு ஊடாக இலங்கை கடற்பரப்பில் அத்துமீறி நுழைந்து மீன் பிடியில் ஈடுபட்ட 06 இந்திய மீனவர்களையும் கைது செய்யப்பட்டுள்ளதோடு அவர்கள் பயன்படுத்திய இழுவை படகு ஒன்றும் கைப்பற்றப்பட்டுள்ளது.

கைது செய்யப்பட்ட இந்திய மீனவர்கள் 6 பேரும் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை (28) காலை தலைமன்னார் கடற் படையினரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர். தலைமன்னார் கடற்படையினர் விசாரணைகளின் பின்னர் நேற்று முந்தினம் ஞாயிற்றுக்கிழமை (28) மாலை மன்னார் மாவட்ட கடற்றொழில் திணைக்கள அதிகாரிகளிடம் ஒப்படைத்தனர்.

கடற்தொழில் திணைக்கள அதிகாரிகளின் விசாரணைகளின் பின்னர் நேற்று திங்கட்கிழமை (29) காலை மீனவர்களை மன்னார் நீதிமன்றத்தில் நீதவான் முன்னிலையில் ஆஜர்படுத்தினர். இதன் போது விசாரணைகளை மேற்கொண்ட மன்னார் நீதவான், மீனவர்களை எதிர்வரும் 12ஆம் திகதி வரை(12.09.2022) 14 நாட்களுக்கு விளக்கமறியலில் வைக்க உத்தரவிட்டார்.

# போதைப்பொருள் வியாபாரத்தின் பிரதான சந்தேக நபர் கைது

**யாழ்.விசேட நிருபர்**

யாழ்ப்பாணத்தில் ஹெரோயின் போதைப்பொருள் விற்பனையில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் நீண்டகாலமாக தேடப்பட்டு வந்த பிரதான சந்தேக நபர்களில் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேகநபர் 27 வயதுடைய இளைஞன் என தெரியவந்துள்ளது.

கோண்டாவில் புகையிரத பகுதியில் சந்தேகநபர் நடமாடுவதாக பொலிஸாருக்கு கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில் அவ்விடத்திற்கு பொலிஸார் விரைந்துள்ளனர்.

சந்தேக நபரிடமிருந்து 5 கிராம் ஹெரோயின் போதைப்பொருள் மற்றும் போதைப்பொருள் வியாபாரத்தில் பெற்றுக்கொண்ட 75 ஆயிரம் ரூபாய் பணம் என்பன கைப்பற்றப்பட்டதாக பொலிஸார் குறிப்பிட்டனர்.

# சைவ ஆலயங்களில் வேதங்களோடு தமிழ் தோத்திரங்களும் இசைக்கப்பட வேண்டும்

**பிரதி அதிபரும், சைவச்சொற்பொழிவாளருமான செந்தமிழ்ச் சொல்லருவி ச.லலீசன்**



நல்லூரில் இவ்வாண்டு தொடக்கம் தமிழ் தோத்திரப் பாடல்களுக்கு அதிக முதன்மை வழங்கப்படும் நடைமுறையை கோவிலில் நிர்வாக அதிகாரி ஏற்படுத்தியுள்ளமை மகிழ்ச்சிக்குரிய விடயமென கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையின் பிரதி அதிபரும், சைவச் சொற்பொழிவாளருமாகிய செந்தமிழ்ச் சொல்லருவி ச.லலீசன் தெரிவித்துள்ளார்.

இந்த மாற்றம் ஏனைய ஆலயங்களிலும் ஏற்பட வேண்டுமெனவும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஆகமம் சார்ந்த வழிபாடுகளில் பக்த ஸ்தோத்திரம் என்ற நிலையில் தமிழுக்கு முதன்மை வழங்கப்பட வேண்டும். எமது மண்ணில் பக்தர்களின் மொழி தமிழாக இருக்கின்றமையால் இது அவசியமானது.

திருக்கேதீஸ்வரத்தில் சேர்.கந்தையா வைத்தியநாதன் திருமுறைகளுக்கு அதிக முக்கியத்துவம் வழங்கினார். போர்த்துக்கேயரால் கோவில் அழிக்கப்பட்ட போது பெருமான் சொற்கோவிலாகவே திகழ்ந்தார் என்பதன் அடையாளம் அது.

ஒவ்வொரு சந்நிதானத்தில் பூசை இடம்பெறும் போதும் தேவாரம் புராணம் பாடும் மரபு திருக்கேதீஸ்வரத்தில் காணப்படுகிறது.

நல்லூரில் தற்போது திருமுறைப் பாடல்கள், அருணகிரியாரின் கந்தரனுபூதி மற்றும் திருப்புகழ் சேனாதிராஜ முதலியார் ஊஞ்சல் வித்துவான் வேந்தனாரின் பள்ளியெழுச்சி, நவாலியூர் சோமசுந்தரப் புலவரின் நல்லூர் திருப்புகழ், யோகி தவ.கஜேந்திரனின் நல்லூர்த் திருப்புகழ் மற்றும் நல்லைக் கந்தன் கீர்த்தனைகள் எனத் தமிழ்க் கடவுளுக்கு வேத மந்திரங்களுக்கு இணையாக தமிழ்ப்பாக்களும் இசைக்கப்படுகின்றன.

நமது தலைமை ஆலயங்கள் இரண்டிலும் ஏற்பட்ட இந்த மாற்றம் ஏனைய ஆலயங்களிலும் தொற்றுகை அடைய வேண்டும்.

வேத பாராயணத்தின் பின் திருமுறை பாராயணம் செய்து ஆசீர்வாதம் மேற்கொள்ளும் நடைமுறையும் ஏற்படுத்தப்பட வேண்டும். குருமாரும் ஆலய பரிபாலகர்களும் கூடிய கவனம் செலுத்த வேண்டிய விடயம் இது எனவும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

# கனிய மணல் அகழ்வு, காற்றாலை மின் உற்பத்திக்கு எதிர்ப்பு தெரிவித்து கவனயீர்ப்பு போராட்டம்

**(மன்னார் குறூப் நிருபர்)**



மன்னார் தீவு பகுதியில் இடம்பெற்று வருகின்ற கனிய வள மணல் அகழ்வு மற்றும் உயர் வலு கொண்ட காற்றாலை மின் கோபுரங்கள் அமைக்கும் நடவடிக்கைகளுக்கு எதிர்ப்பு தெரிவித்து மன்னார் மாவட்ட பிரஜைகள் குழு ஏற்பாடு செய்த மாபெரும் கவனயீர்ப்பு போராட்டம் நேற்று மாவட்டச் செயலகத்திற்கு முன்பாக இடம்பெற்றது.

நேற்று (29) காலை 8 மணி தொடக்கம் மதியம் 12 மணி வரை கவனயீர்ப்பு போராட்டம் இடம்பெற்றது.

இப்போராட்டத்தில் மன்னார் மாவட்டத்தின் பல பாகங்களிலிருந்தும் ஆயிரக்கணக்கான மக்கள் கலந்து கொண்டதோடு, மீனவ அமைப்புகள், பொது அமைப்புகளின் பிரதிநிதிகள், சர்வமத தலைவர்கள், உள்ளூராட்சி மன்றங்களின் தலைவர்கள், உப தலைவர்கள், உறுப்பினர்கள், மனித உரிமை செயற்பாட்டாளர்கள் என பலரும் கலந்து கொண்டு ஆதரவு தெரிவித்தனர். போராட்டத்திற்கு ஆதரவு தெரிவிக்கும் வகையில் மதியம் 12 மணி வரை பஜார் பகுதியிலுள்ள அனைத்து வர்த்தக நிலையங்களும் மூடப்பட்டதோடு, தனியார் போக்குவரத்து சேவைகளும் இடைநிறுத்தப்பட்டிருந்தன.

மன்னார் தீவு பகுதியில் முன்னெடுக்கப்பட்டு வரும் கனிய வள மண் அகழ்வு மற்றும் உயர் வலு கொண்ட காற்றாலை மின் கோபுரங்கள் அமைக்கும் நடவடிக்கைகளினால் மக்கள் பாதிக்கப்படுவதாக தெரிவிக்கப்படுகின்றது.

குறிப்பாக கனிய மணல் அகழ்வினால் எதிர் காலத்தில் மன்னார் தீவு பகுதியில் பல்வேறு அனர்த்தங்கள் ஏற்படுவதற்கான சூழ்நிலை ஏற்பட உள்ளதோடு, காற்றாலை மின் உற்பத்தியால் மீனவர்களின் வாழ்வாதாரம் எதிர்காலத்தில் முழுமையாக பாதிக்கப்படும் என மீனவர்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

உயர் தரப் பரீட்சையில்

# வவுனியா நெளுக்குளம் கலைமகள் மகா வித்தியாலயம் சாதனை

**வவுனியா விசேட நிருபர்**







உயர் தரப்பரீட்சை முடிவுகளின் அடிப்படையில் வவுனியா நெளுக்குளம் கலைமகள் மகா வித்தியாலயத்தில் கணித பிரிவில் கல்வி பயின்ற மாணவன் ராஜ்குமார் சுலோஜன் 3ஏ சித்திகளை பெற்று மாவட்ட ரீதியில் முதல் இடத்தினையும், அகில இலங்கை ரீதியில் 75ஆவது இடத்தினையும் பெறுள்ளனர்.

மேலும், உயிரியல் பிரிவில் நிகருண்யா திருமூர்த்தி ஏ 2பி சித்திகளை பெற்று மாவட்ட ரீதியில் 22வது இடத்தினையும், அத்துடன் வர்த்தக பிரிவில் யசிந்தா யேசுதாசன் 3ஏ சித்திகளை பெற்று மாவட்ட ரீதியில் 15வது இடத்தினையும் வத்ஷனா ராஜரட்ணம் 3ஏ சித்திகளை பெற்று மாவட்ட ரீதியில் 18வது இடத்தினையும் பெற்றுள்ளதுடன், ஏனைய மாணவர்கள் திறமைச் சித்திகளை பெற்றுள்ளனர்.

# யாழ்.அடைக்கல அன்னை ஆலய வருடாந்த திருவிழா ஆரம்பம்

**கரவெட்டி தினகரன் நிருபர்**

சரித்திரப் பிரசித்திபெற்ற யாழ்ப்பாணம் அடைக்கல அன்னை ஆலய (O.L.R) வருடாந்த திருவிழா இன்று 30 ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

கன்னிமரியாளின் பிறந்த தினமான செப்டெம்பர் 8 ஆம் திகதி இத்திருவிழா சிறப்பாக நடைபெறவுள்ளது. 30 ஆம் திகதி முதல் 7 ஆம் திகதி வரையும் நவநாட்கள்,வழிபாடுகள்,சிறப்பு மறையுரைகள் மாலையில் இடம்பெறும். 7 ஆம் திகதி மாலை நற்கருணை ஆராதனை, பவனி ஆசீர்வாதமும் 8 ஆம் திகதி காலை யாழ் ஆயர் யஸ்ரின் ஞானப்பிரகாசம் ஆண்டகை தலைமையில் திருநாள் கூட்டுத்திருப்பலியும் அன்னையின் திருச்சொரூப பவனியும் ஆசியும் நடைபெறும்.

இவ்வாலயத்தின் 95 ஆவது ஆண்டு நினைவு விழாவை அடுத்த ஆண்டு கொண்டாடுவதற்கு பங்கு மக்கள் ஏற்பாடுகளை மேற்கொண்டுவருகின்றனர். 1928 செப்டெம்பர் 8 அன்றைய யாழ் ஆயர்.யோண் ஏ.கியோமோர் ஆண்டகையால் இவ்வாலயம் அபிஷேகம் செய்யப்பட்டு வழிபாட்டுக்கு திறந்து வைக்கப்பட்டது. யாழ்.நகரில் இடம்பெற்ற போர் அனர்த்தங்களில் ஆலயம் சேதமடைந்தது.

# விலையதிகரிப்பு கட்டண அதிகரிப்பின் போது வடக்கு கிழக்கிற்கு விசேட திட்டம் அவசியம்

## செல்வராஜா கஜேந்திரன் எம்பி சபையில் தெரிவிப்பு

லோரன்ஸ் செல்வநாயகம்

விலை அதிகரிப்புகள், கட்டண அதிகரிப்புகள் மேற்கொள்ளப்படும் சந்தர்ப்பங்களில் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ள வடக்கு, கிழக்கு மக்களுக்கென்று விசேட திட்டத்தை நடைமுறைப்படுத்த அரசாங்கம் கவனம் செலுத்த வேண்டும் என செல்வராஜா கஜேந்திரன் எம்.பி பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

யுத்தத்தால் பாதிக்கப்பட்டுள்ள வடக்கு கிழக்கு மக்கள் கட்டண அதிகரிப்புகள் மற்றும் விலைகள் அதிகரிப்பின் போது பெரும் கஷ்டங்களை எதிர் கொள்கின்றார்கள் என்று தெரிவித்துள்ள அவர், தமிழ் மக்களின் பிரதிநிதிகளோடு கலந்துரையாடி அவர்களுக்காக விசேட திட்டமொன்று செயற்படுத்தப்பட வேண்டும் என்றும் அவர் தெரிவித்தார். பாராளுமன்றத்தில் இடம்பெற்ற மின்சாரக் கட்டண உயர்வு தொடர்பான சபை ஒத்திவைப்புவேளை விவாதத்தில் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

### ஜனாதிபதி ரணிலின் கடிதம்...

வெளிநாட்டமைச்சர் வலீத்பின் அப்துல் கரீம் அல்குராஜி பெற்றுக்கொண்டார்.

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் விஷேட தூதுவராக நான்கு நாள் விஜயம் மேற்கொண்டு சவூதி அரேபியா சென்றுள்ள சுற்றாடல் துறை அமைச்சர் நஸீர் அஹமட், இக்கடிதத்தை கையளித்தமை குறிப்பிடத்தக்கது. இரு தரப்பு உறவுகளின் மேம்பாடு மற்றும் இலங்கையரின் பல்துறை அபிவிருத்திகளுக்கு சவூதியின் அரசாங்கம் வழங்கும் பங்களிப்புக்கள் குறித்து ஜனாதிபதியின் கடிதத்தில் விவரிக்கப்பட்டுள்ளது.

தலைநகர் ரியாதில், சவூதி அரேபியாவின் பிரதி வெளிநாட்டமைச்சருடனான சந்திப்பில் கலந்து கொண்ட அமைச்சர் நஸீர் அஹமட் நீண்டகால உறவுகள் மற்றும் இலங்கையில் அபிவிருத்தி மேம்பாடுகளை மேலோங்கச் செய்தல் பற்றிக் கலந்துரையாடினார்.

### இரு மின் உற்பத்தி நிலைய...

தெரிவித்துள்ளார். மன்னாரில் செய்தியாளர்களை சந்தித்துப் பேசிய போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். இதன்போது தொடர்ந்தும் பேசிய அவர்,

அதற்கமைய, குறித்த இடங்களில் இருந்து இந்த திட்டத்துக்கான எதிர்ப்புக்கள் வந்தால் அந்த எதிர்ப்புக்களின் பின்னணி தொடர்பில் ஆராய வேண்டும்.

அரசியல் பின்புலத்துடனும் அந்த எதிர்ப்புக்கள் வரக்கூடும்.

இந்த திட்டம் தொடர்பில் அந்தந்த மாவட்டப் பிரதிநிதிகளுடன் பேச்சு நடத்துவோம். அமைச்சரவையின் முடிவை மீள்பரிசீலனை செய்ய வேண்டிய நிலைமை வந்தால் அதையும் நாம் செய்வோம்.

அனைத்துச் செயற்றிட்டங்களும் மக்களின் நலன் கருதியே இருக்கும். மக்களுக்குப் பாதிப்பு ஏற்படும் செயற்றிட்டங்களுக்கு அரசாங்கம் அனுமதி வழங்காது'' என தெரிவித்துள்ளார்.

### நீர் கட்டணத்தை செலுத்தாத...

வழங்கப்பட்டுள்ளதாக தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபையின் பிரதி பொது முகாமையாளர் குறிப்பிட்டார்.

மூன்று மாதங்களுக்கு மேல் நீர் கட்டணத்தை செலுத்தத் தவறிய அரச நிறுவனங்களிடம் இருந்து இரண்டரை சதவீத தாமதக் கட்டணமும் வசூலிக்க சபைத் தீர்மானித்துள்ளதாகவும் நீர் கட்டணம் செலுத்தத் தவறிய அரச நிறுவனங்களிடமிருந்து இதற்கு முன்னர் தாமதக் கட்டணம் எதுவும் அறவிடப்படவில்லை எனவும் சபையின் பிரதி பொது முகாமையாளர் பியால் பத்மநாத தெரிவித்தார்.

இதேவேளை, ஏற்கனவே நீர் கட்டணத்தை செலுத்தத் தவறிய பாராளுமன்ற உறுப்பினர்களிடம் இருந்து நிலுவைத் தொகையை வசூலிப்பது குறித்து பொது நிர்வாக அமைச்சின் செயலாளர் சபாநாயகருக்கு எழுத்து மூலம் அறிவித்துள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

### திட்டமிட்ட குற்றங்களை...

சீருடையிலும் சிவில் உடையிலும் கடமைகளில் ஈடுபட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த பொலிஸ் உத்தியோகத்தர்கள் ஆயுதங்களுடன் கடமைகளில் ஈடுபட்டுள்ளதாகவும் நாடளாவிய ரீதியில் திட்டமிட்ட குற்றச்செயல்களை தடுப்பதற்காக பொலிஸ் விசேட நடவடிக்கை பிரிவு மற்றும் பொலிஸ் நிலையங்களின் அடிப்படையில் விசேட குழுக்கள் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் குறிப்பிட்டனர்.

இடம்பெறும் பெரும்பாலான குற்றச் சம்பவங்கள் வெளிநாடுகளில் வசிக்கும் ஒழுங்கமைக்கப்பட்ட குற்றவாளிகளால் முன்னெடுக்கப்படுவதாக கிடைத்துள்ள தகவல்களின் அடிப்படையில் விசாரணைகள் முன்னெடுக்கப்படுவதாகவும் பொலிஸார் சுட்டிக்காட்டினர். ஜூலை மற்றும் ஆகஸ்ட் மாதங்களில் மாத்திரம் திட்டமிட்ட 24 குற்றச்செயல்கள் பதிவாகியுள்ளதாகவும் அவற்றில் 28 பேர் கொல்லப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

### முட்டைக்கான கட்டுப்பாட்டு...

பொதியிடல் செலவு உட்பட புதிய கட்டுப்பாட்டு விலையை நிர்ணயிக்க அமைச்சு தீர்மானித்துள்ளது.

அதன்படி, பொதி செய்யப்பட்ட வெள்ளை மற்றும் சிவப்பு நிற முட்டைகளுக்கு தனித்தனியாக கட்டுப்பாட்டு விலைகள் நிர்ணயிக்கப்படவுள்ளன.

பொதியிடல் தொடர்பான தீர்மானங்கள் தொடர்பில் நுகர்வோர் விவகார அதிகார சபையின் ஊடாகத் தேவையான பரிசீலனைகள் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருவதாக வர்த்தகம் மற்றும் உணவுப் பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

எவ்வாறாயினும், வெள்ளை மற்றும் சிவப்பு நிற முட்டைகளுக்கு தனித்தனியாக 50 ரூபாவாக விலையை உயர்த்த வர்த்தக அமைச்சர் நளின் பெர்னாண்டோ இணங்கியுள்ளதாக அகில இலங்கை முட்டை உற்பத்தியாளர்கள் சங்கம் அண்மையில் அமைச்சருடன் நடத்திய கலந்துரையாடலின் பின்னர் தெரிவித்திருந்தது.

எனினும், நுகர்வோர் அதிகாரசபை அண்மையில் வெள்ளை முட்டை ஒன்றின் அதிகபட்ச சில்லறை விலை 43 ரூபாவாகவும் சிவப்பு நிற முட்டையின் அதிகபட்ச சில்லறை விலை 45 ரூபாவாகவும் நிர்ணயித்திருந்த நிலையில், அதில் எவ்வித மாற்றங்களும் மேற்கொள்ளப்படமாட்டாது என அரசாங்கம் அறிவித்தது.

இதற்கு முட்டை உற்பத்தியாளர்கள் கடும் எதிர்ப்பு தெரிவித்த நிலையில், தற்போது சந்தையில் முட்டைக்கான தட்டுப்பாடு நிலவுகின்றது.

எவ்வாறாயினும், இன்று முதல் முட்டைகளை தட்டுப்பாடு இன்றி சந்தைக்கு விநியோகிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அகில இலங்கை முட்டை உற்பத்தியாளர்கள் சங்கத்தின் தலைவர் சரத் ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

50 ரூபாவிற்கும் குறைவான விலையில் முட்டைகளை விற்பனை செய்ய விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீரவுடன் நேற்று இடம்பெற்ற கலந்துரையாடலில் இணக்கம் ஏற்பட்டிருந்ததாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

### பாடசாலை மாணவர்களுக்கு...

நேற்று பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

நாடளாவிய ரீதியில் அவ்வாறு 19,000 க்கும் மேற்பட்ட பாடசாலைகள் உள்ளதுடன் யுனிசெப் நிறுவனம், உலக உணவு ஸ்தாபனம், அமெரிக்க விவசாயத் திட்டம், சீன அரசாங்கம் உட்பட பல்வேறு சர்வதேச தேசிய நிறுவனங்கள் அதற்கான ஒத்துழைப்புக்களை வழங்கி வருவதாகவும் அமைச்சர் சபையில் தெரிவித்தார்.

200 பாடசாலைகளுக்கு உணவு வழங்குவதற்காக ஜோன் கீல்ஸ் நிறுவனம் பொறுப்பேற்றுள்ளதுடன் லயன்ஸ் கிளப் போன்ற அமைப்புகளும் ஒத்துழைப்புக்களை வழங்க முன்வந்துள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச எழுப்பிய கேள்வி ஒன்றுக்கு பதில் அளிக்கும் போதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார். அது தொடர்பில் தொடர்ந்து விளக்கமளித்த அமைச்சர்,

பாடசாலை மாணவர்களின் போஷாக்கு தொடர்பில் சுகாதார அமைச்சு பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. மாணவர்களுக்கான பகல் உணவு மற்றும் திரிபோச வழங்கும் நடவடிக்கைகள் தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டுள்ளது தொடர்பில் எம்முடன் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளது. அதற்கிணங்க பல்வேறு சர்வதேச மற்றும் தேசிய ரீதியிலான நிறுவனங்கள், அமைப்புகள் எமக்கு ஒத்துழைப்பு வழங்க முன் வந்துள்ளன.

அதேவேளை, அடுத்த வரவு செலவுத் திட்டத்தில் அதற்காக அதிக நிதியை ஒதுக்குவதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அத்துடன் சோளப் பயிர்ச்செய்கையை மேலும் அதிகரிப்பதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

### இலங்கை வந்துள்ள ஜெனீவாவின்...

மற்றும் அதன் விளைவாக ஏற்பட்ட அரசியல் எழுச்சி போன்ற விடயங்கள் சுட்டிக்காட்டப்பட்டுள்ளன.

நாட்டின் தற்போதைய நடப்பு காரணமாக, தேசிய இறையாண்மை மற்றும் அரசியலமைப்பு கட்டுப்பாடுகளின் காரணங்களுக்காக, பொறுப்புக்கூறல் பிரச்சினைகளைத் தீர்ப்பதில் தடைகள் இருப்பதாகவும் அமைச்சர் சப்ரி விளக்கியுள்ளார்.

இராணுவம் மற்றும் அரசியல் தலைமைகளுக்கு எதிரான சாட்சியங்களை சேகரிப்பதிலும் அதே தடைகள் இருப்பதாக அவர் கூறியுள்ளார்.

இந்நிலையில் கருத்துரைத்துள்ள ஜெனீவா பிரதிநிதி முங்கோவன், பயங்கரவாதத் தடைச் சட்டம், பயன்படுத்தப்படாது என்று இலங்கை அரசாங்கத்திடமிருந்து பலமுறை பகிரங்க அறிவிப்புகள் வந்துள்ளன.

சர்வதேச சமூகம் வெளிப்படுத்தும் கரிசனைகளை கருத்தில் கொண்டு புதிய சட்டங்கள் கொண்டுவரப்பட உள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளன. எனினும் தற்போது கைதுகளுக்காக பயங்கரவாத தடைச் சட்டம் பயன்படுத்தப்படுகிறது என்பதை அவர் சுட்டிக்காட்டியுள்ளார். இந்நிலையில் மனித உரிமைகள் உயர்ஸ்தானிகரின் அறிக்கையின் மூலம் அண்மைய பிரச்சினைகளையும் உள்ளடக்கிய வகையில் 461 அடிப்படையிலான ஒரு தீர்மானம், ஜெனீவா மனித உரிமைகள் பேரவையில் முன்வைக்கப்படும் என்று முங்கோவன் சுட்டிக்காட்டியதாக அறியப்படுகிறது.

### ஸ்ரீலங்கன் விமானத்தின் 49 சதவீத...

பங்குகளையும் முதலீட்டாளர் ஒருவருக்கு வழங்குவதற்கான விலைமனுக்களை கோருவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதாக அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா தெரிவித்தார்.

ஸ்ரீலங்கன் விமான சேவையை மறுசீரமைப்பது தொடர்பாக அமைச்சில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அமைச்சர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா அங்கு மேலும் கருத்து தெரிவிக்கையில், "தற்போது ஸ்ரீலங்கன் கேட்டரிங் நிறுவனம் லாபம் ஈட்டுகிறது. எனவே, நாங்கள் ஸ்ரீலங்கன் கேட்டரிங் நிறுவன பங்குகள் மற்றும் அதன் நிர்வாகத்தில் 51 சதவீததை நாம் வைத்துக்கொண்டு, முதலீட்டாளருக்கும் ஏனைய 49 சதவீததை வழங்கவுள்ளோம்.

அதிகமாகக் கேட்டால், அந்த முதலீட்டாளர்களின் தேவைக்கேற்ப அதிக அல்லது சில தொகையைப் வழங்கவும் தீர்மானித்துள்ளோம்.

அதனால் இதற்கு தேவையான விலைமனுக்கள் கோர எதிர்பார்க்கிறோம்.

இதிலிருந்து ஸ்ரீலங்கன் விமான சேவையின் கடனை செலுத்தி, முடிந்தவரை கடனில் இருந்து விடுபட முடியும் என நம்புகிறோம் என குறிப்பிட்டார்.

### மின்சார சபை மறுசீரமைப்பு திட்டம்...

நியமிக்கப்பட்டுள்ளதாகவும் அதன் அறிக்கை விரைவில் கிடைக்கும் என்றும் தெரிவித்ததுடன் இரண்டு மாத காலத்தில் முழுமையான மறுசீரமைப்புத் திட்டம் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும் என்றும் சபையில் தெரிவித்தார்.

மின்சார சபை மாதாந்தம் பில்லியன் கணக்கில் நட்டத்தை எதிர்நோக்கி வரும் தற்போதைய நிலையில் மின்சார கட்டணத்தை அதிகரிப்பது தவிர்க்க முடியாதது என்பதை சுட்டிக் காட்டிய அமைச்சர், சாதாரண மக்களுக்கு நிவாரணம் வழங்கும் வகையிலும் அத்துடன் அதிகளவு மின்சாரத்தை உபயோகிப்போருக்கு கணிசமான கட்டண அதிகரிப்பு என்ற வகையிலேயே கட்டண திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்பதையும் அவர் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று மின்சார கட்டணம் அதிகரிப்பு தொடர்பில் எதிர்க்கட்சியினர் முன் வைத்த சபை ஒத்திவைப்புவேளை பிரேரணை மீதான விவாதத்தில் உரையாற்றும் போதே அமைச்சர் கஞ்சன விஜேசேகர இவ்வாறு தெரிவித்தார்.

சபையில் தொடர்ந்தும் உரையாற்றிய அமைச்சர்:

நாட்டில் 14 இலட்சம் மக்கள் 030 அலகு மின்சாரத்தை மாதாந்தம் உபயோகித்து வருகின்றனர். அதற்கான கட்டணமாக இதுவரை 105 ரூபா மட்டுமே அறவிவிடப்பட்டு வந்துள்ளது. புதிய கட்டண திருத்தத்தின் படி அந்தத் தொகை தற்போது 360 ரூபாவாக அதிகரிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் 3160 அலகு மின்சாரத்தை உபயோகிப்போர் இதுவரை காலமும் மாதாந்தம் செலுத்தி வந்த 280 ரூபா கட்டணமே தற்போது 780 ரூபாவாக அதிகரிக்கப்பட்டுள்ளது.

அதேவேளை, நாடளாவிய ரீதியில் உள்ள 48, 000 மதத் தலங்களில் 15,000 மதத்தலங்கள் 030 அலகு மின்சாரத்தை உபயோகித்து வருகின்றன. அத்தகைய மதத்தலங்கள் இதுவரை காலம் செலுத்தி வந்த 87 ரூபா மாதாந்த கட்டணமே தற்போது 330 ரூபாவாக அதிகரிக்கப்படுகிறது.

மின்சார சபை சுமார் 613 பில்லியன் ரூபா நட்டத்தை எதிர்நோக்கியுள்ளது.

மின்சார சபையினால் மேற்கொள்ளக்கூடிய பல்வேறு செயற் திட்டங்கள் தனியார் துறைக்கு வழங்கப்பட்டுள்ளமையும் ஊழியர்கள் அதிகரிப்பும் மின்சார சபை நட்டத்திற்கு காரணமாகும். 15,000 ஆக இருந்த ஊழியர்களின் தொகை கடந்த காலங்களில் 26,000 ஆக அதிகரிக்கப்பட்டுள்ளது. எனினும் மின்சார துண்டிப்பு, மரங்களை தரித்தல் போன்ற செயல்பாடுகள் கூட தனியாருக்கு வழங்கப்பட்டு வருகின்றன. இத்தகைய நிலைமைகள் கட்டுப்படுத்தப்பட வேண்டும்.

கடந்த காலங்களில் மின் உற்பத்தி திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்ட போதும் சம்பூர் போன்ற மின் உற்பத்தி திட்டங்களை ஆரம்பிக்க முற்பட்ட போதும் எதிர்க்கட்சியினர் எதிர்ப்புகளை தெரிவித்து வந்தனர்.எனினும் அதற்கு பதிலாக மாற்று நடவடிக்கை எதையும் அவர்கள் முன் வைக்கவில்லை. மின்சாரத் துறையிலும் எதிர்க்கட்சி தொழிற்சங்கங்கள் தொடர்ந்து எதிர்ப்புகளை தெரிவித்து வருகின்றனர்.

மின்சாரதுறையின் முன்னேற்றத்திற்கு அது பெரும் பாதிப்பாக அமைந்துள்ளன என்றும் அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

### அரசாங்கத்தின் இடைக்கால வரவு...

சேவைக்கு ஏற்பாடு செய்வதற்கு முன்னாள் நிதியமைச்சர் பஷில் ராஜபக்ஷவினால் சமர்ப்பிக்கப்பட்ட ஒதுக்கீட்டுச் சட்டமூலம் விவாதிக்கப்பட்டு பாராளுமன்றில் நிறைவேற்றப்பட்டது.

அதற்கமைய ஒதுக்கீட்டுச் சட்டமூலம் 2021 டிசம்பர் மாதம் 10ஆம் திகதி சான்றுரைக்கப்படுத்தப்பட்டு 2021ஆம் ஆண்டு 30ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டமாகப் பெயரிடப்பட்டது.

பாராளுமன்றத்தின் ஊடாக ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்டதன் பின்னர் கடந்த ஜூலை மாதம் 28ஆம் திகதி பாராளுமன்றத்தின் இரண்டாவது கூட்டத்தொடர் ஒத்திவைக்கப்பட்டு 9ஆவது பாராளுமன்றத்தின் மூன்றாவது கூட்டத்தொடர் கடந்த ஆகஸ்ட் 3ஆம் திகதி சம்பிரதாய பூர்வமாக ஜனாதிபதியால் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

அதற்கிணங்க ஜனாதிபதியால் முன்வைக்கப்பட்ட கொள்கை பிரகடனத்திற்கமைய புதிய வரவு செலவு திட்டம் முன்வைக்கப்படும் என குறிப்பிடப்பட்டுள்ளது. புதிய அரசாங்கத்தினால் 2022ஆம் ஆண்டில் எஞ்சியுள்ள காலப்பகுதிக்காக முன்னர் நிறைவேற்றப்பட்ட ஒதுக்கீட்டுச் சட்டத்தில் மேற்கொள்ளப்பட வேண்டிய திருத்தங்களுக்காக திருத்தச் சட்டமூலம் சமர்ப்பிக்கப்படும். 2021ஆம் ஆண்டு 30ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டத்தைத் திருத்துவதற்கான திருத்தச் சட்டமூலத்தை கடந்த 09ஆம் திகதி முதலாவது மதிப்பீட்டுக்காக நிதியமைச்சர் சார்பில் பிரதமர் தினேஷ் குணவர்தன சபையில் சமர்ப்பித்தார். ஆந்த அந்த சட்டமூலத்திற்கு அமைய 2021ஆம் ஆண்டு 30ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 2ஆவது பிரிவின் (1)உப பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள இரண்டாயிரத்து எழுநூற்றுத் தொண்ணூறு பில்லியன் நானூற்றி நாற்பத்தாறு மில்லியன் ஐந்நூற்று ஐம்பத்தெட்டாயிரம் ரூபாவாகவிருக்கும். அரசாங்கத்தின் செலவினத்தொகையானது மூவாயிரத்து இருநூற்று எழுபத்தைந்து பில்லியன் எழுநூற்றி எண்பத்தாறு மில்லியன் ஐநூற்று ஐம்பத்தெட்டு ஆயிரம் ரூபா என மாற்றப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### இரத்மலானை ரயில்வே... 03ஆம் பக்கத் தொடர்

புகையிரத திணைக்கள ஊழியர்களை பயமுறுத்தி அரசுக்கு சொந்தமான சொத்துகளை களவாடுவதற்கென, திட்டமிட்டு குழு ஒன்று செயல்படுவதாகவும் பொலிஸ் விசாரணைகளில் தெரிய வந்துள்ளது. இதையடுத்து,கல்கிசை பிரதேசத்துக்கு பொறுப்பான சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் இங்கு நடைபெற்று வரும் பாரியளவிலான களவு, மோசடி, ஊழல் தொடர்பாக விசாரணை ஒன்றை மேற்கொண்டுள்ளதுடன்,

மொறட்டுவ பல்கலைக்கழகம் உள்ளிட்ட வேறு பிரிவுகளின் மூலமும் இந்த விசாரணைக்கான ஒத்துழைப்பை பெற்றுள்ளார். இந்நிலையில், போக்குவரத்து பெருந்தெருக்கள் மற்றும் ஊடக அமைச்சர் கண்காணிப்பு விஜயமொன்றை இங்கு மேற்கொண்டிருந்தார்.

இதன்போது, நிறுவனத்தின் நிர்வாகிகள் மற்றும் ஊழியர்கள் தங்களின் வீடுகளுக்கு கூட கள்வர்களால் பாதிப்பும் அச்சுறுத்தலும் ஏற்படுவதாகவும் அமைச்சருக்கு தெளிவு படுத்தினர். இதுகுறித்து கவனம் செலுத்திய அமைச்சர்,மேல் மாகாணத்துக்கு பொறுப்பான சிரேஷ்ட பதில் பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னக்கோன் உள்ளிட்ட உயர் அதிகாரிகளின் கவனத்திற்கு கொண்டு வந்தார்.பின்னர்,நிலைமைகளை நேரில் கண்டறிவதற்கு அமைச்சருடன் இணைந்து இவர்களும் நேரடி விஜயத்தை மேற்கொண்டிருந்தனர்.கள ஆய்வுகளை மேற்கொண்ட அமைச்சர், இது குறித்து அமைச்சரவையின் கவனத்துக்கு கொண்டு வந்து,இந்த ரயில்வே வேலைத்தளத்தின் பாதுகாப்பை பலப்படுத்தும் திட்டத்தையும் தயாரித்துள்ளார்.இத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவது குறித்து

பொலிஸார் மற்றும் புகையிரத திணைக்கள பாதுகாப்பு உத்தியோகஸ்தர்களுக்கும் அமைச்சர் ஆலோசனை வழங்கினார்.

இந்நிகழ்வில், மேல் மாகாணத்துக்கு பொறுப்பான சிரேஷ்ட பிரதி பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னக்கோன், கல்கிசை பிரதேசத்துக்கு பொறுப்பான சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் மங்கள தெஹிதெனிய, உதவி பொலிஸ் அத்தியட்சகர்கள், கல்கிசை தலைமையக பொலிஸ் பரிசோதகர், இரத்மலானை இயந்திர ரயில் வேலைத்தள நிர்வாகி உள்ளிட்ட ஊழியர்களும் கலந்து கொண்டனர்.

### அடிமட்ட மக்களுக்கு... 03ஆம் பக்கத் தொடர்

இந்த விலை அதிகரிப்பு மேற்கொள்ளப்படாவிட்டால்வருடாந்தம் மின்சார சபை 508 பில்லியன் நட்டத்தை எதிர்கொள்ள நேரும்.

இதனை பாவனையாளர்கள் மட்டுமன்றி மின்சார சபை உள்ளிட்ட அனைவரும் ஏற்க வேண்டும்.

மின்சார உற்பத்தி நிலையங்கள் ஆரம்பிக்கப்படும் போது எதிர்க்கட்சியினர் எதிர்ப்புகளையே தொடர்ந்தும் மேற்கொண்டு வந்துள்ளனர். அவர்களது ஆட்சியில் எந்த புதிய மின் உற்பத்தி நிலையங்களும் ஏற்படுத்தவில்லை.

இன்றைய நெருக்கடி நிலைக்கு அதுவும் ஒரு காரணம்.

மின் கட்டணம் அதிகரிக்கப்பட்டுள்ள போதும் ஒரு அலகு மின்சாரத்திற்கு மின்சார சபை 12 ரூபா நட்டத்தை தொடர்ந்தும் எதிர்கொண்டு வருகிறது.

மின்சார கட்டணஅதிகரிப்பால் பாதிக்கப்படும் மக்களுக்கு கடந்த காலத்தில் அனைத்து அரசாங்கங்களும் பொறுப்புக் கூற வேண்டும் அதுமட்டுமன்றி மின்சார சபை, பாராளுமன்றத்தின் அனைத்து உறுப்பினர்கள், கட்சிகளும் பொறுப்புக் கூற வேண்டும். அரசாங்கம் மட்டுமன்றி மின்சார சபையும் பொறுப்புக் கூற வேண்டும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

### பெருந்தொகை பீடி... 03ஆம் பக்கத் தொடர்

கல்மேடு பகுதியில் தரித்திருந்த பாரவூர்தியை சோதனையிட்டுள்ளனர். அதன்போது, அதில் காணப்பட்ட பீடி இலைகள் 73 மூடைகளை கைப்பற்றினர். அவற்றை பறிமுதல் செய்த பொலிஸார் பாரவூர்தியின் சாரதியையும், அதன் உதவியாளரையும் கைது செய்தனர். அத்துடன், தப்பியோடிய மேலும் 4 பேரைத் தேடி பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். இந்த பீடி இலைகள் சிவகாசியிலிருந்து கொண்டுவரப்பட்டு, தூத்துக்குடியிலிருந்து கடல்வழியாக இலங்கைக்கு கடத்தப்படவிருந்ததாக விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

### காரைதீவு விபுலானந்தாவில்... 03ஆம் பக்கத் தொடர்

வேல் டயானு ஆகியோர் 3 ஏ சித்திகளையும், ராஜேஸ்வரன் கம்ஷாயினி இரண்டு ஏ ஒரு பி சித்திகளையும் பெற்று மருத்துவத்துறைக்கு தெரிவாகி உள்ளார்கள். ரஜிநாதன் துர்க்கா மூன்று ஏ சித்திகள் பெற்று பொறியியல் துறைக்கு தெரிவாகியுள்ளார்.

### சவாலுக்கு உட்படுத்தும்... 03ஆம் பக்கத் தொடர்

கலாநிதி குணதாச அமரசேகர உள்ளிட்ட 9 பேரினால் குறித்த மனுக்கள் உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டிருந்தன. அந்த மனுக்களில் பிரதிவாதியாக சட்டமா அதிபர் பெயரிடப்பட்டிருந்தார். இந்நிலையிலேயே அரசியலமைப்பின் 22 ஆவது திருத்தச் சட்டமூலத்தை சவாலுக்கு உட்படுத்தி தாக்கல் செய்யப்பட்டிருந்த 9 மனுக்கள் தொடர்பான உயர் நீதிமன்றத்தின் வியாக்கியானம் சபாநாயகருக்கு கிடைக்கப்பெற்றுள்ளதாக பிரதி சபாநாயகர் அஜித் ராஜபக்ச சபைக்கு அறிவித்தபோதும் அது தொடர்பான விபரங்களை அவர் வெளியிட வில்லை.

### ஜெனீவா அமர்வை எதிர்கொள்ள தயார்...

மனித உரிமைகள் பேரவையின் கூட்டத் தொடரில் இலங்கையின் நிலைப்பாட்டை அரசு சமர்ப்பிக்கும்.

இந்த மாநாடு இலங்கைக்கு சவாலாக அமையாது என்றே நாம் கருதுகின்றோம். இலங்கை தொடர்பில் என்ன பிரேரணை வந்தாலும் அதனை அரசு எதிர்கொள்ளத் தயாராகவுள்ளது" என கூறியுள்ளார்.

### இடது காலால் எழுதி 3A சித்திபெற்று...

தொடர்ந்தார். 2018ஆம் ஆண்டு இடம்பெற்ற சாதாரண தர பரீட்சையில் 8 A சித்திகளையும் ஒரு B சித்தியும் பெற்றுள்ளார்.

தற்போது உயர்தர பரீட்சையில் வர்த்தக பிரிவில் 3 A சித்திகளை பெற்று அனைவரின் பாராட்டையும் பெற்ற அவர், 2017ஆம் ஆண்டு வியட்நாமில் நடைபெற்ற Global IT challenge 2017 Super challenger சர்வதேச போட்டியில் தங்க பதக்கம் பெற்றுள்ளார்.

வாழ்க்கையில் வெற்றி பெற குறைகள் தடையில்லை என ரஷ்மி நிரூபித்து காட்டியுள்ளார் என பலரும் அவரை பாராட்டியுள்ளனர்.

### முன்னாள் ஜனாதிபதி விரைவில்...

வழங்கப்பட வேண்டும். அதற்குத் தேவையான ஏற்பாடுகள் இப்போது செய்யப்பட்டுள்ளதாக நான் நினைக்கிறேன் என்றார்.

### பாணின் விலையை அதிகரிக்க...

தெரிவித்துள்ளார். தற்போது கோதுமை மா கிலோ ஒன்று 350 ரூபா வரை அதிக விலைக்கு விற்பனை செய்யப்படுவதாகவும் சந்தையில் மாவிற்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இந்த விலையில் மாவை வாங்கி பேக்கரி பொருட்கள் தயாரிக்கும் பட்சத்தில் தற்போது 190 ரூபாவாக உள்ள பாண் இறாத்தல் ஒன்றின் விலை 250 ரூபாவாக உயரும் எனவும், பனிஸ் ஒன்றின் விலையை 100 ரூபாய் வரை அதிகரிக்க நேரிடும் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

### இந்திய உள்துறை அமைச்சரை...

பா.ஜ.க மூத்த அரசியல்வாதியும் உள்துறை அமைச்சருமான அமித் ஷா கலந்து கொண்டிருந்த நிலையில் அவருடன் நட்புறவு நிலையில் ஆளுநர் கலந்துரையாடியுள்ளார்.

இலங்கைக்கான விரிவான திறன் அபிவிருத்தி தொடர்பில் ஏற்கனவே வட மாகாண ஆளுநர் கலந்துரையாடல்களை நடத்திய நிலையில் குறித்த பட்டமளிப்பு விழாவுக்கு அழைக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

### கல்முனை தமிழ்ப் பிரிவு விவகாரம்;...

கல்முனை தமிழ்ப்பிரிவு பிரதேச செயலக விவகாரம் தொடர்பில் பிரதமர் தினேஷ் குணவர்த்தனவை தானும் பாராளுமன்ற உறுப்பினர் த.கலையரசனும் சந்தித்து கலந்தரையாடியபோதே பிரதமர் இவ்வாறு தெரிவித்ததாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினரும் தமிழ் ஈழ விடுதலை இயக்கத்தின் செயலாளர் நாயகமுமான கோ.கருணாகரம் (ஜனா) தெரிவித்தார். இந்தச் சந்திப்பு நேற்று (29) பாராளுமன்றத்தில் இடம்பெற்றது.

சுமார் 15 நிமிடங்கள் இடம்பெற்ற இச் சந்திப்பில், கல்முனை வடக்கு (தமிழ்ப்பிரிவு) பிரதேச செயலகம் தொடர்பான குழப்பநிலை மற்றும் அண்மைய பொது நிருவாக அமைச்சின் இணையத்தளத்திலிருந்து கல்முனை தமிழ்ப்பிரிவு அகற்றப்பட்டமை, நீண்ட காலமாக இருந்து வருகின்ற கணக்காளர் நியமிக்கப்படாத பிரச்சினை, காணிப் பிரச்சினை உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் தொடர்பில் விளக்கமளித்ததாகவும் அவர் தெரிவித்தார்.

இக்கலந்துயாடலின் அடிப்படையில் எதிர்வரும் வெள்ளிக்கிழமைக்கிடையில் கல்முனை வடக்கு (தமிழ்ப் பிரிவு) பிரதேச செயலகக் குழப்பங்களுக்குச் சரியானதொரு தீர்க்கமான தீர்வை வழங்குவதாக பிரதமர் உறுதியளித்ததாகவும் அவர் தெரிவித்தார்.

# உயிரியல் விஞ்ஞானத்தில் கேகாலை மாவட்டத்தில் தமிழ் மாணவன் முதலிடம்

அவிசாவளை நிருபர்



வெளியாகியுள்ள க.பொ.த உயர்தரப் பரீட்சையின் பெறுபேற்றின் அடிப்படையில் கேகாலை மாவட்டம் எட்டியாந்தோட்டை பூனுகல தோட்டத்தை சேர்ந்த மகேந்திரன் துஷ்யந்தன் எனும் மாணவன் உயிரியல் பிரிவில் கேகாலை மாவட்டத்தில் முதலிடத்தை பெற்று வரலாற்று சாதனைப் படைத்துள்ளார்.

தரம் 1–13வரை எட்டியாந்தோட்டை புனித மரியாள் தமிழ் தேசியக் கல்லூரியில் தனது படிப்பை மேற்கொண்டு இரண்டாவது தடவையாக தனிப்பட்ட பரீட்சார்த்தியாக தோற்றியே இவர் இச்சாதனையை படைத்துள்ளார். 3 பாடங்களில் A தர சித்தியை பெற்று 2.7134 எனும் வெட்டுப்புள்ளியில் மாவட்ட மட்டத்தில் முதலிடத்தையும் அகில இலங்கை ரீதியில் 22 வது இடத்தையும் பெற்றுள்ளார்.

கடந்த வருடம் பாடசாலை பரீட்சார்த்தியாக புனித மரியாள் பாடசாலை மூலமாக தோற்றி 2A, C சித்தியையும் 1.8003 வெட்டுப்புள்ளியையும் பெற்றிருந்த போதிலும் வைத்தியத்துறைக்கு பல்கலைக்கழக வாய்ப்பு கிடைக்காதது காரணமாக, மீண்டும் இரண்டாவது முறையாக தோற்றி இவர் இச்சாதனையை படைத்துள்ளார். விடாமுயற்சியும், கடின உழைப்பும் இவரின் இந்த வெற்றிக்கு மூலக்காரணமாக இருந்துள்ளது. முதற்தடவையில் குறைவான பெறுபேறுகளை பெற்று தோல்வியை தழுவிய மாணவர்களுக்கு இம்மாணவனின் வெற்றி ஒரு எடுத்துக்காட்டு. கேகாலை போன்ற மிகவும் பின்தங்கிய மாவட்டத்தில் எந்தவித வசதிவாய்ப்புக்களும் இல்லாமல் தமது சுயக்கற்றலின் மூலம் இவ்வாறான சாதனைகளை படைக்கமுடியுமாக இருந்தால் இதுபோன்ற இன்னும் எத்தனையோ மாணவர்கள் திறமையானவர்கள் இருந்தும் வாய்புக்கள் இன்றி வேறு வேறு பிரிவுகளில் உயர்தரத்தை தொடர்கின்றனர்.

எட்டியாந்தோட்டை புனித மரியாளில் உயர்தர கணித, விஞ்ஞானப் பிரிவுகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. அப்பாடசாலைக்கான வளங்களை கல்வித்துறையினரும் அரசியல் தலைமைக்கும் பெற்றுக்கொடுக்கின்ற பொழுது எதிர்காலத்தில் பல துஷ்யந்தன்களை உருவாக்க முடியும்.

# நுவரெலியா மாகாஸ்தோட்ட கீழ் பிரிவு தோட்ட ஆலயத்தில் திருட்டு

தலவாக்கலை குறூப் நிருபர்




நுவரெலியா பொலிஸ் பிரிவிற்குட்பட்ட நுவரெலியா மாகாஸ்தோட்ட கீழ் பிரிவு தோட்டத்தில் ஸ்ரீ கருமாரியம்மன் ஆலயத்தில் (27) சனிக்கிழமை இரவு திருட்டு சம்பவம் ஒன்று இடம் பெற்றுள்ளதாக நுவரெலியா பொலிஸார் தெரிவித்தனர்.

சனிக்கிழமை இரவு ஆலயத்தில் வழமையான பூஜைகள் நடைபெற்ற பின் இரவு 8 மணிக்கு மூடப்பட்ட ஆலயத்தை ஞாயிற்றுக்கிழமை காலை 6 மணிக்கு திறந்தபோது சுவாமியின் மூலஸ்தானம் திறந்திருந்துள்ளது. அதனை தொடர்ந்து ஆலய நிர்வாக சபையினரும் தோட்ட பொது மக்களும் ஆலயத்தினுள் சென்று பார்த்தபோது ஆலயத்தின் தெற்குவாசல் கதவு கண்ணாடி உடைக்கப்பட்டு கதவை திறந்து உள்ளே நுழைந்த திருடர்கள் சுவாமி சிலையில் அணிவிக்கப்பட்டிருந்த தாலிமணி தங்க ஆபரணங்களையும் ஆலய ஒலிபெருக்கி உபகரணங்கள் மற்றும் ஆலய உண்டியலையும் திருடி சென்றுள்ளனர்.

திருடப்பட்ட உண்டியலை ஆலயமுற்றத்தில் உடைத்து பணத்தை எடுத்துக்கொண்டு உண்டியலை அங்கேயே விட்டு சென்றுள்ளனர். நுவரெலியா பொலிஸாருக்கு கிடைத்த தகவலுக்கமைய சம்பவ இடத்துக்கு சென்ற நுவரெலியா பொலிஸார் மோப்ப நாய்களுடன் தேடுதல் நடவடிக்கையில் ஈடுபட்டதுடன் விரல் அடையாளங்களையும் எடுத்துச் சென்றுள்ளதோடு இது தொடர்பிலான மேலதிக விசாரணைகளை நுவரெலியா பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## வீட்டு வேலைக்குச் செல்லும் மலையகச் சிறுமிகளின் தொடரும் மரணங்கள்;

# வீட்டுவேலைத் தொழிலாளர் சங்கத்தின் தலைவி கண்டனம்

மலையகச் சிறுமி இசாலினியின் மரணம் இடம்பெற்று அதனை மறப்பதற்குள் வீட்டு வேலைக்கு, அனுப்பப்பட்ட மற்றும் ஒரு சிறுமி மரணமடைந்துள்ளமை பாரிய கவலையை ஏற்படுத்தியுள்ளதாகவும் இது போன்ற துயரங்கள் தொடராது இருக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் எனவும் வீட்டு வேலைத் தொழிலாளர் சங்கம் தெரவித்துள்ளது.

கண்டியிலுள்ள அதன் தலைமையகத்தில் நடத்திய ஊடாக சந்திப்பில் வீட்டுவேலைத் தொழிலாளர் சங்கத்தின் தலைவி சத்யவாணி சரசகோபால் இதனை தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியதாவது,..

அன்று ஒரு இசாலினியை இழந்தோம். இன்று ஒரு ரமணியை இழந்துள்ளோம். எதிர்காலத்தில் இன்னும் பல இசாலினிகளையும், ரமணிகளையும் இழக்க இடமளிக்க கூடாது என கேட்டுக் கொள்கிறோம். எனவே கம்பஹா பிரதேசத்தில் வீட்டில், பணி புரிந்து கொண்டிருந்த சமயம் உயிரிழந்த, மஸ்கெலியாவைச் சேர்ந்த ரமணியின் மரணம் தொடர்பான முறையான விசாரணை இடம்பெற்று அது பற்றிய உண்மைகள் வெளிப்படுத்தப்பட வேண்டும்.

இது போன்ற நிலைமைகள் அடிக்கடி ஏற்பட, வீட்டு வேலைத் தொழில் தொடர்பாக சரியான சட்ட திட்டங்கள் இன்மை ஒரு முக்கிய காரணமாகும். எனவே வீட்டு வேலைத் தொழிலாளர் தொடர்பாக சரியான சட்ட விதிகள் அமுல்படுத்தப்பட வேண்டும். அதற்கு அரசு ஒத்துழைக்க வேண்டும். வீட்டு வேலைத் தொழில் தொடர்பாக சட்ட பாதுகாப்பு வேண்டுமெனக் கோரிக்கை விடுத்து வீட்டு வேலை தொழிலாளர் சங்கம் கடந்த 10 வருடங்களுக்கு மேல் போராடி வருகிறது.

# கொழும்பு 4 லயன்ஸ் கழகம், டிக்கோயா ரோட்டறி கழகம் இணைந்து நிவாரணம் வழங்கல்

நுவரெலியா தினகரன்

ஆறு மாத குழந்தைகளுக்கான போர்வைகள், உலர் உணவுப் பொருட்கள், வெள்ள அனர்த்தத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கான உலர் உணவுப் பொருட்கள் வழங்குதல் ஆகிய வேலைத் திட்டம் ஒன்றை கொழும்பு 4 லயன்ஸ் கழகமும் டிக்கோயா ரோட்டறி கழகமும் இணைந்து எற்பாடு செய்திருந்தது.

இதன் அடிப்படையில் கடந்த ஞாயிற்றுக் கிழமை மஸ்கெலியா சிறுவர் பராமரிப்பு நிலையத்தில் 25 குழங்தைகளுக்கும் அப்கொட் பகுதியில் 25 குழந்தைகளுக்கும் போர்வைகள் உலர் உணவுப் பொருட்கள், பால்மா மற்றும் அப்கொட் பகுதியில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட 25 குடும்பங்களுக்குமான உலர் உணவுப் பொருட்களும் வழங்கி வைக்கப்பட்டன. இந்நிகழ்வை கொழும்பு 4 லயன்ஸ் கழகத்தின் தலைவர் சுதேஸ்குமார், பிரதித் தலைவர் சிவேந்திரன், லயன் ஜனார்த்தன், டிக்கோயா ரோட்டறி கழகத்தின் தலைவர் சுப்பிரமணியம் தியாகு ஆகியோர் இணைந்து மேற்கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.



## ஜனாதிபதி செயலகத்தில் பொருட்களுக்கு சேதம் விளைவித்தவர்கள்;

# பொலிஸார் பொது மக்களின் உதவியை நாடுகின்றனர்

ஜனாதிபதி செயலகத்துக்குள் ஜூலை 09 ஆம் திகதி அத்துமீறி நுழைந்து அங்குள்ள பொருட்களுக்கு சேதம் விளைத்ததாக சந்தேக நபர்கள் 72 பேரை பொலிஸ் தலைமையகம் அடையாளப்படுத்தியுள்ளது.இவர்கள் தொடர்பான காணொளி மற்றும் புகைப்படங்களை கொண்டு சந்தேக நபர்களை பொலிஸார் உறுதிப்படுத்தியுள்ளதால்,இவர்களை கைது செய்வதற்காக பொலிஸ் தலைமையகம் பொது மக்களின் உதவியை நாட்டியுள்ள.இது தொடர்பில் 0112083049 மற்றும் 1997 துரித தொலைபேசிகளுக்கு அறியத்தருமாறு கேட்டுக் கொண்டுள்ளது.







# நகர்வலம்



# சவூதி அபிவிருத்தி நிதிய நிறைவேற்றுப் பணிப்பாளருடன் அமைச்சர் நஸீர் அஹமட் விசேட கலந்துரையாடல்



சவூதி அரேபியாவின் அபிவிருத்தி நிதியத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர், சுல்தான் அல்முர்ஷித், சுற்றாடல் துறை அமைச்சர் நஸீர் அஹமட்டுடன் பேச்சுவார்த்தை நடத்தினார். தலைநகர், ரியாதிலுள்ள தலைமைக் காரியாலயத்தில் (28) இச்சந்திப்பு நடந்தது. சவூதி அரேபியாவுக்கான இலங்கை தூதுவர் முஹம்மது ஹம்ஸாவும் இக்கலந்துரையாடலில் கலந்துகொண்டார்.

சவூதியின் நிதி ஒத்துழைப்பில் இலங்கையில் மேற்கொள்ளவுள்ள தொழில் வாய்ப்புக்கள் குறித்தும், இச்சந்திப்பில் கலந்துரையாடப்பட்டது.

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் விஷேட பிரதிநிதியாக, நான்கு நாள் விஜயம் மேற்கொண்டு அமைச்சர் நஸீர் அஹமட் (28) சவூதி அரேபியா சென்றுள்ளார். அங்கு உயர்மட்ட தலைவர்களுடன் பேச்சு நடாத்தவுள்ள அமைச்சர், முதற்தடவையாக அபிவிருத்தி நிதியத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் சுல்தான் அல்முர்ஷிதை சந்தித்தமை குறிப்பிடத்தக்கது.

# பகினிகஹவெல மு.ம. கல்லூரி உ/தவில் சிறந்த பெறுபேறு



மொ/ பகினிகஹவெல முஸ்லிம் மத்திய கல்லூரி 2021ம் ஆண்டு நடைபெற்ற க.பொ.த (உ/த) பரீட்சையில் சிறந்த பெறுபேற்றை பெற்றுள்ளது. பரீட்சை முடிவுகளின்படி கலைப்பிரிவில் 11 மாணவர்கள், வணிகப் பிரிவில் 3 மாணவர்கள், பௌதீக விஞ்ஞானப் பிரிவில் 5 மாணவர்களும், உயிரியல் விஞ்ஞானப் பிரிவில் 7 மாணவர்களும் பல்கலைக்கழகத்திற்கு விண்ணப்பிப்பதற்கான தகுதியினை பெற்றுள்ளார்கள்.

இவர்களில் வணிகப் பிரிவில் எம்.ஏ.எப். அஸ்மா 3A திறமை சித்தியையும் கலைப்பிரிவில் நிப்லா 3A சித்தியையும் பெற்றுள்ளார். பௌதீக விஞ்ஞானப் பிரிவில் எம்.என். நவாப்டீன் B, 2C சித்தியினையும் உயிரியல் விஞ்ஞானப் பிரிவில் ஏ.ஆர்.எப் ரிஸ்னா மற்றும் எம்.என். நிப்லா ஆகியோர் சிறந்த பெறுபேறுகளையும் பெற்று பாடசாலைக்கு பெருமை சேர்த்துள்ளார்.



கொழும்பு சைவமங்கையர் வித்தியாலய மாணவ தலைவர் ஒன்றியம் 2022" ஏற்பாட்டில் மூன்று நாள் கல்விக்கண்காட்சி வெள்ளிக்கிழமை காலை அதிபர் அருந்ததி இராஜவிஜயன் தலைமையில் ஆரம்பமாகியது. நிகழ்வில் பிரதம அதிதியாக கலந்து கொண்ட கொழும்பு பல்கலைக்கழகத்தின் கல்விப்பீட சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி சபாரட்ணம் அதிரதன் பிரதம அதிதியாகவும், பாராளுமன்ற உறுப்பினர் மனோ கணேசன் சிறப்பதிதியாகவும் கலந்து கொண்டு கண்காட்சியை திறந்து வைத்த பின் கண்காட்சியை பார்வையிடுவதையும் காணலாம்.

# நாட்டில் சுவாச நோய் திடீரென அதிகரிப்பு

## Dr. வாசன் ரட்ணசிங்கம் தெரிவிப்பு



பொதுமக்கள் முறையாக முகக்கவசங்களை அணியாத காரணங்களினால் சுவாச நோய்கள் அதிகரித்து காணப்படுவதாக அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் மத்திய குழு மற்றும் ஊடகக் குழு உறுப்பினர் வைத்தியர் வாசன் ரட்ணசிங்கம் தெரிவித்தார்.

அத்துடன், இதனால் சிறுவர்களிடையே சுவாசப் பிரச்சினை ஏற்படுவதற்கான வாய்ப்புகள் அதிகரித்து காணப்படுகிறது.

இதனால் பொதுமக்கள் கொவிட் 19 விதிமுறைகளை முறையாக பின்பற்றி சுவாசம் சார்ந்த பிரச்சினைகளிலிருந்து பாதுகாப்பாக இருக்குமாறு அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# அஞ்சலியும் பரிசளிப்பும்



தமிழ் கலைத்துறைக்கு பெரும் பங்காற்றி சமகாலத்தில் நம்மை விட்டு மறைந்த பாரதி கலாமன்றத் தலைவர் த.மணி, புதிய அலை கலை வட்டத்தின் நாடகக்கலைஞர் வீ.செல்வராஜ் மற்றும் பிரபல தபேலா வாத்தியக் கலைஞர் ராதா வீரசிங்கம் ஆகியோருக்கு அஞ்சலி செலுத்தவும் புதிய அலை கலை வட்டம் நடத்திவரும் எவோட்ஸ் 2022 கலாசார போட்டித் தொடருக்கான கட்டுரைப்போட்டியில் வெற்றி பெற்ற மூவருக்கு பரிசில்கள் வழங்கவும் நிகழ்வொன்று ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்நிகழ்வு எதிர்வரும் 3ஆம் திகதி (3/09) மாலை 3 மணிக்கு கொழும்பு13 ஸ்ரீ கதிரேசன் வீதியில் அமைந்துள்ள ஸ்ரீகதிரேசன் மணி மண்டபத்தில் நடைபெறும். இந் நிகழ்வில் புரவலர் ஹாசிம் உமர், பிரதம அதிதியாகக் கலந்து கொள்கிறார். கலைஞரும் பத்திரிகையாளருமான ராதா மேத்தா தலைமை ஏற்கிறார்.


# பிஸ்கால் ஏல விற்பனை அறிவித்தல்

## கொழும்பு மாவட்ட நீதிமன்றம்

வீரசிங்ஹ ஆரச்சிகே தெரேசா பெரேரா
இல. 123, சென், ஜோசப் வீதி,
கிராண்ட்பாஸ்

**வழக்கு இல. 14267/பிரிவு**
**(நீதிமன்றம் இல. 03)**

**வழக்காளி**

அ. செனவிரத்ன முதியன்செலாகே தொன் ஷாம்ரொக்க்ளோரியா பெரேரா
ஆ. செனவிரத்ன முதியன்செலாகே தொன் செலின்கோ ஜோன்ஸ் பெரேரா
இ. செனவிரத்ன முதியன்செலாகே தொன் நின்ஸன் ஜோன்ஸ் பெரேரா
ஈ. செனவிரத்ன முதியன்செலாகே தொன் எல்படா மரிடா பெரேரா
அனைவரும்
இல. 125, (சரியான இல. 123. சென் ஜோசப் வீதி, கிறாண்ட்பாஸ்

**பதில் வழக்காளிகள்**

**- எதிர் -**

01. செனவிரத்ன முதியன்செலாகே தொன் ஷெம்ரொக்க்ளோரியா பெரேரா
02. செனவிரத்ன முதியன்செலாகே தொன் செலிங்கோ ஜோன்ஸ் பெரேரா
03. செனவிரத்ன முதியன்செலாகே தொன் நிக்ஸன் ஜோன்ஸ் பெரேரா
04. செனவிரத்ன முதியன்செலாகே தொன் எல்படா மரிடா பெரேரா
05. குரஹ கமகே தோமஸ் பெரேரா
06. தோன மேரி மார்க்ரட் சமரசிங்ஹ
அனைவரும்
இல. 125 (சரியான இல. 123. சென் ஜோசப் வீதி, கிராண்ட்பாஸ்

**எதிராளிகள்**

மேற்படி வழக்கிழக்கத்தில் குறிப்பிடப்பட்டிருக்கும் என்னால் வழங்கப்பட்ட ஏல விற்பனை படி கீழ் காணப்படும் அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள ஆதனம்.

2022ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 22ஆம் திகதி மு.ப. 11.00 மணிக்கு மேற்படி பெயர் குறிப்பிடப்பட்ட வழக்காளிகளின் மற்றும் எதிராளிகளின் ஆதனம் அமைந்துள்ள ஸ்தலத்தில் என்னால் ஏல விற்பனையில் விற்பனை செய்யப்படும்.

**மேற்குறிப்பிடப்பட்ட அட்டவணை**

அனுமதிக்கப்பட்ட நில அளவையாளர் திரு. பீ.ஏ.எச். பிலிப்பையா அவர்களினால் 1958.01.24ஆம் திகதி மற்றும் 1164 இலக்கம் கொண்ட நகரத்தில் சென் ஜோசப் வீதியில் அமைந்துள்ள வரி இலக்கம் 123 எனும் கட்டடத்துடன் காணித் துண்டும் சென் ஜோசப் வீதியில் அமைந்துள்ள வரி இல. 129 எனும் தோட்ட பிரிவொன்றும் தற்போது சென் ஜோசப் வீதியில் ஒரு தளமாக அடையாளமிடப்பட்ட மேல் மாகாண கொழும்பு மாவட்ட மாநகர சபை எல்லைக்குள் தொட்டலங்கையில் அமைந்துள்ள காணியான வடகிழக்காக சென் ஜோசப் வீதியும் தென் மேற்காக சென் ஜோசப் வீதி இல. 119 எனும் காணியும், வடமேற்காக பிரின்ஸ் ஒப் வேல்ஸ் மாவத்தை, வரி மதிப்பீட்டு இல. 502 எனும் காணியும், அளவிடப்பட்ட பதினாறு பூச்சியம் ஆறு பர்ச்சஸ் (ஏ0. றூ.0. ப.16.06) அளவு கொண்ட காணி மற்றும் கட்டடம்.

**ஆதனத்திற்கு உள்நுழையும் வழி**

பொரள்ளை முச்சந்தி தொடக்கம் பேஸ்லைன் வீதி ஊடாக தெமட்டகொடையை கடந்து ஒருகொடவத்தை சந்தியில் இடது புறமாக திரும்பி பலாமர சந்தியில் சுற்றுப் பாதை வரை வலப்புரமாக இஞ்சி கடை சந்தி வரையுள்ள சென் ஜோசப் வீதியால் முன்னோக்கிச் சென்று இடப்புறமாக உள்ள கிரான்ட்ஸ்பாஸ் பொலிஸிற்கு அடுத்ததாக சென் ஜோசப் தேவாலயத்திற்கு முன்பாக இந்த இல. 123 எனும் வீடு அமைந்துள்ளது.

**செலுத்தும் முறை**

விற்பனை நிறைவுபெற்றவுடன் வெற்றிகரமான கொள்வனவாளரினால் (i) கொள்வனவு விலையில் 25% வீதம், நீதிமன்றத்தினால் அனுமதிக்கப்பட்ட தொகை சுற்றறிக்கையின் படி 0.5% வீதம் மதிப்பீட்டாளருக்கான தொகையும், அரச தொகை, விற்பனை தொகையில் நூற்றுக்கு இரண்டு தசம் ஐந்து 2.5%) வீதம் ஏலதாரருக்கான கொமிஸ் தொகை கொழும்பு மாநகர சபை தொகையாக நூற்றுக்கு ஒன்று (1%) தொகை ஏலத்திற்கான அனைத்து செலவுகளும் ஏலதாரரிடம் செலுத்த வேண்டும்.

மேலும் வாங்குபவரினால் நூற்றுக்கு எழுபத்தி ஐந்து (75%) தொகை 30 நாட்களுக்குள் குறித்த வழக்கின் வரவுக்கு நீதிமன்றத்தில் வைப்பிட வேண்டியதுடன் அது குறித்து ஏற்றுக் கொள்ள வேண்டிய பிணையாளர்கள் இருவர் குறித்த சந்தர்ப்பத்தில் முன்வைத்து விற்பனை நிபந்தனையில் கையொப்பமிடல் வேண்டும்.

**சட்டத்தரணி யு.ஏ. காமினி,**
**சமாதான நீதவான் முழு தீவு,**
**மொழிப் பெயர்ப்பாளர்,**
**நீதிமன்ற ஆணையாளர்**
**அளவையாளர் மற்றும் ஏலதாரர்.**

**2022ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 25ஆம் திகதி**
**இல. 200/3/டீ, நெலும் பிளேஸ்,**
**கலபலுவாவ, ராஜகிரிய.**
**தொ. இல. 077 1450520**


க.பொ.த உ/த பரீட்சை;

# நளீம் ஹாஜியார் மகளிர் கல்லூரி மாணவிகள் சிறந்த பெறுபேறு



பேருவளை சீனன்கோட்டை நளீம் ஹாஜியார் மகளிர் (தேசிய பாடசாலை) கல்லூரி மாணவிகள் நேற்று முன்தினம் வெளியான க.பொ.த உ/த பரீட்சைக்கு தோற்றிய மாணவிகளுள் 90 வீதமானோர் சிறந்த பெறுபேறுகளைப்பெற்று பாடசாலைக்கு பெருமை சேர்த்துள்ளதாக பாடசாலை அதிபர் ஜனாபா பஹீமா பாயிஸ் தெரிவித்துள்ளார்.

பாடசாலையிலிருந்து விஞ்ஞானப்பிரிவில் தோற்றிய மாணவிகளுள் மொஹமட் ஹாரிஸ் பாத்திமா ஸாரா 2A, B, மொஹமட் முர்ஸி ஸீனதுல் முஷ்பா A, 2B, மொஹமட் அஸ்மி பாத்திமா அஸ்மா 3B, மொஹமட் அப்துல் காதர் பாத்திமா ஷஹாமா A, 2B சித்திகளையும் பெற்றுள்ளார். அதேபோல் வர்த்தகப்பிரிவில் தோற்றிய மாணவிகளுள் மொஹமட் ஹனபி பாத்திமா ஹுமைதா 3A, மொஹமட் ரஸ்னி பாத்திமா ரிபாதா 3A, மொஹமட் நஸீர் பாத்திமா நஸ்மா 3A சித்திகளையும் பெற்றுள்ளனர். கலைப்பிரிவில் தோற்றிய மாணவிகளுள் மொஹமட் துல்பிகார் கன்சுல் ரஷ்தா 3A, மொஹமட் அஸ்மி பாத்திமா ரிஸானா 2A, B, மொஹமட் அனஸ் பாத்திமா ரிஸ்னா A, 2B, அப்துல் கியாஸ் பாத்திமா ஸம்ஹா 2A, C, மொஹமட் அமீன் அய்ஷா ஸைனப் 2A, C, பல்லுல் ரஹ்மான் பாத்திமா நுஹா 2A, B, மொஹமட் நிஸாம் பாத்திமா நஸ்ஹத் 2A, C, மொஹமட் ஜிப்ரி பாத்திமா ஹஸீபா A,B,C, மொஹமட் அலவி செய்னப் அம்ரா A,B,C, சித்திகளையும் பெற்று பாடசாலைக்கு பெருமை சேர்த்துள்ளதாகவும் அதிபர் மேலும் தெரிவித்தார்.

# அலவிய்யா தரீக்காவின் ஆன்மீக தலைவர் பெயரில் கத்முல் குர்ஆன்

*பேருவளை விசேட நிருபர்*

அண்மையில் ஜோர்தானில் காலமான அலவிய்யா தரீக்காவின் உலக ஆன்மீக தலைவரும் பிரபல இஸ்லாமிய அறிஞருமான பேராசிரியர் கலாநிதி அஸ்ஸெய்யித் ஹபீப் அபூபக்கர் அலவி அதனி அல்மஷ்ஹூர் அவர்கள் பெயரிலான கத்முல் குர்ஆன் தமாம் வைபவம் கலீபதுஷ்ஷாதுலி எம்.ஐ.எம். ரபீக் பஹ்ஜி தலைமையில் நடைபெற்றது.

சாதுலியா, அலவிய்யா, காதிரிய்யா மற்றும் நபவிய்யதுல் காதிரிய்யா ஆகிய தரீகாக்களின் உலமாக்கள், இஹ்வான்கள், முரீதீன்கள், அரபு கல்லூரிகளின் அதிபர்கள், விரிவுரையாளர்கள் உட்பட பலரும் கலந்து கொண்டனர். இங்கு உரை நிகழ்த்திய மௌலவி பஸ்லான் அஷ்ரபி, அரபு உலகம் ஏற்றுக்கொண்ட மாபெரும் இஸ்லாமிய அறிஞராகவும் உலகின் முன்னணி பன்னூல் ஆசிரியராகவும் 83 வரையிலான பல்கலைக்கழகங்கள் மற்றும் உயர்கல்வி நிறுவனங்களையும் அன்னார் நிறுவி இஸ்லாத்துக்காகவும் சன்மார்க்க உலக கல்விக்காகவும் மாபெரும் சேவையாற்றினார். அன்னாரின் நற்கருமங்களை வல்ல நாயன் ஏற்றுக் கொள்ள பிரார்த்திப்போம் என்றார்.

# வெளிநாடு அனுப்புவதாக பண மோசடி; ஒருவர் கைது

*ஹம்பாந்தோட்டை குறூப் நிருபர்*

வெளிநாடு அனுப்புவதாக கூறி இளைஞர், யுவதிகளிடம் பணத்தினை பெற்று தலைமறைவாகி இருந்த சந்தேக நபர் ஒருவரை வீரவிலை பொலிஸார் (23) கைது செய்துள்ளனர்.

சந்தேகநபர் 116 தடவை நீதிமன்றத்தினால் பிடியாணை பிறக்கிக்கப்பட்டவரென ஆரம்ப கட்ட விசாரணைகளின்போது தெரிய வந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். அநுராதபுரம் பிரதேசத்தை வசிப்பிடமாகக் கொண்ட அநுராதபுரம், கடவதை போன்ற பிரதேசங்களில் வெளிநாட்டுவேலை வாய்ப்பு முகவர்களிடம் சேவையாற்றிய நபர் ஒருவரே இவ்வாறு சந்தேகத்தில் கைது செய்யப்பட்டுள்ளார். பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

நீராடச்சென்ற ஐந்து இளைஞர்களில்

# நான்கு பேர் நீரில் அடிபட்டு மாயம்; ஒருவர் உயிருடன் மீட்பு

*மாத்தறை தினகரன் நிருபர்*

மாத்தறை, பிடபெத்தர பிரதேசத்தில் நில்வளா கங்கைக்கு நீராடச் சென்ற ஐந்து இளைஞர்கள் நீரில் இழுத்துச்செல்லப்பட்ட நிலையில் ஒரு இளைஞன் மாத்திரம் பிரதேசவாசிகளினால் கடும் சிரமத்திற்கு மத்தியில் காப்பாற்ற முடிந்துள்ளது. ஏனைய நால்வரும் காணாமல் போயுள்ளனர்.

காணாமல்போன நான்கு இளைஞர்களில் மூவரின் சடலங்களை (27) சனிக்கிழமை பின்னேரம் பிரதேசவாசிகள் கண்டெடுத்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இவர்கள் நால்வரும் அஹங்கம, முலடியன, போரதொட்ட, பிடபெத்தர பிரதேசங்களைச் சேர்ந்த 22, 23, 24 வயதினைக் கொண்ட இளைஞர்களாவர். மிதிகம டயர் தொழிற்சாலையில் சேவையாற்றும் 12 ஊழியர்கள் உல்லாசமாக பிடபெத்தர பிரதேசத்திற்குச் சென்றுள்ளனர். இவர்கள் மது அருந்திவிட்டே கங்கைக்கு நீராடச் சென்றுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

# அரச அலுவலகங்களில் தோட்ட பயிர்ச் செய்கை

*திறப்பனை தினகரன் நிருபர்*

கடந்த சில மாதங்களுக்கு முன்னர் உணவு நெருக்கடிக்கு தீர்வாக தோட்டம் அமைக்கும் வேலைத் திட்டங்கள் ஆரம்பித்து வைக்கப்பட்டன. இதன் கீழ் அரச அலுவலகங்களில் தோட்ட பயிர் உற்பத்தி பணியும் சிறப்பாக இடம் பெற்றிருந்தன.

அநுராதபுர மாவட்ட செயலாளர் திரு. ஜனக ஜயசுந்தர அரச அலுவலகங்களில் பயிர் செய்யப்பட்ட தோட்டங்களின் முன்னேற்றம் குறித்து ஆராய்ந்து பார்க்கும் கள விஜயம் ஒன்றை அண்மையில் மேற் கொண்டு அநுராதபுர மாவட்ட செயலகத்தின் ஊடாக செய்கை பண்ணப்பட்ட மரக்கறி தோட்டம் வெற்றிகரமாக முன்னெடுக்கப்பட்டு வருவதை நேரில் சென்று அவதானித்தார்.

மாவட்ட விவசாயப் பணிப்பாளர் திருமதி லலிதா தேனுவரவின் தொழில்நுட்ப ஆலோசனையின் அடிப்படையில் தோட்ட பயிர் உற்பத்தி நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு, முன்னேற்றம் அடைந்து வருகின்றன.

இவ்வளவு நெருக்கடியான காலகட்டத்திலும் மிகுந்த அக்கறையுடன் பயிர் செய்கை இடம் பெற்றிருந்தமை சிறப்புக்குரியது என பலராலும் பாராட்டப்பட்ட இந்தப் பயிர்ச் செய்கையால், நல்ல சுற்றுப்புறச் சூழல், அழகு உருவாடுவதோடு, குப்பைகளை முறையாக அகற்றுதல், தேவையற்ற பொருட்களை அகற்றுதல், காணிகளை அதிக பட்சமாக பயன்படுத்துதல், உச்ச பயனை பெற்றுக் கொள்ளுதல் போன்ற விடயங்களில் கவனம் செலுத்தப்பட்டிருந்தமை இங்கு குறிப்பிடத்தக்கது.

# கிழக்கு பகுதியிலிருந்து வெளிநாடு தப்பிச்செல்லமுயன்ற 44 பேர் சிக்கினர்

கிழக்கு கடற்பரப்பில் இருந்து கடல் மார்க்கமாக சட்டவிரோதமாக வெளிநாடு செல்லமுயன்ற 44 பேரை கடற்படையினர் தமது பொறுப்பில் எடுத்துள்ளனர்.திருகோணமலை மற்றும் மட்டக்களப்பு பகுதிகளில் நேற்று முன்தினம் (28) இரவு மேற்கொள்ளப்பட்ட விசேட சோதனை நடவடிக்கையின்போது இவர்கள் சிக்கியுள்ளனர்.

திருகோணமலைக்கு அப்பால் சந்தேகத்திற்கிடமாக பயணித்த மீன்பிடிக் படகொன்று, கடற்படையின் P 465 என்ற விரைவு படகினால் இடைமறிக்கப்பட்டதுடன், அதிலிருந்து சட்டவிரோதமாக வெளிநாடு செல்ல முயற்சித்ததாக சந்தேகிக்கப்படும் 29 பேர் கடற்படையினரால் பொறுப்பேற்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. கைது செய்யப்பட்டவர்களில் ஆட்கடத்தலில் ஈடுபட்டதாக குற்றம் சாட்டப்பட்ட 5 பேர் உட்பட 25 ஆண்களும், 18 வயதுக்கு மேற்பட்ட 2 பெண்கள் மற்றும் 18 வயதுக்குட்பட்ட 2 பேரும் அடங்குவர்.

அத்துடன், P 465 விரைவு படகின் மூலம் மேற்கொண்ட தொடர் சோதனையில் குறித்த மீன்பிடி படகிற்கு, கரையிலிருந்து நபர்களை ஏற்றிச் சென்றதாக சந்தேகிக்கப்படும் குச்சவெளியைச் சேர்ந்த இருவர் படகு ஒன்றுடன் கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இதேவேளை, அதே கடல் பகுதியில் சந்தேகத்திற்கிடமான வகையில் பயணித்த மற்றொரு இலங்கையைச் சேர்ந்த பல நாள் மீன்பிடிப்படகொன்றை, கடற்படையின் P 4443 என்ற விரைவு படகு மூலம் இடைமறித்து கடற்படையினர் சோதனையிட்டனர்.அதன்போது, வெளிநாடுகளுக்கு சட்டவிரோதமான முறையில் இடம்பெயர முயற்சித்ததாக சந்தேகிக்கப்படும் 18 வயதுக்கு மேற்பட்ட 5 ஆண்கள் கடற்படையினரின் பொறுப்பில் எடுக்கப்பட்டனர். அத்துடன், P 4443 விரைவு படகு மூலம் மேற்கொண்ட சோதனையில், லங்காபட்டுன வாழைத்தோட்டம் கடற்கரையில், சட்டவிரோதமான முறையில் வெளிநாடு செல்லும்நோக்கத்தில் நின்றிருந்ததாக சந்தேகிக்கப்படும் 18 வயதுக்கு மேற்பட்ட ஆண்கள் 10 பேர் கடற்படையினரால் கைதுசெய்யப்பட்டனர்.

### எரிபொருள் நிலையம் அருகே நிறுத்தப்பட்டிருந்த

# 13 மோட்டார் சைக்கிள்களை மோதிச் சென்ற சொகுசு வாகனம்

கற்பிட்டி தினகரன் விஷேட நிருபர்

கற்பிட்டி ஏத்தாளையிலுள்ள எரிபொருள் நிரப்பு நிலையத்தின் அருகில் எரிபொருள் பெறுவதற்காக வரிசையில் நின்ற மோட்டார் சைக்கிள்கள் மீது சொகுசு காரொன்று (27) மோதி விபத்துக்குள்ளானதில் 13 மோட்டார் சைக்கிள்கள் சிதறி சேதமடைந்துள்ளன.





எனினும் இந்த விபத்தில் உயிர்ச் சேதங்களோ அல்லது எவருக்கும் காயங்களோ ஏற்படவில்லையெனவும் கற்பிட்டி பொலிஸார் தெரிவித்தனர். பாலாவி பகுதியிலிருந்து கற்பிட்டியை நோக்கிப் பயணித்த சொகுசு கார் கட்டுப்பாட்டை இழந்தமையால் இந்த விபத்து ஏற்பட்டுள்ளதாக பொலிஸார் குறிப்பிட்டனர்.

இதனால் கற்பிட்டி ஏத்தாளை பகுதியிலுள்ள எரிபொருள் நிரப்பு நிலையம் ஒன்றில் பெற்றோல் பெறுவதற்காக இடது பக்கம் வரிசையில் நிறுத்தி வைக்கப்பட்ட 13 மோட்டார் சைக்கிள்கள் சேதமடைந்துள்ளதாகவும் பொலிஸார் கூறினர். அத்துடன், விபத்தை ஏற்படுத்திய சொகுசு காரின் முன் பக்கம் பகுதியளவில் சேதமடைந்துள்ளதாகவும் கற்பிட்டி பொலிஸார் குறிப்பிட்டனர்.

இந்த விபத்துக்கு காரணமான சாரதி பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார். கற்பிட்டி பொலிஸார் இந்த விபத்து சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## அறிவித்தல்

**கல்வி அமைச்சு, கிழக்கு மாகாணம்**

**வலயக்கல்விப் பணிப்பாளர் பதவிகளுக்கான விண்ணப்பம் கோரல்**

கிழக்கு மாகாணக் கல்வி அமைச்சின் கீழ் வெற்றிடம் நிலவுகின்ற கீழ் குறிப்பிட்டுள்ள 04 வலயங்களில் வலயக் கல்விப் பணிப்பாளர் பதவிக்கான தகைமைகளைப் பெற்ற இலங்கை கல்வி நிர்வாக சேவையின் தரம் 1ஐச் சேர்ந்த உத்தியோகத்தர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. (விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் இறுதித் திகதி 2022.09.12 ஆகும்)

| மாவட்டம் | வெற்றிடம் நிலவும் வலயங்கள் |
|---|---|
| மட்டக்களப்பு | கல்குடா |
| | மட்டக்களப்பு மத்தி |
| அம்பாறை | சம்மாந்துறை |
| | திருக்கோவில் |

மேலதிக விபரங்கள் மற்றும் மாதிரி விண்ணப்பப்படிவம் கிழக்கு மாகாண சபையின் **www.ep.gov.lk** எனும் இணையத்தளத்திற்கு பிரவேசித்து **Ministry of Education** பக்கத்திற்கு சென்று தரவிறக்கம் செய்து கொள்ள முடியும்.

**எச்.ஈ.எம்.டபிள்யு.ஜீ. திசாநாயக்க,**
**செயலாளர்,**
**கல்வி, விளையாட்டு, பண்பாட்டலுவல்கள், முன்பள்ளிக் கல்வி, தகவல் தொழில்நுட்பக்கல்வி, இளைஞர் விவகாரம், பனர்வாழ்வு மற்றும் மீள்குடியேற்ற அமைச்சு, கிழக்கு மாகாணம்.**
15.08.2022

**கல்வி அமைச்சு**
**(இசுருபாய வளவு)**

## சுத்திகரிப்புச் சேவைகளுக்காக சேவை வழங்குநரொருவரை தெரிவு செய்வதற்கான விலைமனு கோரல் – 2022/2023

**ஒப்பந்த இல.: ED/07/101/16/CF/2022/S.03**

1. 2022/2023ஆம் வருடங்களில் சுத்திகரிப்பு சேவைகள் மற்றும் குப்பை அகற்றும் சேவையை வழங்குவதற்காக தகுதியும் தகைமையுமுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை கல்வி அமைச்சு (இசுருபாய வளவு) செயலாளரின் சார்பாக அமைச்சு பெறுகைக் குழுத் தலைவர் இப்போது அழைக்கின்றார்.
2. உத்தேசிக்கப்பட்டுள்ள சேவை காலப்பகுதியானது ஏற்றுக்கொள்ளல் கடிதம் வழங்கப்படும் திகதியிலிருந்து ஒரு வருடமாகும்.
3. விலைக்கோரல்கள் தேசிய போட்டி ரீதியிலான விலைமனுக்கோரல் மூலம் நடாத்தப்படும்.
4. ஆர்வமுள்ள விலைமனுதாரர் விலைமனுக்கோரல் ஆவணத்தின் IIIஆம் பிரிவில் நிர்ணயிக்கப்பட்டுள்ள நிகரான தன்மையுடைய சேவைகளில் ஆகக் குறைந்தது 5 வருட கால அனுபவத்தைக் கொண்டிருத்தல் வேண்டும். மேலதிக தகவல்களை வேலை நாட்களில் மு.ப. 8.30 மணியிலிருந்து பி.ப. 3.30 மணி வரையும் பின்வரும் முகவரியில் அமைச்சின் பெறுகைப் பிரிவிலிருந்து (இசுருபாய வளவு) பெற்றுக் கொள்ளலாம்.
5. கல்வி அமைச்சின் 4ஆம் மாடியிலுள்ள சிறாப்பரிடம் (இசுருபாய வளவு) பெறுகைப் பிரிவில் ரொக்கப் பணத்தில் மீளளிக்கப்படாத கட்டணமாக 9,500.00 ரூபாவைச் செலுத்திய பின்னர், கல்வி அமைச்சின் பெறுகைப் பிரிவிலிருந்து விலைமனுக்கோரல் ஆவணத்தின் முழுமையான தொகுதியொன்றை பெற்றுக்கொள்ளலாம். விலைமனுக்கள் உரித்தான விலைமனுதாரர்களுக்கு 2022 ஆகஸ்ட் 30ஆம் திகதியிலிருந்து 2022 செப்டெம்பர் 19ஆம் திகதி வரை வழங்கப்படும்.
6. விலைமனுக்கள் இரட்டைக் கடிதவுறை முறைமை சகிதம் தேசிய போட்டி ரீதியிலான விலைமனுக்கோரல் மூலம் நடாத்தப்படும்.
7. 2022 செப்டெம்பர் 07ஆம் திகதியன்று மு.ப. 10.00 மணிக்கு கல்வி அமைச்சின் (இசுருபாய வளவு) 5ஆம் மாடி, பெறுகைப் பிரிவில் மேற்குறிப்பிட்டுள்ள பெறுகை தொடர்பான விலைமனு முன்னோடிக் கூட்டமொன்று நடைபெறும்.
8. விலைமனுக்கள் 2022 செப்டெம்பர் 20ஆம் திகதியன்று மு.ப. 11.00 மணி அல்லது அதற்கு முன்னராக பின்வரும் முகவரிக்கு ஒப்படைக்கப்படல் வேண்டும்.
9. முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை தலைவர், அமைச்சு பெறுகைக் குழு, கல்வி அமைச்சு (இசுருபாய வளவு), ''இசுருபாய'', பத்தரமுல்ல என முகவரியிடப்பட்டு இந்த அமைச்சின் பெறுகைப் பிரிவு, 5ஆம் மாடியில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் 2022 செப்டெம்பர் 20ஆம் திகதியன்று பி.ப. 2.00 மணி அல்லது அதற்கு முன்னராக கிடைக்கும் வகையில் உள்ளிடல் வேண்டும். தாமதமான விலைமனுக்கள் திறக்கப்படாமலேயே நிராகரிக்கப்படும். விலைமனுக்கள் அவைகளை மூடிய பின்னர், சமுகமளித்திருக்கும் விலைமனுதாரர்களின் முன்னிலையில் உடன் திறக்கப்படும்.

**செயலாளர்,**
**கல்வி அமைச்சு,**
**'இசுருபாய', பத்தரமுல்ல.**

# சியபத பினான்ஸ் பீஎல்சீ

**2011 ஆம் ஆண்டின் நிதி வணிகச் சட்ட இல.42 இன் பிரிவு 29 (5) இன் அடிப்படையில் நிதிநிலை அறிக்கைகளை வெளியிடுதல்**

**ஜூன் 30இல் முடிவடைந்த காலப்பகுதிக்கான முக்கிய நிதியியல் தரவுகள்** ரூபா ஆயிரங்களில்

| | நடைமுறை காலம் | முன்னைய காலம் |
|---|---|---|
| | 01.01.2022 இலிருந்து 30.06.2022 வரை (கணக்காய்வு செய்யப்படவில்லை) | 01.01.2021 இலிருந்து 30.06.2021 வரை (கணக்காய்வு செய்யப்படவில்லை) |
| வட்டி வருமானம் | 3,613,084 | 3,369,643 |
| வட்டிச் செலவு | (2,039,618) | (1,414,652) |
| தேறிய வட்டி வருமானம் | 1,573,466 | 1,954,991 |
| ஏனைய வருமானம் | 708,557 | 593,666 |
| வர்த்தகப்படுத்தல் நடவடிக்கைகளிலிருந்தான இலாபம்/(நட்டம்) | - | - |
| தொழிற்பாட்டு செலவினங்கள் (பெறுமதி இழப்பு நீங்கலாக) | (993,178) | (861,979) |
| பெறுமதி இழப்பு | (248,703) | (856,632) |
| வரிக்கு முன்னரான இலாபம் | 1,040,142 | 830,046 |
| வரிகள் | (516,417) | (293,402) |
| வரிக்குப் பின்னரான இலாபம் | 523,725 | 536,644 |

**ஜூன் 30இல் உள்ளவாறு முக்கிய நிதியியல் தரவுகள்** ரூபா ஆயிரங்களில்

| | 30-ஜூன்-2022 (கணக்காய்வு செய்யப்படவில்லை) | 30-ஜூன்-2021 (கணக்காய்வு செய்யப்படவில்லை) |
|---|---|---|
| **சொத்துக்கள்** | | |
| காசு மற்றும் வங்கி மீதிகள் | 152,371 | 252,745 |
| தொடர்பான தரப்பினரிடமிருந்து வர வேண்டியவை | 3,152 | 4,811 |
| கடன்கள் (தொடர்பான தரப்பினரிடமிருந்து வரவேண்டியவை நீங்கலாக) | 41,783,396 | 38,727,613 |
| பங்குரிமை மூலதனத்திலுள்ள முதலீடுகள் | 56 | 56 |
| சொத்துக்கள், பொறிகள் மற்றும் சாதனங்கள் | 2,368,581 | 1,558,642 |
| ஏனைய சொத்துக்கள் | 1,155,318 | 1,154,777 |
| மொத்தச் சொத்துக்கள் | 45,462,874 | 41,698,644 |
| **பொறுப்புக்கள்** | | |
| வங்கிகளுக்கு செலுத்தவேண்டியவை | 6,280,963 | 7,613,082 |
| தொடர்பான தரப்பினருக்கு செலுத்தவேண்டியவை | 4,862,374 | 3,269,933 |
| வாடிக்கையாளர்களிடமிருந்தான வைப்புக்கள் | 17,478,445 | 16,854,532 |
| ஏனைய கடன்பாடுகள் | 7,640,336 | 6,184,147 |
| ஏனைய பொறுப்புக்கள் | 2,903,000 | 2,111,279 |
| மொத்தப் பொறுப்புக்கள் | 39,165,118 | 36,032,973 |
| **பங்குரிமை மூலதனம்** | | |
| கூறப்பட்ட மூலதனம் | 2,674,439 | 2,346,095 |
| நியதி ஒதுக்கு நிதியம் | 240,000 | 185,000 |
| பிடித்துவைக்கப்பட்ட வருவாய்கள் | 3,258,813 | 3,010,072 |
| ஏனைய ஒதுக்குகள் | 124,504 | 124,504 |
| மொத்த பங்குரிமை மூலதனம் | 6,297,756 | 5,665,671 |
| மொத்தப் பொறுப்புக்கள் மற்றும் உரிமைப் பங்கு | 45,462,874 | 41,698,644 |
| பங்கொன்றிற்கான தேறிய சொத்துப் பெறுமதி (ரூ.) | 64.81 | 61.60 |

**தெரிந்தெடுக்கப்பட்ட முக்கிய செயலாற்ற குறிகாட்டிகள்**

| விடயம் | 30-ஜூன்-2022 தேவையானது | 30-ஜூன்-2022 உண்மை | 30-ஜூன்-2021 தேவையானது | 30-ஜூன்-2021 உண்மை |
|---|---|---|---|---|
| **ஒழுங்குமுறைப்படுத்தல் மூலதனப் போதுமை (%)** | | | | |
| அடுக்கு 1 மூலதன போதுமை விகிதம் | 7.00% | 11.92% | 6.50% | 9.33% |
| மொத்த மூலதன போதுமை விகிதம் | 11.00% | 17.71% | 10.50% | 13.54% |
| வைப்பு பொறுப்புக்களுக்கான மூலதன நிதிய விகிதம் | 10.00% | 58.59% | 10.00% | 43.64% |
| **கடன் சொத்துப்பட்டியலின் தரம் (%)*** | | | | |
| மொத்தச் செயற்படாக் கடன்களின் விகிதம் | | 22.07% | | 16.64% |
| தேறிய செயற்படாக் கடன்களின் விகிதம் | | 8.67% | | 4.76% |
| மைய மூலதன விகிதத்திற்கான தேறிய செயற்படாக் கடன்களின் விகிதம் | | 61.05% | | 39.99% |
| ஒதுக்கு பாதுகாப்பு விகிதம் | | 60.71% | | 53.63% |
| **இலாபத்தன்மை (%)** | | | | |
| தேறிய வட்டி இலாபம் | | 6.98% | | 9.45% |
| சொத்துக்கள் மீதான வருவாய் | | 4.61% | | 4.01% |
| பங்குரிமை மூலதனம் மீதான வருவாய் | | 16.77% | | 19.10% |
| வருமானத்திற்கான செலவு விகிதம் | | 43.52% | | 33.82% |
| **திரவத்தன்மை (%)** | | | | |
| தேவையான திரவச் சொத்துகளுக்கான கிடைக்கத்தக்க திரவச் சொத்து (குறைந்தபட்சம் 100%) | | 232.07% | | 152.42% |
| வெளிவாரி நிதியத்திற்கான திரவச் சொத்துக்கள் | | 14.21% | | 5.64% |
| **விஞ்ஞாபனத் தகவல்கள்** | | | | |
| கிளைகளின் எண்ணிக்கை | | 40 | | 40 |
| வெளிவாரி கொடுகடன் தரமிடல் (Fitch தரப்படுத்தல்) | | A(lka)(RWN) | | A(lka) |
| கடந்த 6 மாதங்களில் விதிக்கப்பட்ட ஒழுங்குமுறைப்படுத்தல் அபராதங்கள் | | | | |
| தொகை (ரூ' மில்லியன்) | | - | | - |

*கடன் சொத்துப்பட்டியலின் தரம்

நடப்பு காலத்திற்கான விகிதங்கள், 2020ஆம் ஆண்டின் நிதியியல் வணிகச் சட்ட வழிகாட்டி இல. 01 இன் படி கணக்கிடப்பட்டது, அதே சமயம் முந்தைய காலத்திற்கான ஒப்பீட்டு விகிதங்கள், 2006ஆம் ஆண்டின் நிதி நிறுவனங்களின் (மோசமான மற்றும் சந்தேகத்திற்குரிய கடன்களுக்கான ஒதுக்கீடு) வழிகாட்டி இல. 03 இன் படி கணக்கிடப்பட்டது. எனவே, முந்தைய காலகட்டத்திற்கான ஒப்பீட்டு விகிதங்களை தற்போதைய காலகட்டத்திற்கு வழங்கப்பட்ட விகிதங்களுடன் ஒப்பிட முடியாது.

2022 மற்றும் 2021ம் ஆண்டு காலப்பகுதியில் வைப்பிடுதல், கடன் மற்றும் கடன் வழங்குவதில் நிறுவனத்திற்கு எந்தவிதமான ஒழுங்குமுறை அபராதம் அல்லது கட்டுப்பாடுகளும் இல்லை.

### உறுதிப்படுத்தல்:

கீழே கையொப்பமிட்ட சியபத பினான்ஸ் பீஎல்சீயின் முகாமைப் பணிப்பாளர், நிதித்தலைவர் மற்றும் இணக்கத்தலைவர் ஆகிய நாங்கள் கூட்டாக பின்வருவனவற்றை உறுதிப்படுத்துகின்றோம்:

(அ) மேற்குறிப்பிட்ட கூற்றுக்கள் இலங்கை மத்திய வங்கியினால் பரிந்துரைக்கப்பட்ட படிவம் மற்றும் வரைவிலக்கணங்களுடன் இணங்கிச் செல்லும் விதத்தில் தயாரிக்கப்பட்டுள்ளன;

(ஆ) இக்கூற்றுக்களில் அடங்கியுள்ள தகவல்கள் கணக்காய்வு செய்யப்பட்டவை எனக் குறிப்பிடப்பட்டிருந்தாலொழிய, சியபத பினான்ஸ் பீஎல்சீயின் கணக்காய்வு செய்யப்படாத நிதியியல் கூற்றுக்களிலிருந்து பிரித்தெடுக்கப்பட்டவையாகும்.

(ஒப்பம்)
ஆனந்த செனவிரத்ன
முகாமைப் பணிப்பாளர்
26 ஜூலை 2022

(ஒப்பம்)
ருவன் வண்ணிஆரச்சி
நிதித்தலைவர்
26 ஜூலை 2022

(ஒப்பம்)
மஹிகா ராஜகருணா
இணக்கத்தலைவர்
26 ஜூலை 2022

JEBZ

சியபத டவர், இல. 111, டட்லி சேனாநாயக்க மாவத்தை, கொழும்பு 8.
தொலைபேசி: 0117 605 605 பெக்ஸ்: 0117 605 606 இமெயில்: info@siyapatha.lk
கம்பனிப் பதிவு இல. PB 917 PQ
கூட்டிணைக்கப்பட்ட திகதி: 3 மார்ச் 2005

பிச் தரப்படுத்தல் : A(lka) (RWN)

2011ஆம் ஆண்டின் 42ஆம் இலக்க நிதி வர்த்தகச் சட்டத்திற்கமைய இலங்கை மத்திய வங்கியின் நாணயச் சபையினால் அங்கீகரிக்கப்பட்டது

සියපත ෆිනෑන්ස්
சியபத பினான்ஸ்
Siyapatha Finance
( Finance Company of Sampath Bank Group )

# கிழக்கின் குரல்



# வட்டமடு விவசாயிகளின் பிரச்சினைகள்; உடனடித் தீர்வுக்கு அரசாங்க அதிபருடன் பேச்சு

(அக்கரைப்பற்று வடக்கு தினகரன் நிருபர்)



வட்டமடு விவசாயிகளின் பிரச்சினைக்கு தீர்வு காணும் பொருட்டு அம்பாறை மாவட்ட அரசாங்க அதிபருடன் பேச்சுவார்த்தை நடத்தப்பட்டது. பாராளுமன்ற உறுப்பினர் சட்டத்தரணி எச்.எம்.எம். ஹரீஸின் முயற்சியால், இப்பபேச்சுவார்த்தை நடத்தப்பட்டது

அம்பாறை அரசாங்க அதிபர் காரியாலயத்தில் நேற்று (29) இடம்பெற்ற இப்பேச்சுவார்த்தையில் கரங்காவட்டை விவசாயிகளும் பங்குபற்றினர்.

இதன்போது, பாராளுமன்ற உறுப்பினர் சட்டத்தரணி எச்.எம். எம். ஹரீஸ், வட்டமடு விவசாயிகளின் பிரச்சினைகளை ஆழமாக முன்வைத்ததுடன் இதற்கான தீர்வை அவசரமாக எடுக்கவேண்டிய அவசியத்தையும் வலியுறுத்தினார். சமகாலத்தில் உள்ள நெருக்கடி நிலையில் விவசாயிகள் படும் கஷ்டநிலை, உரப்பிரச்சினைகள் உள்ளிட்டவை குறித்தும் இதில், கலந்துரையாடப்பட்டது.வட்டமடு விவசாயிகளின் பிரச்சினைகளை உடனடியாக தீர்ப்பதில் தனக்கு உடன்பாடு உள்ளதாகவும், இதற்கான நடவடிக்கைகளை சம்பந்தப்பட்டவர்களுடன் கலந்துரையாடி துரிதகதியில் எடுப்பதாகவும் அரசாங்க அதிபர் இதன்போது உறுதியளித்தார்.

அத்துடன் இணைந்தாக மாவட்டத்தின் பல்வேறு பிரச்சினைகள் குறித்து ஆராயப்பட்ட இந்நிகழ்வில், அம்பாறை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் வி. ஜெகதீசன், பாராளுமன்ற உறுப்பினரின் பிரத்யோக செயலாளர் நௌபர் ஏ பாவா, பாராளுமன்ற உறுப்பினரின் ஆலோசகர் ஏ.ஜீ. எம். அன்வர் நௌசாத் உட்பட பலரும் கலந்து கொண்டனர்.

# மாவட்ட ரீதியில் முதலாமிடம்

(தோப்பூர் குறூப் நிருபர்)



க.பொ.த உயர்தரப் பரீட்சை பெறுபேற்றின் அடிப்படையில் தி/மூ/கிளிவெட்டி மகா வித்தியாலயத்தில் கல்விகற்ற மாணவி அருள்ராசா.சனுஜா, கலைப்பிரிவில் மாவட்ட ரீதியில் முதலாவது இடத்தைப் பெற்று மூதூர் வலயத்திற்கும், பாடசாலைக்கும் பாரதிபுரம் கிராமத்திற்கும் பெருமை சேர்த்துள்ளார்.

மிகவும் பின்தங்கிய வளம் குறைந்த பாடசாலையில், முதல் முறையாக மாவட்ட ரீதியில் இவர், முதலிடம் பெற்றதையிட்டு அனைவரும் வாழ்த்து தெரிவித்துள்ளனர். இப்பாடசாலையின் புதிய அதிபராக பா.கோணேஸ்வரராசா நியமிக்கப்பட்டதன் பின்னர் கல்வி முன்னேற்றம் அடைந்துள்ளதாக பிரதேசவாசிகள் தெரிவிக்கின்றனர்.

தமிழ், புவியியல் மற்றும் கர்நாடக சங்கீதம் ஆகிய பாடங்களில் இம்மாணவி A சித்தி பெற்றதோடு 2.2186 Z புள்ளியையும்பெற்றிருந்தார். இவர் அருள்ராசா, அருள் ராசா கௌரி தம்பதிகளின் அன்புப் புதல்வி என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

# விபத்தில் இளம் குடும்பஸ்தர் பலி

(பெரியபோரதீவு தினகரன் நிருபர்)

மட்டக்களப்பு வெல்லாவெளி பொலிஸ் பிரிவிலுள்ள அம்பிளாந்துறை வெல்லாவெளி பிரதான வீதியில் ஞாயிற்றுக்கிழமை(28) இரவு இடம்பெற்ற விபத்தில், இளம் குடும்பஸ்தர் ஒருவர் பலியானதாக வெல்லாவெளி பொலிஸார் தெரிவித்தனர்.

இந்நபர் பாலையடிவட்டையிலிருந்து சென்றபோது, அவர் செலுத்திச் சென்ற மோட்டார் சைக்கிள் வேகக்கட்டுப்பாட்டை இழந்து வயல் வெளியில் தடம்புரண்டது.இதில் ஸ்தலத்திலே இவர், உயிரிழந்ததாக பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது. சம்பவத்தில் மூன்று பிள்ளைகளின் தந்தையான திருச்செல்வம் திவிகரன் என்பவரே பலியானார்.

# பாடசாலைகளில் காலை ஒன்று கூடலில் மயங்கி விழும் மாணவர்கள் வீதம் அதிகரிப்பு

(பாண்டிருப்பு தினகரன் நிருபர்)

கிழக்கு மாகாணத்திலுள்ள கிராமப்புற பாடசாலைகளில், காலை ஒன்று கூடலின்போது மாணவர்கள் மயங்கி விழும் சந்தர்ப்பங்கள் அதிகரித்துள்ளதாக கல்விச்சமூகம் கவலை தெரிவித்துள்ளது.

தற்போது நாட்டில் நிலவும் பொருளாதார நெருக்கடிகளால் வறுமைக் குடும்ப மாணவர்கள் பாதிக்கப்பட்டுள்ளமை இதிலிருந்து தெரிய வந்துள்ளதாகவும் இவர்கள் தெரிவிக்கின்றனர்.

சாதாரண கூலித்தொழில் செய்து குடும்பசீவியத்தை நகர்த்தி வரும் குடும்பங்கள் ஒரு வேளை உணவை உண்பதற்கு கூட வழியின்றி கஷ்டப்படுகின்றனர். இவ்வாறான குடும்பத்து மாணவர்கள், காலைச்சாப்பாடின்றி பாடசாலைக்கு வருகின்றனர்.இவர்களில் அதிகமானோரே மயங்கி விழுகின்றனர்.

இதனால், கற்றல், கற்பித்தல் செயற்பாடுகளை காலம் தாழ்த்தியே ஆரம்பிக்கவேண்டிய துர்ப்பாக்கிய நிலையும் ஏற்படுவதாக தெரிவிக்கப்படுகிறது.

போஷாக்கு குறைபாட்டில் இலங்கை ஆறாவது இடத்தில் உள்ளதாக புள்ளி விபரங்கள் கூறுகின்றன. குறிப்பாக பாடசாலை மாணவர்களே போஷாக்கு இன்றி பாதிக்கப்பட்டுள்ளனர். நாட்டின் பொருளாதார நெருக்கடி காரணமாக ஆரோக்கியமான எதிர்கால தலைமுறையை கட்டியெழுப்புவதில் பாரிய சிக்கல் ஏற்பட்டுள்ளதாக புத்திஜீவிகள் சுட்டிக்காட்டுகின்றனர்.

கிழக்கு மாகாணத்தில் பின்தங்கிய பல கிராமப்புற பாடசாலைகளில் மாணவர்களின் வரவிலும் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது. அத்துடன் வறுமை காரணமாக இடைவிலகலும் அதிகரித்துச் செல்வதாக சமூக ஆர்வலர்கள் கவலை தெரிவிக்கின்றனர். அரசாங்கம் அனைத்து பாடசாலை மாணவர்களுக்கும் போஷாக்கான உணவுகளை இலவசமாக வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என பொது மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

# கிழக்கு மாகாண சுகாதார சேவைகள் புதிய பணிப்பாளராக கொஸ்டா நியமனம்

(கிண்ணியா தினகரன் நிருபர்)




கிழக்கு மாகாண சுகாதார சேவைகள் திணைக்களத்தின் புதிய பணிப்பாளராக வைத்திய கலாநிதி டி.ஜி.எம். கொஸ்டா நியமிக்கப்பட்டுள்ளார்.

இவருக்கான நியமனக் கடிதத்தை கிழக்கு மாகாண சுகாதார அமைச்சின் செயலாளர் திருமதி. ஜே.ஜே.முரளிதரன், அமைச்சில் வைத்து புதன் கிழமை (24) உத்தியோகபூர்வமாக வழங்கினார்.

கிழக்கு மாகாண முன்னாள் சுகாதார சேவைகள் பணிப்பாளராக கடமையாற்றி, கொழும்பு தேசிய கண் வைத்தியசாலையின் புதிய பணிப்பாளராக நியமனம் பெற்று இடமாற்றம் செல்லும் வைத்திய கலாநிதி ஏ.ஆர்.எம். தௌபீக்குக்கான விடுவித்தல் கடிதத்தையும் இதன்போது மாகாண சுகாதார அமைச்சின் செயலாளர் திருமதி. ஜே.ஜே.முரளிதரன் வழங்கி வைத்தார்.

# இறக்காமம் வில்லுக்குளத்தை ஆக்கிரமிக்கும் செயற்பாடுகளை நிறுத்துமாறு கோரிக்கை

(ஹிங்குறாணை குறூப் நிருபர்)



இறக்காமம் வில்லுக்குளம் வற்றியுள்ளதால் அதனையண்டிய பிரதேசம் ஆக்கிரமிக்கப்படுவதாக விசனம் தெரிவிக்கப்படுகிறது. இக்குளத்தின் நீர்வற்றிய பிரதேசங்களை, அயலிலுள்ள காணிச் சொந்தக்காரர்கள், குடியிருப்பாளர்கள் ஆகியோர், எந்தவித அனுமதியும் பெறாமல் குளத்தை சட்டவிரோதமாக ஆக்கிரமித்து வருகின்றனர். இதனால், குளத்தின் பரப்பளவு நாளாந்தம் குறைந்து வருவதாகவும் பிரதேசவாசிகள் தெரிவிக்கின்றனர்.

இக்குளத்தை நம்பி 06 நன்னீர் மீனவ சங்கங்களை சேர்ந்த சுமார் 1500 க்கு மேற்பட்ட குடும்பங்கள் நாளாந்த ஜீவனோபாயத்தை நடத்தி வருகின்றன. இக்குளம் சிலரால் அத்துமீறி ஆக்கிரமிக்கப்படுவதால், மீனவர்களின் வாழ்க்கையும் குளத்துநீரை நம்பிமேற்கொள்ளப்படும் விவசாயமும் கேள்விக்குள்ளாகிறது.

இந்தச் சட்டவிரோத செயற்பாட்டை உடன் நிறுத்த உரிய அதிகாரிகள் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என மீனவ சங்கத்தினரும் பிரதேசவாசிகளும் கோரிக்கை விடுத்துள்ளனர்.

# ஆஸி. செல்ல முயன்றோர் கைது

(தோப்பூர் குறூப் நிருபர்)

சட்டவிரோதமாக அவுஸ்திரேலியா செல்ல முற்பட்ட 14 பேரை பொலிஸார் கைது செய்துள்ளனர். ஒட்டமாவடி, வாழைச்சேனை மற்றும் ஈச்சிலம்பற்று ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்தவர்களே இதன்போது கைதாகினர்.

திருகோணமலை ஈச்சிலம்பற்று கடற்பரப்பில் வைத்து கைதான இவர்கள் நேற்று (29) மூதூர் நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டனர்.இவர்களை எதிர்வரும் திங்கட்கிழமை (05) வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார்.

# ஹெரோயினுடன் ஒருவர் கைது

(பாலமுனை தினகரன் நிருபர்)

அக்கரைப்பற்று வெள்ளப்பாதுகாப்பு வீதியில் ஹேரோயினுடன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்

அக்கரைப்பற்று பொலிஸாருக்கு கிடைத்த இரகசிய தகவலின்படி இந்நபர் கைதானார்.

குறித்த இப்பிரதேசத்திற்குச் சென்ற பொலிஸார் அந்நபரைக் கைது செய்ததுடன், அவரிடமிருந்து 35 மில்லிகிராம் ஹேரோயினையும் கைப்பற்றினர். இதேவேளை, அக்கரைப்பற்றில் மற்றுமோர் இடத்தில் 45 மில்லி கிராம் ஹேரோயின் வைத்திருந்த நபர் ஒருவரும் பொலிஸாரால் கைது செய்யப்பட்டார்.

# காரிகை கலை இலக்கியக் கழகத்தின் முஹர்ரம் புதுவருட விழா கொண்டாட்டம்





(புதிய காத்தான்குடி தினகரன் நிருபர்)

